179

த்ரவ்ய ஸங்க்ரஹம்

மூலமும் உரையும்

ஸ்ரீ பாலவர்ணி.

Q-3
N45
59857

வர்ணீஜீ க்ரந்த மாலா—மலர் 2.

ஓம் நம: ஸித்தேப்ய:

ஸித்தாந்தசக்ரவர்த்தியாகிய

ஸ்ரீமந் நேமிசந்த்ர ஆசார்யர்

ப்ராக்ருதமொழியில் செய்தருளிய

த்ரவ்ய ஸங்க்ரஹம்

காதா மூலமும்

ஸ்ரீமான், ஸ்ரீபாலவர்ணீ "வித்யாபூஷணம்"

அவர்கள் எழுதிய தமிழுரையும்

சென்னை

தாம்ஸன் கம்பெனியாரவர்களால்

தமது 'மினர்வா' அச்சுக்கூடத்தில்

பதிப்பித்து வெளியிடப்பட்டன.

காலிகோ புக். 1-10.] 1945 [ராப்பர் புக். 1-2.

Q3
N45

அறிவிப்பு

1. ஜைநமத நூல்களை வெளியிடுதற்கு 'வர்ணீஜீ க்ரந்த மாலா' ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகிறது.

2. இக் கிரந்தமாலையின் உரிமை அனைத்தும் ஸ்ரீபாலவர்ணீஜீயவரைச் சார்ந்தது.

3. இந்தக் கிரந்தமாலைக்காகச் சேரும் பொருளை வர்ணீஜீ கிரந்தமாலையின் பெயரில் அரசாங்கத்தில் ரிஜிஸ்தர் செய்து பணத்தைப் பேங்கில் வைத்துக்கொண்டு, பதிப்புச்செலவுக்கு உபயோகிக்கலாகும்.

4. இந்தக் கிரந்தமாலைக்கு 101—0—0 ரூபாய் உதவி புரிபவர் ஸம்ரக்ஷகர் என்றும், 51—0—0 ரூபாய் உதவி புரிபவர் போஷகர் என்றும், 25—0—0 ரூபாய் உதவி புரிபவர் ஸஹாயகர் என்றும் கருதப்படுவர்.

5. ரூ. 101—0—0 உதவி செய்தோருக்கு இந்தக் கிரந்தமாலையில் வெளியிடப்படும் நூல்கள் ஒவ்வொன்றிலும் 3 புஸ்தகம் இனாமாகவும், 51—0—0 ரூபாய் உதவி செய்தோருக்கு 2 புஸ்தகம் இனாமாகவும், 25-0-0 ரூபாய் உதவி செய்தோருக்கு ஒரு புஸ்தகம் இனாமாகவும் அளிக்கப்படும். 10 ரூபாய் உதவி செய்தவர்களுக்கு ஒரு புஸ்தகம் பாதிவிலைக்குக் கொடுக்கப்படும்.



पञ्च परमेष्ठिः

பஞ்ச பரமேஷ்டி



SREEPALAVARNI, the Editor of Varniji Granthamala.

वर्णीजी ग्रन्थमाला पुष्प २.

ओं नमः सिध्देभ्यः

श्रीमन् नेमिचन्द्र सिद्धान्त चक्रवर्ति विरचित

द्रव्य संग्रह

द्राविड (तामिल) टीका सहित

सम्पादकः—

श्रीमान् पं. श्रीपालवर्णीजी

"विद्याभूषण"

प्रकाशकः

मालिक—थांपसन् कंपनि,

३३, ब्राड्वे मद्रास.

१९४५

ஸ்வஸ்திஸ்ரீ, ஶ்ரவணபெளிகுளம் மடாதிபதிகளாகிய
ஸ்ரீ சாருகீர்த்திபண்டிதாசார்யவர்ய
மஹாஸ்வாமியவர்களின் ஆசீர்வாத பத்ரம்

ಶ್ರೀ ಶ್ರೀಪಾಲವರ್ಣಿಯವರಿಗೆ ಆಶೀರ್ವಾದಗಳು.

ಉತ್ತಮವಾದ ಜೈನಗ್ರಂಥಗಳಿಗೆ ಸರಳವಾದ ತಮಿಳುಭಾಷೆಯಲ್ಲಿ ವ್ಯಾಖ್ಯಾನಗಳನ್ನು ಬರೆದು ಪ್ರಿಂಟ್‌ಮಾಡಿಸಿ ಪ್ರಚಾರಮಾಡುವುದು ಈಕಾಲದಲ್ಲಿ ಅತ್ಯಾವಶ್ಯಕವಾಗಿರುತ್ತದೆ. ನೀವು ಈಕಷ್ಟಕಾಲದಲ್ಲಿಯೂಕೂಡ ಈ ರೀತಿಯಾಗಿ ಸಾಹಿತ್ಯೋದ್ಧಾರದಕಾರ್ಯದಲ್ಲಿ ಕೈಹಾಕಿರುವುದು ಬಹಳ ಸಾಹಸದ ಕಾರ್ಯವೇ ಆಗಿರುತ್ತೆಂಬುದರಲ್ಲಿ ಸಂದೇಹವಿಲ್ಲ. ಇದರಿಂದ ತಮಿಳು ದೇಶದ ಜೈನರಿಗೆ ಬಹಳ ಉಪಕಾರವಾಗುವು ದೆಂದು ನಾವು ನಂಬುತ್ತೇವೆ. ಹಿಗೆಯೇ ಉತ್ತಮವಾದ ಪ್ರಾಚೀನ ಗ್ರಂಥಗಳನ್ನು ತಮಿಳು ವ್ಯಾಖ್ಯಾನದೊಡನೆ ಪ್ರಿಂಟ್ ಮಾಡಿಸಿ ಪ್ರಚಾರಪಡಿಸುವುದು ನಿಮ್ಮ ಕೀರ್ತಿ ಮತ್ತು ಪುಣ್ಯಕ್ಕೆ ಕಾರಣವಾಗಿರೋಣದರಿಂದ ಈಕಾರ್ಯವನ್ನು ನೆರವೇರಿಸುವುದಕ್ಕೆ ನಿಮಗೆ ಸರ್ವವಿಧವಾದ ಅನುಕೂಲತೆಗಳನ್ನೂ ಶ್ರೀ ಪರಮಾತ್ಮನು ದಯಪಾಲಿಸಲಿ. ಸದಾ ಧರ್ಮಪ್ರೇಮ ವಿರಲಿ. ಇತಿ ಭದ್ರಂ ಭೂಯಾತ್.

[உத்தமமான ஜைந சமய நூல்களுக்குச் சுலபமாகத் தமிழ்உரை எழுதி அச்சிட்டு வெளியிடுதல் இக்காலத்தில் அதிக அவசியமாயிருக்கிறது. நீங்கள் இந்தக் கஷ்டகாலத்திலும் ஸாஹித்யப்பிரசாரகார்யத்தில் (நூல்களை வெளியிடுங் கார்யத்தில்) பிரவேசித்திருப்பது மிக்க துணிவானகார்யம் என்பதில் சந்தேஹம் இல்லை. இவ் வெளியீடுகளினால் தமிழ்த்தேசத்து ஜைநர்களுக்கு மிக்க பயன் உண்டாகும் என்று நம்புகிறோம். இம்மாதிரியே உத்தமமான பண்டையநூல்களுக்கு உரை எழுதி வெளியிடுவது உங்கட்குக்கீர்த்தியும் புண்ணியமும் உண்டாதற்குக் காரணமாய் இருப்பதனால் இக்கார்யத்தை (இடையூறின்றிப்) பூர்த்தி செய்தற்கு (வேண்டிய) எல்லா அனுகூலமும் ஸ்ரீ பரமாத்மன் இன்னருள் புரிவாராக. ஸதா தர்ம வாத்ஸல்யம் இருக்கட்டும்.]

ಶ್ರೀಮಠ. ಶ್ರವಣಬೆಳ್ಗೊಳ
ತಾ॥ 6-3-1945.

वर्धतां जिनशासनम्
ಶ್ರೀ ಸ್ವಾಮಿಗಳವರು

प्रस्तावना

आत्मसिद्धिके लिये लोक विभागको जानने की परम आवश्यकता है। लोककी व्याख्या करते हुए ग्रन्थकारोंने "षड् द्रव्य भरितो लोकः" ऐसी व्याख्या की है। अर्थात् छह द्रव्योंका अस्तित्व जहाँ तक पाया जाता है वहींतकके प्रदेशको लोक कहना चाहिये, वैसे तो वैशेषिकादि दर्शनकारोंने द्रव्यविभाग करते हुए लोकमें नवद्रव्योंका अस्तित्व स्वीकार किया है, परन्तु जैन दर्शनकार छह द्रव्योमें ही सर्व चराचर समस्त पदार्थोंका अंतर्भाव करते हुए सुंदर समन्वय किया है, छह द्रव्य ही यथार्थ रूपसे पाये जाते हैं तो अधिक द्रव्योंकी संख्या बढाना व्यर्थ ही है।

लोकके परिज्ञानमें द्रव्योंका स्वरूप समझना जरूरी है, छह द्रव्योंको छोड कर लोक कोई चीज नहीं ठहरता है, जीव, पुद्गल, धर्म, अधर्म, काल व आकाश इन छह द्रव्ययोंका समूह ही लोक कहलाता है। इनके स्वरूपको समझना इसलिये आवश्यक है कि इन द्रव्योंका जीवात्माके साथ क्या संबंधहै, जीवात्माके लिये ये कहां तक हेय है, कहांतक उपादेय है, इन सब प्रश्नों की निवृत्ति इस अध्ययनसे हो सकती है। इस छोटेसे ग्रंथमें आचार्य नेमिचन्द्र सिंद्धान्त चक्रवर्तीने छह द्रव्योंका विवेचन सुंदर रूपसे करते हुए जीवके उपयोगी अनुपयोगोंका भी विवेचन किया है, अध्यापक गण बालकोंको विषयको हृदयंगम कराते हुए गाथावोंका ज्ञान करावें तो इस एकही ग्रंथसे जैन धर्मके खास सिद्धान्त का बोध हो सकता है।

आचार्य नेमिचन्द्र षट्खंडागम दिग्विनयी थे इसलिये वे सिद्धान्तचक्रवर्ति कहलाते थे। वे अभय नंदिके शिष्य थे एवं अपने समय के प्रकांड विद्वान् आचार्य थे, वीरमार्तंड चामुंडराय उनको अपना परमाराध्य गुरु मानता था, एवं उन्ही के अनुरोधसे आचार्यने गोम्मटसार की रचना की थी, आपने बि. ११ वीं शताद्वीकी पूर्व भागमें इस धरातलको अलंकृत किया था। ऐसे महान् अचार्यके द्वारा निर्मित यह ग्रंथ संक्षिप्त होनेपर भी विषयकी दृष्टिसे महान् है। जैनदर्शनमें प्रवेश करने-केलिये तत्वार्थ सूत्र जितना महत्व पूर्ण ग्रंथ है उतना ही महत्व पूर्ण ग्रंथ यह द्रव्य-संग्रह है। जैन सिद्धान्तका अच्छा परिज्ञान इसग्रंथसे हो सकता है।

आजकलके विज्ञानवादीभी छह द्रव्योंके अस्तित्वको स्वीकार करने लगे है। जीव व पुद्गल दो द्रव्य तो सर्वजन सम्मत हो चुके हैं। घटने बढने रूप क्रियासे जीव, मूर्तस्वरूपसे पुद्गल अवगत हो चुके है, धर्म व अधर्मद्रव्यके कार्य भी अनुभवमें आते हैं, जीवपुद्गलोंके गमन व स्थितिमें सहायक होना इन द्रव्योंका कार्य है, आज रेडियो, तार बेतारकेतार आदि यन्त्र सामयिग्रोंके द्वारा शब्द प्रेषण व रोधन क्रिया चालू है. उनमें अंतर्निहितहोकर जो कार्य करनेवाले द्रव्य है उन्हींको धर्म व अधर्मके नामसे पहिचानना चाहिये, सर्व द्रव्योंको अवकाश प्रदान करने वाले अकाश सर्व व्यापी है। पदार्थोंके परिणमन क्रियामें सहायक कालकी स्थिति का भी निराकरण नहीं किया जा सकता है, इस प्रकार काल व कर्मके बीचमें स्थित इस जीवात्माके स्वरूपको, संसार मुक्त दशामें व्यवहार व निश्चय नयके द्वारा समझकर अन्य द्रव्योंसे उसे भिन्न करनेमें ही आत्माकायथार्थ कल्याण हो सकता है, ऐसे विश्वकल्याणकारी ग्रंथोंका प्रत्येक भारतीय पाश्चात्य भाषामें अनुवादहोकर प्रकाशितहोनेकी आवश्यकताहै।

तामिलप्रान्तमें ग्रंथ प्रकाशनकी ओर जैन समाजका लक्ष्य विशेष नहीं था, परंतु हर्ष है कि **श्री. पं. विद्याभूषण श्रीपालवर्णीने** इस साहित्योद्धारके कार्यमें अपनी विद्वत्ता व श्रमको अर्पण किया है, यह अत्यन्त स्तुत्य उपक्रम है। उन्हींके सत्प्रयत्नसे यह ग्रंथ तामिल अनुवादकेसाथ प्रकाशमें आ रहा है। यह ग्रंथ केवल विद्यार्थियोंको ही नहीं स्वाध्याय प्रेमियोंको भी उपयोगी सिद्ध होगा।

VARDHAMAN PARSHWANATH SHASTRI.
(Vidyavachaspati Nyaya Kavya Tirtha)
EDITOR : JAIN BODHAK,
Hon. Secretary.
M. D. Examination Board Bombay.
Kunthusagara Granthamala etc.

Sholapur,
1—4—945.

FOREWORD.

From the psychological point of view, if we study the natural tendency of the various living beings and the motive behind the screen of their activities, it is obviously seen that they hanker day and night to derive happiness. But, generally we find that they do fail in their efforts and if at all they gain something it is after all very momentary like a dream. Such consequences created great problems especially to the humanity on account of their being gifted with the majestic powers of thinking and cultivating their minds. Various schools of thoughts—Occidental and Oriental—have left no stone unturned to get at the solution. After all, many a system of philosophy had to confess that the whole Universe is automatically governed by some inevitable Laws of Nature which are based upon most scientific and mathematical grounds. The marvellous art and architecture are sufficient proof and evidence for the systematic and regular organization of nature and so the differences, distinctions and gradations of sufferings and enjoyments in the various kingdoms of living beings must be on a lawful and reasonable ground and it may be due to the consequences of their action; for, there is no Effect without Cause and every action must have a re-action. This idea leads us to the concept of transmigration. The present life which we undergo is nothing but a momentary tide and the ocean-like life is Beyond and Behind. Coming to the conclusion, almost all our Oriental Thinkers were generally prepared to sacrifice this momentary life to a great extent for the betterment

of the future life, but particularly Jaina Seers and Thinkers found absolutely no pleasure in the transcient and shadowy wealth and luxury and were bold and courageous not only to renounce the same but went into hard austerities, penance and mortification, after the realization of the Great Eternal Truth. They have minutely and microscopically studied the mysterious Laws of Nature and with their unparalleled command of language they have put them in a very appealing and penetrating style in all Oriental Languages (*viz.*) Sanskrit, Prakrit, Magadhi, Tamil, Kanarese etc. Their monumental works themselves are sufficient to convince the literary and the philosophical world about their marvellous and unreachable capacity. The author of the present work given to the public was one of the choicest gems of the Oriental culture and civilization in general and a wonderful genius of Jaina School of Thought in particular. Of course, as to the date of our revered author—Nemichandra Siddhanta Chakravarty—it is still a matter of controversy. But the great minister Chamundaroya of King Rajamalla of Ganga Dynasty whose name is found very popular in the inscriptions of Sravanbelgola in Mysore State, had a great reverence, regard and respect for his extra-ordinary intellect and high morals and it is presumed that on account of his unrivalled literary powers, there was conferred upon him the title of Siddhanta Chakravarty.

The present work is a small one but it is an epitome of the Science of Human Culture. It is full of advanced philosophical and metaphysical thoughts treating the

substances existing in and composing the Universe, and explaining the root cause of our mundane existence and its sufferings, as well as to get rid of the same and thereby achieve ever lasting natural bliss. This work will be very much helpful to the beginners who may be interested in the advanced study of our author's work "Gomatasara" and the other works such as Dhawalsastra, Panchastikaya, Samayasar and the like, which are full of rationalistic views about Life and Karma theory of Jaina School which is without any exaggeration, we may say, a unique and unrivalled contribution to the intellectual and scientific world.

We earnestly request mankind to take up the study of "Jainism" with an impartial attitude. We believe that they will be very much benefitted by its sublime doctrines.

We offer our thanks to the Learned Brahmachari Vidyabhushana **Sripala Varneeji** for his able translation in Tamil language to facilitate the students to acquire the fundamental knowledge of Jainism. But for the scarcity of paper and present war-time conditions, more detailed exposition could have been expected from the Learned Varneeji. We shall be failing in our duty if we do not thank Messrs. Rikabdoss Chaganraj, prominent and leading merchants of Jaina community in Madras who so generously and philanthropically paid the cost of 100 books for free distribution.

408, Mint Street,
Madras,
15th April 1945

RISHABHDAS. B. JAIN.
Honorary Secretary.
Mahavira Jain Institute.

முன்னுரை

த்ரவ்யஸங்க்ரஹம் என்னும் நூல் தத்த்வார்த்த ஸூத்ரத்தைப் போல ஜைநஸமய நூல்களுள் பிரஸித்தி பெற்றது. இந்நூல் எல்லாப்பாடசாலைகளிலும் பாட புத்தமாக வைத்து இளமாணுக்கர்கட்குப் போதிக்கப் பட்டு வருகிறது. இதனை 10-வயதுள்ள இளமாணுக் கர்களும் சுலபமாக மனப்பாடம் செய்துகொள் கின்றனர்.

இந்நூலை இயற்றியவர் ஸ்ரீ நேமிசந்த்ர ஆசார்யர். இவர் பிறந்த இடமும் இவருடைய தாய் தந்தையர் இன்னவர் என்பதும் தெரியவில்லை. இவர் இல்லறத்தில் எத்தனை ஆண்டுகள் இருந்தார், துறவறத்தில் எத்தனை ஆண்டுகள் இருந்தார் என்பதும் விளங்கவில்லை. ஆயினும், இவர் உலகப்ரஸித்தமாகிய *பாஹுபலிஸ்வாமியின் பிம்பத்தை ஜீர்ணோத்தாரம் செய்து †பிரதிஷ்டை செய்வித்தவராகிய சாமுண்டராஜனுடைய குருவாய் இருந்தார் என்பது பாஹுபலி சரித்திரத்தினுல் விளங்கு கின்றது. இவர் கோமடஸாரம், லப்திஸாரம், க்ஷபண ஸாரம், த்ரிலோகஸாரம் முதலான அநேக ஸித்தாந்த சாஸ்த்ரங்களைச் செய்துள்ளார்.

---

*இந்தப் பிம்பமானது ஶ்ரவணபெளிகுளத்து விந்திய கிரியின் மேல் உளது.

† கல்கி (ஶக) ஸம்வத் 600 (வி.ஸம்வத் 735) சைத்ர சுக்ல பஞ்சமி ரவிவாரத்தன்று ஶ்ரவணபெளிகுளத்தில் பிரதிஷ்டை செய்வித்தார்.

இந்நூல், மாலவதேசத்துத் தாராநகராதிபதியாகிய போஜராஜனுக்கு உட்பட்ட ஆஶ்ரமநகரத்து ஸ்ரீபால மண்டலேஶ்வரனுடைய கோஷாத்யக்ஷனு யிருந்த பவ்ய புண்டரீகனுகிய ஸோமன்என்னும் ராஜஶ்ரேஷ்டிக்காக இயற்றப்பட்டதென்று, பதினுரும் நூற்ருண்டின் இடைக் காலத்தில் இருந்த பிரம்மதேவர்என்பவர் எழுதிய ஸம்ஸ்கிருத உரையினுல் தெரிகின்றது.

இதனுள், ஜீவன் புத்கலம் தர்மம் அதர்மம் ஆகாஶம் காலம் என்னும் ஆறு த்ரவ்யங்களேயும் அவைகளின் பேதங்களேயும் உட்பிரிவுகளேயும் ஸங்க்ரஹித்து, "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்றபடி, சுருக்கமாக விளக்கமாகக் கூறியிருப்பதனுல், இதனே 'த்ரவ்ய ஸங்க்ரஹம்' என்பர். ஆயின், ஜைநஸித்தாந்த ஸங்கேத வசனங்களே (குறியீடுகளே) அறியாதவர், 'த்ரவ்ய ஸங்க்ரஹம்' என்ருல் 'பொருள் சேர்த்தல்' என்னும் அர்த்தம் கொள்வர் என்று ஐயுற்றுப்போலும் கன்னடவுரையாளராகிய A. சாந்திராஜ ஶாஸ்திரியார் அவர்கள் "ஜைந ஸித்தாந்த ஸங்க்ரஹம்" என்று மறு பெயரும் அமைத்துள்ளார்.

ஆசார்யர் இந்நூலே இயற்றுங்கால் முதன்முதல் 26 காதைகள் அடங்கிய "லகு த்ரவ்ய ஸங்க்ரஹம்" என்பதை இயற்றி, பின்னர், தத்த்வத்தினே விஶேஷமாக அறிவிக்க விரும்பி மற்றும் 32 காதைகளே இயற்றி அனேத்தையும் ஒருங்கமைத்து, "ப்ருஹத்த்ரவ்ய ஸங்க்ரஹம்" என்று பெயர் இட்டுள்ளார். அதுவே இப்போது "த்ரவ்ய ஸங்க்ரஹம்" என்னும் பெயருடன் வழங்கப்பட்டு வருகிறது.

பிரம்மதேவர் இயற்றிய ஸம்ஸ்கிருதவுரையுடன் கூடிய இந்நூல் இன்றும் "ப்ருஹத் த்ரவ்ய ஸங்க்ரஹம்" என்ற பெயருடன் வழங்கி வருகிறது.

இந்நூல் மூன்று அதிகாரமாக வகுக்கப்பட்டுளது.

அவற்றுள் 1-முதல் 27-ஆம் காதைவரைக்கும் முதல்அதிகாரம்; 28-முதல் 38-ஆம் காதைவரைக்கும் இரண்டாம் அதிகாரம்; 39-முதல் 58-ஆம் காதை வரைக்கும் மூன்றும் அதிகாரம்.

முதல்அதிகாரத்தில் — 14-வது காதைவரைக்கும் ஜீவத்ரவ்ய வர்ணனையும், 15-22-ஆங் காதைவரைக்கும் அஜீவத்ரவ்யவர்ணனையும், 23-27-ஆங்காதை வரைக்கும் பஞ்சாஸ்திகாயவர்ணனையும் உள்ளன.

இரண்டாம் அதிகாரத்தில்–(28-38-வது காதைவரைக்கும்) ஸப்த தத்த்வம் நவபதார்த்தம் இவைகளின் வர்ணனை.

மூன்றும் அதிகாரத்தில்:—மோக்ஷமார்க்கம், ஸம்யக் தர்ஶனம், ஸம்யக்ஜ்ஞானம், ஸம்யக் சாரித்ரம், அரஹந்தர் ஸித்தர் ஆசார்யர் உபாத்யாயர் ஸாது ஆகிய பஞ்ச பரமேஷ்டிஸ்வரூபம், த்யானம் செய்யும் முறை ஆகிய இவைகளின் வர்ணனை உள்ளன.

யான் மேல்சித்தாமூர் மடத்தில் தங்கி மாணாக்கர்கட்கு ஜைநமத தத்த்வங்களைப் போதித்து வந்த காலத்தில் த்ரவ்யஸங்க்ரஹம் என்னும் இந்நூலுக்குத் தமிழ் உரை எழுதி அதன் மூலமாகப் போதித்துவந்தேன். அப்போது இந்நூலைக் கண்ட சிலர் 'இதனை அச்சிட்டு வெளிப்படுத்தின் நம் தமிழ்நாட்டிற்கு மிக்க பயன் உண்டாகும்' என்றனர். அதனை யறிந்து பண்டித் நாபிராஜ் ஜைன் விஶாரத அவர்கள் 'இந்தக் கையெழுத்துப் பிரதியைக் கொடுங்கள். யாங்கள் அச்சிட்டு வெளிப்படுத்துகிறோம்' என்று பன்முறை கேட்டார். அப்போது யானும்

அப்படியே அச்சிடலாம் என்று ஸம்மதித்தேன். இப்படியிருக்கையில், ஜெங்கம் பூண்டி **ஸ்ரீதர நைனர்** என்பவர் கொரக்கோட்டை **ஜெயந்திர ராவ்** என்பவரைக்கொண்டு கன்னட வுரையைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து அதனை அச்சிடவேண்டுமென்று கருதி அவ்விஷயத்தை என்னிடம் தெரிவித்தபோது, 'யானும் இந்நூலுக்குத் தமிழ்உரை எழுதி வைத்திருக்கின்றேன்' என்றேன், அவர்கள் உடனே, இந்நூல் வெளி வருவதற்கு ரூ. 100/- பொருளுதவி செய்தார்கள். பின்னர், **ஸ்ரீமான் ஸேட் ரிகபதாஸ் சகன்ராஜ்** அவர்களும் ரூ. 100/-பொருளுதவி புரிந்தார்கள். இவர்களுடைய அன்பும் ஶாஸ்த்ரதானத்தில் இவர்களுக்குள்ள ஶ்ரத்தையும் அளவிடற்பாலன அல்ல. இத்தகைய தாநஶீலர்களின் பெருஞ்செயல் யாவராலும் பாராட்டற்பாலது.

இந்நூல் அச்சிடுதற்குத் தேவையான காகிதம் வாங்கிக்கொடுத்தும் மிக்க அன்போடு நல்ல பதிப்பாக அச்சிட்டுத் தம் பெயராலேயே இந்நூலை வெளியிட்டும் உதவிய ஸ்ரீமத் **ஸ்ரீநிவாஸராகவாசார்யர்** B.A., B.L. அவர்கட்கும், இந்நூலை அச்சிடும்போது அப்போதைக்கப் போது மிகவும் ஊக்கத்துடன் அச்சுத்தாள்களைப் (ப்ரூப்களை) பார்த்துதவிய திருவாளர் **வே. வேங்கட ராஜுலு** ரெட்டியார் (ஜூனியர் தமிழ் லெக்சரர், மதராஸ் யூனிவர்ஸிடி) அவர்கட்கும் இன்னும் இந்நூல் வெளி வருவதற்கு வேண்டிய உதவி புரிந்த அன்பர்கட்கும் நன்றி பாராட்டுத லுடையேன்.

யான் என் சிற்றறிவிற்குத் தோன்றியவரையில் இந்நூலுக்குத் தமிழ்உரை எழுதி அச்சிட்டுள்ளேன். இது நம் தமிழ்நாட்டில் உள்ளவர்கட்கு உபயோகமாகும் என்று நம்புகிறேன். அறிஞர்கள் குற்றத்தை நீக்கி, குணத்தைக் கொள்ளுமாறு கோருகின்றேன்.

ஸ்ரீபாலவர்ணீ.

பொருளடக்கம்

காதா			பக்கம்
2	ஜீவத்ரவ்யத்தின் தன்மைகள்	...	4
3	ஜீவ ஸ்வரூபம்	...	7
4	உபயோகமயத்தின் வர்ணனை	...	10
5	ஜ்ஞானோபயோகத்தின் பிரிவு	...	12
6	ஜீவனுடைய லக்ஷணம்	...	16
7	அமூர்த்தியின் லக்ஷணம்	...	17
8	கர்த்ருத்வ வர்ணனை	...	18
9	போக்த்ருத்வ வர்ணனை	...	22
10	ஸ்வதேஹபரிமாண லக்ஷணம்	...	23
11	ஸம்ஸாரத்வ வர்ணனை	...	28
12	ஜீவன்களின் விசேஷம் பதினான்கு ஜீவஸமாஸம்	...	30
13	மார்க்கணாஸ்தான குணஸ்தானங்கள்	...	35
14	ஸித்தத்வ லக்ஷணமும் ஊர்த்வ கதி லக்ஷணமும்	...	45
	இயற்கையான ஊர்த்வகதி லக்ஷணம்	...	47
15	அஜீவதத்த்வ வர்ணனை	...	50
16	புத்கலத்ரவ்யத்தின் பர்யாயங்கள்	...	52
17	தர்மத்ரவ்யத்தின் வர்ணனை	...	53
18	அதர்மத்ரவ்யத்தின் வர்ணனை	...	55
19	ஆகாஶத்ரவ்யத்தின் வர்ணனை	...	56
20	லோகாகாஶத்தின் லக்ஷணம்	...	57
21	காலத்ரவ்யத்தின் லக்ஷணம்	...	59
22	நிஶ்சயகாலத்தின் அளவு	...	62
23	த்ரவ்யங்களின் பேதம்	...	63
24	அஸ்தியினதும் காயத்தினதும் லக்ஷணம்	...	64

காதா		பக்கம்
25	த்ரவ்யங்களின் ப்ரதேஸம்	... 65
27	ப்ரதேஸத்தின் லக்ஷணம்	... 67
28	ஸப்த தத்த்வம் நவபதார்த்தம்	... 73
29	ஆஸ்ரவம்	... 74
30	பாவாஸ்ரவத்தின் பேதம்	... 75
31	த்ரவ்யாஸ்ரவம்	... 79
32	பந்தம்	... 80
33	பந்தத்தின் வகை	... 81
34	ஸம்வரம்	... 84
35	பாவஸம்வரத்தின் வகை	... 85
36	நிர்ஜ்ஜரா	... 87
37	மோக்ஷம்	... 89
38	புண்யம் பாபம் இன்னவை என்பது	... 90
39	வ்யவஹாரநிச்சய மோக்ஷமார்க்கம்	... 93
40	ரத்னத்ரயம் ஆத்மாவைத் தவிர வேறு பொருள்களில் இராது என்பது	... 95
41	ஸம்யக்தர்ஸனம்	... 96
42	ஸம்யக்ஜ்ஞானம்	... 97
43	தர்ஸநஉபயோகம்	... 98
44	உபயோகம் இன்னருக்கு இவ்வகையினல் உண்டாகுமென்பது	... 99
45	வ்யவஹார சாரித்ரம்	... 101
46	நிச்சய சாரித்ரம்	... 102
47	த்யானம்செய்தல் அவஸ்யம் என்பது	... 103
48	த்யானம் செய்யும் முறை	... 104
49	ஜபம் (த்யானம்)செய்யும் மந்த்ரம்	... 106
50	அருஹத் பரமேஷ்டி	... 109

51 ஸித்தபரமேஷ்டி ... 110
52 ஆசார்ய பரமேஷ்டி ... 111
53 உபாத்யாய பரமேஷ்டி ... 112
54 ஸாது பரமேஷ்டி ... 114
55 நிச்சயத்யானம் ... 116
56 பாமத்யான லக்ஷணம் ... 117
57 தவம் ஶ்ருதம் விரதம் இவை த்யானத்திற்குக் காரணமாகும் என்பது ... 119
58 முடிவுரை ... 121

பிழை திருத்தம்

பக்.	வரி.	பிழை.	திருத்தம்.
8	11	ஆயுஷ்யம	ஆயுஷ்யம்
11	9	அக்ஷர்	அசக்ஷர்
22	1	தரவ்ய	த்ரவ்ய
35	11	த்ரீந்தரிய	த்ரிந்த்ரிய
42	20	அத: ப்ரவ்ருத்தி	அத: ப்ரவ்ருத்த
43	1		
54	11	தரவ்யத்தையும்	த்ரவ்யத்தையும்
58	1	ஸ்ரூபம்	ஸ்வரூபம்
59	2	யஶா	யஶோ
64	1	காயத்தினும்	காயத்தினதும்
76	27	இவைகளைத	இவைகளைத்
77	26	மனததை	மனத்தை
92	7	காரணம	காரணம்
96	25	யஸிநு	யஶஸிநு
113	11	யதிவர்யா	யதிவர்யர்
114	26	தஶெஷு	தஶெஷு
116	7	பமுலம்	பலமும்
124	28	மார்க்வணை	மார்க்கணை



श्री गोमटेश्वरस्वामीजी ஸ்ரீ கோமடேஶ்வரஸ்வாமி.

ஸ்ரீசாமுண்டராயன் பிரதிஷ்டை செய்வித்த

பாஹுபலி ஸ்வாமி பிம்பம்.

இது ஸ்ரீவணபெளிகுளம் விந்திய கிரியின்மேல் உளது.



श्री महावीरजी ஸ்ரீ மஹாவீரர்

இவர் ஜீவாஜீவத்ரவ்யங்களைப் போதித்தவர்.

ஶ்ரீ:

द्रव्यसंग्रहः

த்ரவ்ய ஸங்க்ரஹம்

அதிகாரம் 1

கடவுள்வணக்கம்

கடவுள்வணக்கத்தை மங்களாசரணம் என்பர். மங்களாசரணத்தை நூல் செய்தற்கு ஆரம்பிக்கும்போது செய்தல் வேண்டுமென்பது நூலாசிரியர்களின் பரம்பரை வழக்கம். அம் மங்களாசரணத்தைச் செய்வதனால் உண்டாகும் பயன் நான்கு வகை. அவை—

नास्तिकत्वपरीहारः शिष्टाचारप्रपालनम् ।
पुण्यावाप्तिश्चनिर्विघ्नः शास्त्रादौ तेन संस्तुतिः ॥

1. நாஸ்திகத்வபரீஹார:—ஸ்வாமி, ஆத்மா, பாபம், புண்யம், இறப்பு, பிறப்பு முதலானவற்றை இல்லையென்று கருதும் நாஸ்திகர்களின் எண்ணத்தினை நீக்குதல்.

2. ஶிஷ்டாசாரப்ரபாலனம்:—பரம்பரையாகப் பெரியோர்களுக்கு (முன்னோர்களுக்கு)ச் சிறியோர் (பின்னவர்) வணங்கவேண்டும் என்னும் முறையைப் பரிபாலித்தல்.

3. புண்யாவாப்தி:—மனம், வாக்கு, காயம் ஆகிய இவைகளை ஒருங்குகூட்டிப் பகவானை வணங்குவதனால் நல்வினை உண்டாதல்.

4. நிர்விக்ன(பரிஸமாப்தி):—இயற்றத் தொடங்கிய நூல் இடையூறு இன்றிப் பூர்த்தியாதல்.

1. *जीवमजीवं दव्वं जिणवरवसहेण जेण णिद्दिट्ठं ।
देविंदविंदवंदं वंदे तं सव्वदा सिरसा ॥ १ ॥

ஜீவமஜீவம் தவ்வம் ஜிணவரவஸஹேண ஜேண ணித்திட்டம் ।
தேவிம்தவிம்தவம்தம் வம்தே தம் ஸவ்வதா ஸிரஸா ॥ க ॥

(பதவுரை.) जेण ஜேண - எந்த, जिणवरवसहेण ஜிணவரவஸஹேண - ஜிநருக்குள் உயர்ந்தவராகிய வ்ருஷப ஸ்வாமியான ஆதிபகவானால், जीवमजीवं दव्वं ஜீவமஜீவம் தவ்வம் - ஜீவத்ரவ்யமும் அஜீவத்ரவ்யமும், णिद्दिट्ठं ணித்திட்டம் - கூறப்பட்டனவோ, तं தம் - அப்படிப்பட்டவரும், देविंदविंदवंदं தேவிம்தவிம்தவம்தம் - தேவேந்த்ரர்கூட்டங்களால் (நூறு இந்த்ரர்களால்) வந்திக்கப்பட்டவருமாகிய ஆதிபகவானை, सव्वदा ஸவ்வதா - எப்போதும், सिरसा ஸிரஸா - ஶிரசினால், वंदे வம்தே - நமஸ்கரிக்கின்றேன்.

கருத்துரை:—ஜீவத்ரவ்யத்தினையும் அஜீவத்ரவ்யத்தினையும் அறிவித்தவரும் நூறுஇந்த்ரர்களால் வந்திக்கப்பட்டவரும் ஆகிய ஆதிபகவானை யான் வணங்குகின்றேன்.

'ஜிணவரவஸஹேண' என்னுந் தொடரினால், அஸம்யத ஸம்யக்த்ருஷ்டிகள்முதலான ஏகதேஶ ஜிநருக்குள் உயர்ந்தவரான கணதரர்களுக்கு முக்யராகிய, வ்ருஷபதேவர் முதல் வர்த்தமானர்வரையில் உள்ள இருபத்துநான்கு

---

* जीवमजीवं द्रव्यं जिनवरवृषभेण येन निर्दिष्टम् ।
देवेन्द्रवृन्दवन्द्यं वन्दे तं सर्वदा शिरसा ॥

ஜீவமஜீவம் த்ரவ்யம் ஜிநவரவ்ருஷபேண யேந நிர்திஷ்டம் ।
தேவேந்த்ரவ்ருந்தவந்த்யம் வந்தே தம் ஸர்வதா ஶிரஸா ॥

தீர்த்தங்கரர்கள் என்பது பெறப்படும். அதனல் இக் காதையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களுக்கும் நமஸ்காரம் செய்யப்பட்டுளது என்பது அறிக.

ஜீவத்ரவ்யம்—உயிருள்ள பொருள்.

அஜீவத்ரவ்யம்—உயிரில்லாத பொருள்.

ஜிநர்—அவிரதஸம்யக்த்ருஷ்டியாகிற நான்காங்குணஸ்தானம்முதல் பன்னிரண்டாங்குணஸ்தானமாகிற க்ஷீண-கஷாயகுணஸ்தானம்வரைக்கும் வர்த்திக்கின்றவர்களுக்கு ஜிநபதவியை அடையுந் தன்மை யிருத்தலால் அத் தன்மையினைக்குறித்து அவர்களை 'ஜிநர்' என்று வழங்குவர்.

பதின்மூன்றாங்குணஸ்தானமாகிற ஸயோககேவலி யென்னுங் குணஸ்தானத்தில் வர்த்திக்கின்றவர்கள் ஜிநத்-தன்மையினை யடைந்தவர்கள் ஆதலால் அவர்களையும் ஜிநர் என்பர். வ்ருஷபஸ்வாமி அந்தப் பதின்மூன்றாங் குணஸ்தானத்தில் இருப்பவர் ஆதலால் அவரை ஜிநருக்குள் உயர்ந்தவராகிய வ்ருஷபஸ்வாமி யென்று கூறினர்.

*भवणालयचालीसा विंतरदेवाण होंति बत्तीसा ।
कप्पामरचउवीसा चंदो सूरो णरो तिरिओ ॥

*நூறு இந்த்ரர்கள் :—பவணேந்த்ரர் 40, வ்யந்தரேந்த்ரர் 32, கல்பேந்த்ரர்கள் 24, ஜ்யோதிஷ்கேந்த்ரர் (ஸூர்யன் சந்த்ரன்) 2, நரேந்த்ரன் (சக்ரவர்த்தி) 1, மிருகேந்த்ரன் (சிங்கம்) 1, ஆக 100. (1)

ஜீவத்ரவ்யத்தன்மைகள்

2. *जीवो उवओगमओ अमुत्ति कत्ता सदेहपरिमाणो ।
भोत्ता संसारत्थो सिद्धो सो विस्ससोड्ढगई ॥ २ ॥

𑌜𑍀𑌵𑍋 𑌉𑌵𑌓𑌗𑌮𑌓 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 𑌕𑌤𑍍𑌤𑌾 𑌸𑌦𑍇𑌹𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑍋 ।
𑌭𑍋𑌤𑍍𑌤𑌾 𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑍍𑌥𑍋 𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌸𑍋 𑌵𑌿𑌸𑍍𑌸𑌸𑍋𑌡𑍍𑌢𑌗𑌈 ॥ ௨ ॥

(ப - ரை.) जीवो 𑌜𑍀𑌵𑍋 - த்ரவ்யப்ராணன் பாவப்ராணன் ஆகிய இவைகளால் ஜீவித்தல், उवओगमओ 𑌉𑌵𑌓𑌗𑌮𑌓 - ஜ்ஞானோபயோகம் தர்ஶனோபயோகம் ஆகிய இவையிருத்தல், अमुत्ति 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 - உருவின்மை, कत्ता 𑌕𑌤𑍍𑌤𑌾 - நல்வினை தீவினைகட்குக் கர்த்தா, सदेह परिमाणो 𑌸𑌦𑍇𑌹𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑍋 - தான் ஸ்வீகரித்த (அடைந்த) உடலின் அளவில் இருத்தல், भोत्ता 𑌭𑍋𑌤𑍍𑌤𑌾 - நல்வினை தீவினைகளின் பயனை யனுபவித்தல், संसारत्थो 𑌸𑌂𑌸𑌾𑌰𑌤𑍍𑌥𑍋 - நாற்கதிச் சுழற்சியுருவமான ஸம்ஸாரத்திலிருத்தல், सिद्धो 𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 - ஸமஸ்தகர்மங்களின் நாசத்தினால் உண்டாகும் ஸித்தாவஸ்தை, विस्ससा 𑌵𑌿𑌸𑍍𑌸𑌸𑌾-இயற்கையாக, उड्ढगई 𑌉𑌡𑍍𑌢𑌗𑌈- மேல்நோக்கிச் செல்லுந் தன்மை ஆகிய இவைகளையுடைய, सो 𑌸𑍋 - அது ஜீவத்ரவ்யமாகும்.

---

* जीव उपयोगमयः अमूर्तिः कर्त्ता स्वदेहपरिमाणः ।
भोक्ता संसारस्थः सिद्धः सः विस्रसोर्ध्वगतिः ॥

𑌜𑍀𑌵 𑌉𑌪𑌯𑍋𑌗𑌮𑌯𑌃 𑌅𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌕𑌰𑍍𑌤𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌃 । 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍍𑌥𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑌃 𑌵𑌿𑌸𑍍𑌰𑌸𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌤𑌿𑌃 ॥

கருத்துரை :—த்ரவ்யப்ராணன் பாவப்ராணன் ஆகிய இவற்றால் ஜீவித்தல், ஜ்ஞாநோபயோகம் தர்ஸநோபயோகம் ஆகிய இவையிருத்தல், வர்ணம் சுவை கந்தம் ஸ்பர்ஸம் ஆகிய இவை இன்மையினால் உருவமற்றுப்பொறிகளுக்குத் தோன்றாமலிருத்தல், நல்வினை தீவினைகளைப் பந்தித்தற்குஉரிய செயலை யுடையதாதல், தன் வினை-வசத்தால் அடையப்பட்ட உடலின் அளவில் இருத்தல், நல்வினை தீவினைகளின் பயனை யனுபவித்தல், கர்மவசத்தினால் ஸம்ஸாரத்தில் வர்த்தித்தல், வினைகள் அனைத்தும் நீங்கி ஆத்மா தன் இயல்பாக இருத்தலாகிய ஸித்தாவஸ்தை யிருத்தல், இயற்கையாக முக்தியாகிய வீட்டினை யுடைய மேல்நோக்கிச் செல்லுந் தன்மை யிருத்தல் ஆகிய ஒன்பதுஇயல்பும் ஜீவனிடத்தில் இருக்கும்.

த்ரவ்யப்ராணன்—மெய், வாய், கண், மூக்கு, செவி, காயஸக்தி,வசனஸக்தி, மனஸ்ஸக்தி, ஸ்வாஸித்தல், ஆயுள் ஆகிய இவை.

பாவப்ராணன்—சைதன்யம் (அறிவு).

உபயோகம்—(பொருளை அறிய அறிவை உபயோகித்தல்.) சைதன்யத்துடன் ஸம்பந்தப்பட்ட பரிணாமம்.

ஸம்ஸாரம்—நாரகர், திர்யக், மனிதர், தேவர் ஆகிய பிறவிகளாகப் பிறத்தல், அப் பிறவிகளிலிருந்து இறத்தல் (நாற்கதிச்சுழற்சி யுருவம்).

நல்வினை—புண்யகர்மம்.

தீவினை—பாபகர்மம்.

'ஜீவன் இல்லை' என்று கூறும் சார்வாகமதத்தினரின் அஜ்ஞானத்தை நீக்குதற்காக **ஜீவோ** என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் நிர்க்குணமுள்ளது (குணமில்லாதது)' என்று கூறும் நையாயிகமதத்தினரின் அஜ்ஞானத்தைப் போக்கடித்தற்காக உவஓகமஓ என்னும் பதம் கூறப்பட்டது.

'ப்ருத்வீ, அப்பு, தேஜஸ், வாயு என்னும் நான்கு பூதங்களின் சேர்க்கையினுல் உண்டானதே ஜீவன்' என்று கூறும் சார்வாகமதத்தினரின் அஜ்ஞானத்தினை விலக்குதற்காக அமுத்தி என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் நல்வினை தீவினைகட்குக் கர்த்தா அல்லன்' என்று அறியும் ஸாங்கியமதத்தினரின் அறிவை நீக்குதற்காகக் கத்தா என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் ஸர்வவ்யாபி' என்று கூறும் ஸாங்கிய நையாயிக வேதாந்த மதத்தினரின் அஜ்ஞானத்தை நீக்குதற்காக ஸதேஹபரிமாணே என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் நல்வினை தீவினைகளின் பயனை அனுபவிப்பதில்லை' என்று அறியும் ஸாங்கிய பௌத்த மதத்தினரின் அறிவை நீக்குதற்காக, போத்தா என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் ஸதாகாலமும் ஶுத்தமானது; கர்மப்பற்று இல்லாதது' என்று அறியும் ஸாங்கிய ஸதாஶிவ மதத்தினரின் அறிவை நீக்குதற்காக ஸம்ஸாரத்தோ என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் எக்காலத்திலும் முக்தி யடைவதில்லை' என்று கூறும் கர்மமீமாம்ஸகர் சார்வாகமதத்தினர் ஆகிய இவர்களின் அஜ்ஞானத்தை நீக்குதற்காக ஸித்தோ என்னும் பதம் கூறப்பட்டது.

'ஜீவன் முக்தியான இடத்திலேயே இருக்கும்' என்று அறியும் மண்டலிகமதத்தினரின் அறிவை நீக்குதற்காக, உட்டகா என்னும் பதம் கூறப்பட்டது. (2)

ஜீவஸ்வரூபம்

3. *तिक्काले चदुपाणा इंदियबलमाउ आणपाणो य।
ववहारा सो जीवो णिच्चयणयदो दु चेदणा जस्स ॥ ३ ॥

திக்காலெ சதுபாணா இம்தியபலமாஉ ஆணபாணோ ய।
வவஹாரா ஸோ ஜீவோ ணிச்சயணயதோ து சேதணா
[ஜஸ்ஸ ॥ ௩ ॥

(ப - ரை.) ववहारा வவஹாரா - அனுபசரிதாஸத்பூத வ்யவஹாரநயத்தினல், तिक्काले திக்காலெ - பூத (இறப்பு) பவிஷ்யத் (எதிர்வு) வர்த்தமான (நிகழ்வு) என்னும் மூன்று காலங்களிலும், जस्स ஜஸ்ஸ - எதற்கு, इंदियं இம்தியம் - இந்த்ரியம் (பொறி), बलं பலம் - பலம் (சக்தி), आउ ஆஉ - ஆயுஷ்யம், आणपाणो ஆணபாணோ - ஸ்வாஸோச்ச்வாஸம் ஆகிய இந்த, चदुपाणा சதுபாணா - நான்கு ப்ராணன்கள் (இருக்கின்றனவோ), सो ஸோ - அது, जीवो ஜீவோ - ஜீவனாகும், दु து - மற்றும், णिच्चयणयदो ணிச்சயணயதோ - ஶுத்த நிச்சயநயத்தினல், जस्स ஜஸ்ஸ - எதற்கு, चेदणा சேதணா - சைதன்யப்ராணன் (அறிவு) இருக்கிறதோ, सो ஸோ - அது, जीवो ஜீவோ - ஜீவனாகும்.

கருத்துரை :—இந்த்ரியம், பலம், ஆயுஷ்யம், ஸ்வாஸோச்ச்வாஸம் ஆகிய ப்ராணன்களால் ஜீவித்தலாகிய தன்மையினையுடையது ஜீவனாகும்.

---

* त्रिकाले चतुःप्राणाः इन्द्रियं बलमायुरानप्राणश्च ।
व्यवहारात् स जीवः निश्चयनयतस्तु चेतना यस्य ॥

த்ரிகாலெ சது:ப்ராணா: இந்த்ரியம் பலமாயுரானப்ராணஶ்ச। வ்யவஹாராத் ஸ ஜீவ: நிஶ்சயநயதஸ்து சேதநா யஸ்ய ॥

நயமாவது—ஒரு பொருளில் பல தன்மைகள் இருப்பினும் அவைகளுள் ஒவ்வொரு தன்மையினைமாத்திரம் அறிதல் (கூறுதல்).

வ்யவஹாரநயம் :—ஆத்மாவினுடைய தன்மை யில்லாதனவாகிய பிறபொருள்களில் யாதானுமொருபொருளை ஆத்மாவினுடையதென்று சேர்த்துக் கூறுதல்.

நிச்சயநயம் :—ஆத்மாவினிடத்தில் இயற்கையாக இருத்தலாகிய தன்மைகளுள் யாதானுமொரு தன்மையினைக் கூறுதல்.

ப்ராணன் நான்கு வகை : அவை—இந்த்ரியம், பலம், ஆயுஷ்யம, ஶ்வாஸோச்ச்வாஸம் என்பன. அவற்றுள்—

இந்த்ரியம் ஐந்து வகை: அவை—ஸ்பர்ஶனேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், க்ராணேந்த்ரியம், சக்ஷுரிந்த்ரியம், ஶ்ரோத்ரேந்த்ரியம் என்பன.

பலம் மூன்று வகை. அவை—மனோபலம், வசன பலம், காயபலம் என்பன.

ப்ராணன்களைச் சுருக்கமாகக் கூறுங்கால் நான்கு வகையாகவும், விரிவாகக் கூறுங்கால் பத்துவகையாகவும் ஆகும். அவற்றுள்—

மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலான ஏகேந்த்ரிய ஜீவன்கட்கு (ஓரறிவுள்ள உயிர்கட்கு) ஸ்பர்ஶனேந்த்ரியம் (மெய், ஸ்பர்ஶஅறிவு) காயபலம் (உடல்ஶக்தி) ஆயுஷ்யம் ஶ்வாஸோச்ச்வாஸம் ஆகிய இவை நான்குமாத்திரம் இருக்கும்.

புழு, சங்கு, அட்டை முதலான த்வீந்த்ரியஜீவன்களுக்கு (ஈரறிவுள்ள உயிர்கட்கு) ஸ்பர்ஶனேந்த்ரியம்,

ரஸனேந்த்ரியம், காயபலம், வசனபலம், ஆயுஷ்யம், ஶ்வா ஸோச்ச்வாஸம் ஆகிய இவை ஆறுமாத்திரம் இருக்கும்.

தேள், பூரான், செய்யான், பேன், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலான த்ரீந்த்ரிய ஜீவன்களுக்கு (மூவறிவுள்ள உயிர்கட்கு) ஸ்பர்ஶனேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், க்ராணேந்த்ரியம், காயபலம், வசனபலம், ஆயுஷ்யம், ஶ்வாஸோச்ச்வாஸம் ஆகிய இவை ஏழுமாத்திரம் இருக்கும்.

கொசு, ஈ, வண்டு முதலான சதுரிந்த்ரிய ஜீவன்களுக்கு (நாலறிவுள்ள உயிர்கட்கு) ஸ்பர்ஶனேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், க்ராணேந்த்ரியம், சக்ஷுரிந்த்ரியம், காயபலம், வசனபலம், ஆயுஷ்யம், ஶ்வாஸோச்ச்வாஸம் ஆகிய இவை எட்டு மாத்திரம் இருக்கும்.

பஞ்சேந்த்ரியஜீவன் இருவகை: அவை—ஸம்ஜ்ஞி ஜீவன், அஸம்ஜ்ஞி ஜீவன் என்பன. அவற்றுள்—

ஸம்ஜ்ஞிஜீவன்:—பிறர்கூறுதலைக் கேட்கஶக்தியுள்ள ஜீவன் (மனமுள்ள ஜீவன்).

அஸம்ஜ்ஞிஜீவன்—பிறர்கூறுதலைக் கேட்க ஸாமர்த்ய மில்லாத ஜீவன். (மனமில்லாத ஜீவன்.) ஏன் பிறர்கூறு தலைக் கேட்க முடியாது எனில், கேட்டு அறிதற்கு ஹேது வாகிய மனம் அவைகட்கு இல்லை.

உடும்பு, ஓணன், சாரைப்பாம்பு முதலான அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய ஜீவன்கட்கு (ஐயறிவுள்ள உயிர்கட்கு) ஐந்து இந்த்ரியங்கள், காயபலம், வசனபலம், ஆயுஷ்யம், ஶ்வா ஸோச்ச்வாஸம் ஆகிய இவை ஒன்பதுமாத்திரம் இருக்கும்.

நாரகர், திர்யக், மனிதர், தேவர் ஆகிய ஸம்ஜ்ஞிபஞ் சேந்த்ரியஜீவன்கட்கு (ஆறறிவுள்ள உயிர்கட்கு) ஐந்து இந்த்ரியங்கள், மூன்று பலம், ஆயுஷ்யம், ஶ்வாஸோச் ச்வாஸம் ஆகிய இவை பத்தும் இருக்கும். (3)

உபயோகமயத்தின் வர்ணனை

4. *उवओगो दुवियप्पो दंसणणाणं च दंसणं चदुधा ।
चक्खु अचक्खू ओही दंसणमध केवलं णेयं ॥ ४ ॥

𑌉𑌵𑌓𑌗𑍋 𑌦𑍁𑌵𑌿𑌯𑌪𑍍𑌪𑍋 𑌦𑌂𑌸𑌣𑌣𑌾𑌣𑌂 𑌚 𑌦𑌂𑌸𑌣𑌂 𑌚𑌦𑍁𑌧𑌾 । 𑌚𑌕𑍍𑌖𑍁 𑌅𑌚𑌕𑍍𑌖𑍂 𑌓𑌹𑍀 𑌦𑌂𑌸𑌣𑌮𑌧 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌣𑍇𑌯𑌂 ॥ ௪ ॥

(ப - ரை.) उवओगो 𑌉𑌵𑌓𑌗𑍋 - உபயோகமானது, दंसण 𑌦𑌂𑌸𑌣 - தர்ஶனோபயோகம், णाणं 𑌣𑌾𑌣𑌂 - ஜ்ஞானோபயோகம் என், दुवियप्पो 𑌦𑍁𑌵𑌿𑌯𑌪𑍍𑌪𑍋 - இருவகையாகும், च 𑌚 - மற்றும், दंसणं 𑌦𑌂𑌸𑌣𑌂 - தர்ஶனோபயோகமானது, चक्खु 𑌚𑌕𑍍𑌖𑍁 - சக்ஷுர்தர்ஶனம், अचक्खू 𑌅𑌚𑌕𑍍𑌖𑍂 - அசக்ஷுர்தர்ஶனம், ओही 𑌓𑌹𑍀 - அவதிதர்ஶனம், अध 𑌅𑌧 - மற்றும், केवलं दंसणं 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌦𑌂𑌸𑌣𑌂 - கேவலதர்ஶனம் என்று, चदुधा 𑌚𑌦𑍁𑌧𑌾 - நான்குவகையாக, णेयं 𑌣𑍇𑌯𑌂 - அறியத்தகுந்தது.

கருத்துரை :—தர்ஶனோபயோகம் ஜ்ஞானோபயோகம் ஆகிய இவற்றையுடையது ஜீவனாகும்.

குறிப்பு :—தர்ஶனம் என்னும் பதத்திற்குப் பார்த்தல் என்பது பொருளாயினும் இங்கு ஜ்ஞானம் என்று பொருள் கொள்ளப் படும்.

---

* उपयोगो द्विविकल्पो दर्शनज्ञानं च दर्शनं चतुर्धा ।
चक्षुरचक्षुरवधिर्दर्शनमथ केवलं ज्ञेयम् ॥

𑌉𑌪𑌯𑍋𑌗𑍋 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾 । 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌵𑌧𑌿𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌥 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 ॥

தர்ஶனம் :—பொருளை அறியும்போது முதலில் ஒருவித வுருவமின்றிச் சாமான்யமாக அறிதல். அதாவது அவற்றின் ஸத்தாவை (இருப்பை) மாத்திரம் அறிதல்.

ஜ்ஞானம் :—அந்தத் தர்ஶனத்திற்குப்பின்னர் உருவுடன் அப்பொருளை யுணர்தல்.

சக்ஷுர்தர்ஶனம் :—கண்கள்மூலமாக உருவமின்றிச் சாமான்யமாக அறிதல். அதாவது, மூர்த்தப் பொருள்களின் ஸத்தாஸாமான்யத்தைமாத்திரம் அறிதல்.

அசக்ஷுர்தர்ஶனம் :—கண்கள் தவிர, ஏனைய மெய் வாய் மூக்கு செவி ஆகிய இவைகளின் மூலமாக பொருள்களின் ஸத்தாவைமாத்திரம் அறிதல்.

அவதிதர்ஶனம் :—ஐம்பொறி மனம் இவைகளின் உதவியின்றி த்ரவ்ய க்ஷேத்ர கால பாவங்களுக்குத் தகுந்தாற்போல மூர்த்தப்பொருள்களின் ஸத்தாவைமாத்திரம் அறிதல்.

கேவலதர்ஶனம் :—மூன்று காலங்களிலும் உள்ள எல்லாப்பொருள்களின் ஸத்தாஸாமான்யத்தை ப்ரத்யக்ஷமாக ஒரேஸமயத்தில் அறிதல்.

இந்நான்கினுள் சக்ஷுர்தர்ஶனம், அசக்ஷுர்தர்ஶனம், அவதிதர்ஶனம் ஆகிய இவை மூன்றும் கர்மத்தின் க்ஷயோபஶமத்தினால் (கர்மங்கள் அடங்குதலாலும் நசித்தலாலும்) உண்டாகும். கேவலதர்ஶனம் கர்மங்கள் முற்றும் நசித்தபின்னர் உண்டாகும்.

ஸம்ஸாரிஜீவன்களாகிய நாம் பொருள்களை ஸாமான்யமாக அறிந்த பின்னர் அவைகளை விஶேஷமாக

அறிகிறோம். ஆதலால், நமக்கு முதன்முதல் தர்ஸனோப-யோகம் ஆகும். அதன்பின்னர் ஜ்ஞானோபயோகம் ஆகும்.

ஸம்ஸாரத்தினின்றும் நீங்கிய கேவலிபகவானுக்கு (கர்மத்தைக் கெடுத்தவருக்கு)த் தர்ஸனோபயோகமும் ஜ்ஞானோபயோகமும் ஒரேஸமயத்தில் உண்டாகும்.

கர்மங்களாகிற படலங்கள் (ஆச்சாதனம்) நீங்கி யிருத்தலால் கேவலிகட்கு, க்ரமமாக அறியுந் தன்மை யன்றி ஒரேஸமயத்தில் அறியுந் தன்மை உண்டாகிறது.

ஸம்ஸாரிஜீவன்கட்கு (நமக்கு), கர்மங்களாகிற படலங்கள் (ஆச்சாதனம்) இருத்தலால் பொருள்களை ஒருஸமயத்தில் ஒருங்கே அறியுந் தன்மையின்றி க்ரமமாக அறியுந் தன்மை யிருக்கும். (4)

ஜ்ஞானோபயோகத்தின் பிரிவு

5. *णाणं अट्ठवियप्पं मदिसुदओही अणाणणाणाणि ।
मणपज्जयकेवलमवि पच्चक्खपरोक्खभेयं च ॥ ५ ॥

ணாணம் அட்டவியப்பம் மதிஸுதஓஹீ அணாணணாணாணி |
மணபஜ்ஜயகேவலமவி பச்சக்கபரோக்கபேயம் ச || ரு ||

(ப - ரை.) णाणं ணாணம் - ஜ்ஞானோபயோகமானது, मदि மதி - மதிஜ்ஞானம், सुद ஸுத - ஶ்ருதஜ்ஞானம், ओही ஓஹீ - அவதிஜ்ஞானம், अणाण णाणाणि அணாண

---

* ज्ञानमष्टविकल्पं मतिश्रुतावधय अज्ञानज्ञानानि ।
मन:पर्ययः केवलमपि प्रत्यक्षपरोक्षभेदं च ॥

ஜ்ஞானமஷ்டவிகல்பம் மதிஶ்ருதாவதய அஜ்ஞானஜ்ஞானானி |
மன:பர்யய: கேவலமபி ப்ரத்யக்ஷபரோக்ஷபேதம் ச ||

ணாணாணி - மித்யாஜ்ஞானங்களாகிற குமதிஜ்ஞானம் குஶ்ருதஜ்ஞானம் குஅவதிஜ்ஞானம், (अवि ஊவி - மற்றும்), मणपज्जय केवलं மணவஜ்ஜய கெவலும் - மநஃபர்யயஜ்ஞானம் கேவலஜ்ஞானம் என, अट्ठवियप्पं அட்டவியப்பம் - எட்டு வகையாகும், च வ - மற்றும் (அது), पच्चक्ख परोक्खभेयं பச்சக்க பரொக்கபெயம் - ப்ரத்யக்ஷம் பரோக்ஷம் என இருவகையாகும்.

கருத்துரை :—ஜ்ஞானோபயோகம் எட்டு வகை. அவை—மதிஜ்ஞானம், ஶ்ருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம், குமதிஜ்ஞானம், குஶ்ருதஜ்ஞானம், குஅவதிஜ்ஞானம் மனஃபர்யயஜ்ஞானம், கேவலஜ்ஞானம் என்பன.

மதிஜ்ஞானம்:—ஐம்பொறி, மனம் ஆகிய இவைகளின் உதவியினுல் அறியும் அறிவு. (கண்களால் கண்டறிதல், காதுகளினுல் கேட்டறிதல், மூக்கினுல் முகர்ந்தறிதல், நாக்கினுல் சுவைத்தறிதல், கைகளால் தொட்டறிதல், மனத்தால் நினைத்தறிதல் ஆகிய அறிவு.)

ஶ்ருதஜ்ஞானம்:—மதிஜ்ஞான மூலமாக உண்டாகும் ஜ்ஞானம்; ஶாஸ்த்ரஜ்ஞானம். (நூல்களை ஓதி உணரும் அறிவு).

அவதிஜ்ஞானம் :—ஐம்பொறி, மனம் ஆகிய இவைகளின் உதவி யின்றி, மூர்த்தப்பொருள்களை அளவுடன் அறிதலாகிய அறிவு.

மனஃபர்யயஜ்ஞானம் :—பிறர்மனத்தில் நினைத்ததை அறியும் அறிவு.

கேவலஜ்ஞானம் :—வினைகள் அனைத்தும் நீங்கிய பின்னர் எல்லாத்ரவ்ய பர்யாயங்களையும் ஒரேஸமயத்தில் ஒருங்கே அறியும் அறிவு.

குமதிஜ்ஞானம் :—ஐம்பொறி, மனம் ஆகிய இவைகளின் உதவியினால், இது நல்லது இது கெட்டது என்ற பகுத்தறிவு இன்றி அறியும் அறிவு.

குஶ்ருதஜ்ஞானம் :—குமதிஜ்ஞானத்தின் உதவியினால் உண்டாகும் ஜ்ஞானம்.

குஅவதிஜ்ஞானம்:—ஐம்பொறி, மனம் ஆகிய இவைகளின் உதவி யின்றித்தீயதை அறியும் அறிவு.

*मइ सुय परोक्खणाणं ओही मण होइ वियलपच्चक्खं ।
केवलणाणं च तहा अणोवमं होइ सयलपच्चक्खं ॥

*பரோக்ஷஜ்ஞானம் இரண்டு. அவை—மதி ஜ்ஞானம், ஶ்ருதஜ்ஞானம் என்பன.

*ப்ரத்யக்ஷஜ்ஞானம் மூன்று. அவை—அவதிஜ்ஞானம், மனःபர்யயஜ்ஞானம், கேவலஜ்ஞானம்என்பன. அவற்றுள் — அவதிஜ்ஞானம், மனःபர்யய ஜ்ஞானம் ஆகிய இவை யிரண்டும் விகலப்ரத்யக்ஷமாகும். கேவலஜ்ஞானம் ஸகலப்ரத்யக்ஷமாகும்.

மதிஜ்ஞானம், ஶ்ருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம், மனःபர்யயஜ்ஞானம், கேவலஜ்ஞானம் ஆகிய இவை ஐந்தும் ஸம்யக்ஜ்ஞான மாகும். குமதிஜ்ஞானம், குஶ்ருதஜ்ஞானம், குஅவதிஜ்ஞானம் இவை மூன்றும் மித்யாஜ்ஞானமாகும். (5)


उपयोग
ज्ञान
दर्शन
परोक्ष
प्रत्यक्ष
चक्षु (१)
अचक्षु (२)
अवधि (३)
केवल (४)
मति
श्रुत
विकल
सकल
केवल (८)
कुमति (१)
सुमति (२)
कुश्रुत (३)
सुश्रुत (४)
अवधि
मनःपर्यय (७)
कुअवधि (विभङ्ग) (५)
अवधि (६)

ஜீவனுடைய லக்ஷணம்

6. *अट्ठचदुणाणदंसण सामण्णं जीवलक्खणं भणियं ।
ववहारा सुद्धणया सुद्धं पुण दंसणं णाणं ॥ ६ ॥

அட்டசதுணாணதம்ஸண ஸாமண்ணம் ஜீவலக்கணம் பணியம் ।
வவஹாரா ஸுத்தணயா ஸுத்தம் புண தம்ஸணம் ணாணம் ॥

(ப-ரை.) ववहारा வவஹாரா - உபசரிதாநுபசரித ஸத்பூதவ்யவஹாரநயத்தினால், अट्ठचदुणाणदंसण அட்டசதுணாணதம்ஸண - எட்டுவகை ஜ்ஞாநோபயோகமும் நான்கு வகை தர்ஶனோபயோகமும், सामण्णं ஸாமண்ணம் - ஸாமான்யமாக, जीवलक्खणं ஜீவலக்கணம் - ஜீவனுடைய லக்ஷணமென்று, भणियं பணியம் - கூறப்பட்டது, पुण புண - மற்றும், सुद्धणया ஸுத்தணயா - ஶுத்தநிச்சயநயத்தினால், सुद्धं ஸுத்தம் - கர்மமாகிற அழுக்கற்ற (பரிஶுத்தமான), दंसणं தம்ஸணம் - தர்ஶனோபயோகமும், णाणं ணாணம் - ஜ்ஞாநோபயோகமும், जीवलक्खणं ஜீவலக்கணம் - ஜீவனுடையலக்ஷணம் என்று, भणियं பணியம் - கூறப்பட்டது.

கருத்துரை:—வ்யவஹாரநயத்தினால் எட்டு வகை ஜ்ஞானமும், நான்கு வகை தர்ஶனமும் கர்மஸம்பந்தமான ஸம்ஸாரிஜீவனது லக்ஷணமாகும். ஶுத்தநிச்சயநயத்தினால் பரிஶுத்தமான கேவலஜ்ஞானமும் கேவலதர்ஶனமும் முக்தஜீவனது லக்ஷணமாகும். (6)

---

* अष्टचतुर्ज्ञानदर्शने सामान्यं जीवलक्षणं भणितम् ।
व्यवहारात् शुद्धनयात् शुद्धं पुनर्दर्शनं ज्ञानम् ॥

அஷ்டசதுர்ஜ்ஞாநதர்ஶநே ஸாமாந்யம் ஜீவலக்ஷணம் பணிதம் । வ்யவஹாராத் ஶுத்தநயாத் ஶுத்தம் புநர்தர்ஶநம் ஜ்ஞாநம் ॥

அமூர்த்தியின் லக்ஷணம்

7. *वण्णरस पंच गंधा दो फासा अट्ठ णिच्चया जीवे ।
णो संति अमुत्ति तदो ववहारा मुत्ति बंधादो ॥ ७ ॥

𑌵𑌣𑍍𑌣𑌰𑌸 𑌪𑌂𑌚 𑌗𑌂𑌧𑌾 𑌦𑍋 𑌫𑌾𑌸𑌾 𑌅𑌟𑍍𑌠 𑌣𑌿𑌚𑍍𑌚𑌯𑌾 𑌜𑍀𑌵𑍇 ।
𑌣𑍋 𑌸𑌂𑌤𑌿 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 𑌤𑌦𑍋 𑌵𑌵𑌹𑌾𑌰𑌾 𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 𑌬𑌂𑌧𑌾𑌦𑍋॥

(ப - ரை.) णिच्चया 𑌣𑌿𑌚𑍍𑌚𑌯𑌾 - ஶுத்தநிச்சயநயத்தினால், जीवे 𑌜𑍀𑌵𑍇 - ஜீவனிடத்தில், पंचवण्ण 𑌪𑌂𑌚𑌵𑌣𑍍𑌣 - வெளுப்பு மஞ்சள் பச்சை சிவப்பு கறுப்பு என்கிற ஐந்து வர்ணமும், पंचरस 𑌪𑌂𑌚𑌰𑌸-கசப்பு உறைப்பு துவர்ப்பு புளிப்பு இனிப்பு என்கிற ஐந்து சுவையும், दोगंधा 𑌦𑍋𑌗𑌂𑌧𑌾 - ஸுகந்தம் துர்க்கந்தம் என்னும் இரண்டு கந்தமும், अट्ठफासा 𑌅𑌟𑍍𑌠𑌫𑌾𑌸𑌾- மெதுவு கடினம் பளுவு பளுவின்மை ஶீதம் உஷ்ணம் பசைத்தன்மை வறட்சி என்கிற எட்டு ஸ்பர்ஶமும், णो संति 𑌣𑍋 𑌸𑌂𑌤𑌿 - இல்லனவோ, तदो 𑌤𑌦𑍋 - அதனால், (ஜீவன்), अमुत्ति 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿- அமூர்த்தியாகும், बंधादो 𑌬𑌂𑌧𑌾𑌦𑍋- கர்மபந்தத்தினின்றும், ववहारा 𑌵𑌵𑌹𑌾𑌰𑌾 - அநுபசரிதாஸத்பூதவ்யவஹாரநயத்தினால் (ஜீவன்), मुत्ति 𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 - மூர்த்தியாகும்.

கருத்துரை :—வர்ணம், சுவை, கந்தம், ஸ்பர்ஶம் ஆகிய இவைகளின் ஸம்பந்தம் இல்லாத ஜீவன் அமூர்த்தியாகும்.

---

* वर्णा रसाः पञ्च गन्धौ द्वौ स्पर्शा अष्ट निश्चयाज्जीवे ।
नो सन्त्यमूर्तिस्ततो व्यवहारान्मूर्ति र्बन्धतः ॥

𑌵𑌰𑍍𑌣𑌾 𑌰𑌸𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌗𑌨𑍍𑌧𑍌 𑌦𑍍𑌵𑍌 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾 𑌅𑌷𑍍𑌟 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑍇 । 𑌨𑍋 𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌤𑍋 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌿 𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑌤𑌃 ॥

அநாதிபரம்பரையிலிருந்து கர்மபத்தனாகிய ஜீவன் மூர்த்தி யாகும்.

குறிப்பு:—மூர்த்தப் பொருளாகிய கர்மமானது அமூர்த்தப் பொருளாகிய ஆத்மாவினுடன் கலந்து இருத்தலால் வ்யவஹாரத்தில் அந்த ஆத்மாவை (ஜீவனை) மூர்த்தி யென்பர்.

மூர்த்தப்பொருள் :—வர்ணம் சுவை கந்தம் ஸ்பர்ஶம் ஆகிய இவை உள்ள பொருள். (கண்களால் காணவும், நாக்கினால் சுவைக்கவும், செவிகளால் கேட்கவும், மூக்கினால் முகரவும், கைகளால் தொடவும் யோக்யமான பொருள்).

அமூர்த்தப் பொருள் :—ஐம்பொறிகட்குத் தோன்றாத பொருள் (வர்ணம் முதலானவை இல்லாத பொருள்.)

முக்தஜீவனிடத்து வர்ணம் முதலானவை இல்லாமலிருத்தலால் முக்தஜீவன் அமூர்த்தியாகும். ஸம்ஸாரி ஜீவனிடத்தில் வினையின் சேர்க்கையினால் வர்ணம் முதலானவை இருத்தலால் ஸம்ஸாரி ஜீவன் மூர்த்தியாகும். (7)

கர்த்ருத்வ வர்ணனை

ஜீவன் இவைகட்குக் கர்த்தாவாகும் என்பது

8. *पुग्गलकम्मादीणं कत्ता ववहारदो दु णिच्चयदो ।
चेदणकम्माणादा सुद्धणया सुद्धभावाणं ॥ ८ ॥

𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌕𑌮𑍍𑌮𑌾𑌦𑍀𑌣𑌂 𑌕𑌤𑍍𑌤𑌾 𑌵𑌵𑌹𑌾𑌰𑌦𑍋 𑌦𑍁 𑌣𑌿𑌚𑍍𑌚𑌯𑌦𑍋 ।
𑌚𑍇𑌦𑌣𑌕𑌮𑍍𑌮𑌾𑌣𑌾𑌦𑌾 𑌸𑍁𑌦𑍍𑌧𑌣𑌯𑌾 𑌸𑍁𑌦𑍍𑌧𑌭𑌾𑌵𑌾𑌣𑌂 ॥ ௮ ॥

---

* पुद्गलकर्मादीनां कर्त्ता व्यवहारतस्तु निश्चयतः ।
चेतनकर्मणामात्मा शुद्धनयाच्छुद्धभावानाम् ॥

𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌤𑌃 ।
𑌚𑍇𑌤𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌨𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

(ப - ரை.) आदा ஆதா - ஆத்மாவானது, ववहारदो வவஹாரதோ - வ்யவஹாரநயத்தினால், पुग्गलकम्मादीणं புக்கலகம்மாதீணம் - புத்கலமாகிய ஜ்ஞானாவரணம் முதலான கர்மங்கட்கு, कत्ता கத்தா - கர்த்தாவாகும், दु து - மற்றும், णिच्चयदो ணிச்சயதோ - அஶுத்தநிச்சயநயத்தினால், चेदणकम्माण சேதணகம்மாண - சைதன்ய (பாவ) கர்மங்களாகிற ராக த்வேஷம் முதலானவைகட்கு, कत्ता கத்தா - கர்த்தாவாகும், सुद्धणया ஸுத்தணயா - ஶுத்தநிச்சயநயத்தினால், सुद्धभावाणं ஸுத்தபாவாணம் - கேவலஜ்ஞானம் முதலான ஶுத்தபாவங்கட்கு, कत्ता கத்தா - கர்த்தாவாகும்.

கருத்துரை :—ஆத்மாவானது அனுபசரித அஸத்பூத வ்யவஹாரநயத்தினால் ஜ்ஞானாவரணம், தர்ஶனாவரணம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், அந்தராயம் என்னும் எட்டுக்கர்மங்கட்கும், ஔதாரிகம், வைக்ரியிகம், ஆஹாரகம் என்னும் மூன்று ஶரீரங்களுக்கும், ஆஹாரம், ஶரீரம், இந்த்ரியம், ஶ்வாஸோச்ச்வாஸம், பாஷா, மனம் என்னும் ஆறுபர்யாப்திகளுக்கும், ஹாஸ்யம் முதலான ஒன்பது நோகஷாயங்கட்கும் கர்த்தாவாகும். உபசரிதஅஸத்பூத வ்யவஹாரநயத்தினால் குடம் செய்தல், துணி நெய்தல் முதலான பாஹ்யகார்யங்கட்குக் கர்த்தாவாகும். அஶுத்தநிச்சயநயத்தினால் ராகம் த்வேஷம் மதம் மாத்ஸர்யம் முதலான பரிணாமங்கட்கு (பாவ கர்மங்கட்கு)க் கர்த்தாவாகும். ஶுத்தநிச்சயநயத்தினால் அனந்த ஜ்ஞானம் அனந்ததர்ஶனம் அனந்தஸுகம் முதலான ஶுத்தபாவங்கட்குக் கர்த்தாவாகும்.

குறிப்பு:—கர்த்தா—செய்பவன்; செயலுக்கு உடையோன்.

तत्त्वार्थ निश्चयो वक्ति । பொருளின்கண் உள்ள நிஜத்தன்மை நிச்சயம் எனப்படும்.

1. நிஶ்சயநயம் :—பொருள்களின்கண் இயற்கையாயுள்ள தன்மைகளுள் யாதானும் ஒரு தன்மையினைக் கூறுதல்(அறிதல்). அது இருவகை. அவை—ஶுத்தநிச்சயநயம் அஶுத்தநிச்சயநயம் என்பன. அவற்றுள்—

(i) ஶுத்தநிஶ்சயநயம் :—கர்மஸம்பந்தமில்லாத கேவலஜ்ஞானம் முதலான ஶுத்தகுணங்களை ஜீவன் என்று கூறுதல் போல்வது.

(ii) அஶுத்தநிச்சயநயம் :—கர்மஸம்பந்தத்தினால் உண்டாகும் ராகத்வேஷம் முதலான அஶுத்தகுணங்களை ஜீவன் என்று கூறுதல் போல்வது.

व्यवहारो जनोदितम् । வ்யவஹாரம் என்பது ஜனங்களால் கூறப்படுவது.

2. வ்யவஹாரநயம்:—பொருளின்கண் இல்லாதவற்றைச் சேர்த்துக் கூறுதல் (அறிதல்). அது இருவகை. அவை—ஸத்பூதவ்யவஹாரநயம், அஸத்பூதவ்யவஹாரநயம் என்பன. அவற்றுள்—

(i) ஸத்பூதவ்யவஹாரநயம்—ஏகவஸ்து விஷயகமானது. அதாவது - ஒரு பொருளின்கண் இருத்தலாகிய தன்மையினைப் பொருட்படுத்துவது. அது இருவகை. அவை—உபசரிதஸத்பூதவ்யவஹாரநயம், அநுபசரிதஸத்பூதவ்யவஹாரநயம் என்பன. அவற்றுள்—

(A) உபசரிதஸத்பூதவ்யவஹாரநயம் :—கர்மத்தின் க்ஷயோபஶமத்தினால் உண்டாகும் மதிஜ்ஞானம் முதலானவை ஜீவனுடைய குணங்கள் என்று கூறுதல் போல்வது.

(B) **அநுபசரிதஸத்பூதவ்யவஹாரநயம்** :—கர்ம ஸம்பந்தமில்லாத கேவலஜ்ஞானம் முதலானவை ஜீவனுடைய குணங்கள் என்று கூறுதல் போல்வது.

ஶுத்தநிச்சயநயத்தில் குணத்திற்கும் குணிக்கும் பேதமின்றிக் கூறுதலாகும். அநுபசரிதஸத்பூதவ்யவஹாரநயத்தில் குணத்திற்கும் குணிக்கும் பேதமாகக் கூறுதலாகும். ஶுத்தநிச்சயநயத்தில் குணத்தையும் குணியையும் பிரிக்காமல் கூறப்படும். அநுபசரிதஸதபூதவ்யவஹாரநயத்தில் குணத்தையும் குணியையும் பிரித்துக் கூறப்படும். குணம்—பண்பு. குணீ—குணத்தையுடையது; பண்புடையது.

(ii) **அஸத்பூதவ்யவஹாரநயம்** :—ஒன்றனுடைய தன்மையில்லாததாகிய பிறபொருள்களின் அதன் தன்மையினைச் சேர்த்துப் பொருட்படுத்துவது. அது இருவகை. அவை — உபசரித அஸத்பூதவ்யவஹாரநயம், அநுபசரித அஸத்பூதவ்யவஹாரநயம் என்பன. அவற்றுள்-

(A) **உபசரித அஸத்பூத** வ்யவஹாரநயம் :—(தேவதத்தனுடைய) ஜீவனுடன் ஸம்யோகஸம்பந்தமில்லாத மனைவி மக்கள் வீடு நிலம் முதலானவற்றை, 'இவள் தேவதத்தனுடைய மனைவி,' 'இது தேவதத்தனுடைய வீடு' என்று அந்த ஜீவனுடன் ஸம்பந்தப்படுத்திக் கூறுதல் போல்வது.

(B) **அநுபசரிதஅஸத்பூத**வ்யவஹாரநயம் :— (தேவதத்தனுடைய) ஜீவனுடன் ஸம்யோக ஸம்பந்தத்துடன் இருக்கும் ஶரீரம் முதலானவற்றை, 'இது தேவதத்தனுடைய ஶரீரம்' என்று ஸம்பந்தத்தைக் கூறுதல் போல்வது. (8)

போக்த்ருத்வ வர்ணனை

ஜீவன் இவைகளை அனுபவிக்கும் என்பது

9. *ववहारा सुहदुक्खं पुग्गलकम्मफलं पभुंजेदि ।
आदा णिच्चयणयदो चेदणभावं खु आदस्स ॥ ९ ॥

𑌵𑌵𑌹𑌾𑌰𑌾 𑌸𑍁𑌹𑌦𑍁𑌕𑍍𑌖𑌂 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌕𑌮𑍍𑌮𑌫𑌲𑌂 𑌪𑌭𑍁𑌂𑌜𑍇𑌦𑌿 । 𑌆𑌦𑌾 𑌣𑌿𑌚𑍍𑌚𑌯𑌣𑌯𑌦𑍋 𑌚𑍇𑌦𑌣𑌭𑌾𑌵𑌂 𑌖𑍁 𑌆𑌦𑌸𑍍𑌸 ॥ ௯ ॥

(ப-ரை) आदा 𑌆𑌦𑌾 - ஆத்மாவானது, ववहारा 𑌵𑌵𑌹𑌾𑌰𑌾 - அநுபசரிதஅஸத்பூதவ்யவஹாரநயத்தினால், **पुग्गलकम्मफलं** 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌕𑌮𑍍𑌮𑌫𑌲𑌂 - புத்கலமாகிய ஜ்ஞானாவரணம் முதலான கர்மங்களின் பலனாகிய, सुहदुक्खं 𑌸𑍁𑌹𑌦𑍁𑌕𑍍𑌖𑌂 - ஸுக துக்கங்களை, पभुंजेदि 𑌪𑌭𑍁𑌂𑌜𑍇𑌦𑌿 - அனுபவிக்கிறது, **णिच्चयणयदो** 𑌣𑌿𑌚𑍍𑌚𑌯𑌣𑌯𑌦𑍋 - நிஶ்சயநயத்தினால், आदस्स 𑌆𑌦𑌸𑍍𑌸 - ஆத்மாவினது (தனது), चेदणभावं 𑌚𑍇𑌦𑌣𑌭𑌾𑌵𑌂 - ஶுத்தசைதன்யபாவத்தையும் (களங்கமற்ற ஜ்ஞானவொளியையும்) ஸந்தோஷம் துக்கம் (ஹர்ஷம் விஷாதம்) இவைகளையும், खु 𑌖𑍁 - நன்றாக, पभुंजेदि 𑌪𑌭𑍁𑌂𑌜𑍇𑌦𑌿 - அனுபவிக்கிறது.

கருத்துரை :—ஆத்மாவானது அநுபசரிதஅஸத்பூதவ்யவஹாரநயத்தினால் நல்வினையின் பயனாகிய ஸுகத்தினை

---

* व्यवहारात् सुखदुःखं पुद्गलकर्मफलं प्रभुङ्क्ते ।
आत्मा निश्चयनयात् चेतनभावं खलु आत्मनः ॥

𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌂 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 । 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌨𑌯𑌾𑌤𑍍 𑌚𑍇𑌤𑌨𑌭𑌾𑌵𑌂 𑌖𑌲𑍁 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

யும் தீவினையின் பயனாகிய துக்கத்தினையும் அனுபவிக்கும். அசுத்தநிச்சயநயத்தினால் ஹர்ஷம், விஷாதம் ஆகிய ஸுக துக்கங்களை அனுபவிக்கும். சுத்தநிச்சயநயத்தினால் பரமாத்மஸ்வபாவமாகிய (நிச்சயரத்னத்ரயத்தினால் உண்டான ஆனந்தமாகிய) ஸுகாம்ருதத்தினை யனுபவிக்கும்.

ஸ்வதேஹபரிமாண லக்ஷணம்

10. *अणुगुरुदेहपमाणो उवसंहारप्पसप्पदो चेदा ।
असमुहदो ववहारा णिच्चयणयदो असंखदेसो वा ॥ १० ॥

அணுகுருதேஹபமாணோ உவஸம்ஹாரப்ப ஸப்பதோ சேதா । அஸமுஹதோ வவஹாரா ணிச்சயணயதோ அஸம்கதேஸோ வா ॥ ௰ ॥

(ப - ரை.) ववहारा வவஹாரா - அநுபசரிதஅஸத்பூத வ்யவஹாரநயத்தினால். चेदा சேதா - சைதன்யகுணமுள்ள ஆத்மாவானது, उवसंहारप्पसप्पदो உவஸம்ஹாரப்பஸப்பதோ - சுருங்குதல் விரிதல் (பரவுதல்) ஆகிய இவைகளால், असमुहदो அஸமுஹதோ - ஸமுத்காதஸமயந் தவிர ஏனைய ஸமயங்களில், अणुगुरुदेहपमाणो அணுகுருதேஹபமாணோ - சிறியனவாயும் பெரியனவாயும் உள்ள உடலின் அளவுப் பிரமாணம் இருக்கும். वा வா - அல்லது, णिच्चयणयदो ணிச்சயணயதோ - சுத்தநிச்சயநயத்தினால், असंखदेसो அஸம்கதேஸோ - அஸங்க்யாதப்ரதேசமுள்ளதாய் இருக்கும்.

---

* अणुगुरुदेहप्रमाणः उपसंहारप्रसर्पाभ्यां चेतयिता ।
असमुद्घाताद्व्यवहारात् निश्चयनयतोऽसङ्ख्यदेशो वा ॥

அணுகுருதேஹப்ரமாண: உபஸம்ஹாரப்ரஸர்பாப்யாம் சேதயிதா । அஸமுத்காதாத்வ்யவஹாராத் நிஶ்சயநயதோऽஸங்க்யதேஶோ வா ॥

கருத்துரை :—ஆத்மாவுக்கு எப்போதும் அஸங்க்யாத ப்ரதேஶங்கள் இருக்கும். உலக முழுமையும் பரவும் (விரியும்) தன்மை (ஶக்தி) ஒவ்வோர் ஆத்மாவுக்கும் உளது. ஆயினும், தன் வினைப்பயன்படி தான் அடைந்த உடல் எவ்வளவு ப்ரமாணம் உளதோ அந்த அளவில்மட்டுமே ஆத்மாவானது இருக்கும். எப்படி யெனில், ஒரு தீபத்தை ஒரு சிறிய கூடையால் மறைப்பின், அத்தீபத்தின் ஒளியானது அக் கூடையினுள் அடங்கி யிருக்கும். அந்தத் தீபத்தையே கூடையினின்றும் எடுத்து அகலமான (விஸ்தாரமான) அறையில் வைப்பின், அப்போது அத் தீபத்தின் ஒளியானது அவ் வறை முழுமையும் பரவியிருக்கும். கூடையினுள் இருந்த-போது கூடையின் அளவுப்பிரமாணம்மாத்திரமே அவ்வொளி இருந்தது. அறையில் வைத்தபோது கூடையினுள் இருந்த அளவைவிட அதிக அளவு உள்ள-தாயிற்று. அப்படியாயினும், கூடையினுள் இருந்தபோது ப்ரதேஶங்கள் குறைவாயும், அறையினுள் வைத்தபோது ப்ரதேஶங்கள் அதிகமாயும் இருக்கவில்லை. இருவகையிலும் ஒளியானது தீபத்திலிருந்த அளவுதான் உளது. ஆனால், சிறியதாயும் பெரியதாயும் உள்ள அந்தக் கூடையினாலும் அறையினாலுமே அவ்வொளியானது குறுகியும் விரிந்தும் காணப்பட்டது. அப்படியே, ஒரு ஜீவன் எறும்பாகப் பிறந்தபோது அந்த எறும்பின் உடல் எவ்வளவு பிரமாணம் உளதோ அந்தப்பிரமாணத்திற்குள் தான் ஜீவனும் அடங்கி யிருக்கும். எறும்பாய்ப் பிறந்த அந்த ஜீவன் (காலாந்தரத்தில்) மறு பிறவியில் யானையாகப் பிறப்பின் அந்த யானையின் உடல் எவ்வளவு பிரமாணம் உளதோ அவ்வளவு பிரமாணத்தில் பரவும். ஆனால், ஸமுத்காத

ஸமயத்தில்மட்டும் ஜீவனானது தான் அடைந்த உடலின் அளவினின்றும் வெளியிற் பரவும்.

*मूलसरीरमछंडिय उत्तरदेहस्स जीवपिंडस्स ।
णिग्गमणं देहादो होदि समुग्घादणामं तु ॥ (गोमटसार)

*ஸமுத்காதம் — ஆத்மாவின் ப்ரதேஶமானது தான் அடைந்த உடலை விடாமல் அவ்வுடலின் வெளியிலும் பரவுதல்.

†वेयण कसाय वेयुव्विय मारणंतियो समुग्घादो ।
तेजाहारो छट्ठो सत्तमओ केवलीणं तु ॥ (गोमटसार)

†ஸமுத்காதம் ஏழு வகை. அவை — வேதநாஸமுத்காதம், கஷாயஸமுத்காதம், வைக்ரியிகஸமுத்காதம், மாரணாந்திகஸமுத்காதம், தேஜஸ்ஸமுத்காதம், ஆஹார ஸமுத்காதம், கேவலஸமுத்காதம் என்பன. அவற்றுள் —

(1) வேதநாஸமுத்காதம்:—தீவ்ரமான பலவகை நோய்களின் வேதனையினை அனுபவிக்கும்போது ஆத்மப்ரதேஶங்கள் தாம் அடைந்துள்ள உடலை விடாமல் அவ்வுடலின் வெளியிலும் பரவுதல்.

(2) கஷாயஸமுத்காதம் :—தீவ்ரமான கஷாயம் உதயமாகும்போது (கடுங் கோபம் முதலியன உண்டாகும் போது) அயலாரை வதைப்பதற்காக ஆத்மப்ரதேஶங்கள் தாம் அடைந்த ஶரீரத்தைவிடாமல் அந்த ஶரீரத்தின் வெளியிலும் செல்லுதல்.

(3) வைக்ரியிகஸமுத்காதம்:—ஆத்மா, தான் அடைந்துள்ள ஶரீரத்தைவிடாமல் யாதானுமோர் உருவத்தைத் தரித்தற்கு அந்த ஶரீரத்தின் வெளியிலும் செல்லுதல். (தேவர், நாரகர், போகபூமிஜர், சக்ரவர்த்திகள், விக்ரியா

ருத்தியைப் பெற்ற முனிவர் ஆகிய இவர்கள் தம்தம் விருப்பப்படி பலவகை யுருவங்களைத் தரிக்கும்போது அவ்வுருவங்களிலும் ஆத்மப்ரதேஸமானது அகண்டிதமாக (துண்டு இன்றிப்) பரவியிருத்தல்.)

(4) **மாரணாந்திகஸமுத்காதம் :—** மரண ஸமயத்தில் ஆயுள் ஓர் அந்தர்முஹூர்த்தகாலம் இருக்கும்போது ஆத்மா தான் அடைந்துள்ள ஶரீரத்தைவிடாமல் பின்னர்த் தான் பிறக்கும் இடம்வரைக்கும் பரவுதல். அவ்வண்ணம் பரவிய பின்னர், ஆத்மா மூலஶரீரத்தினை (முதலில் இருந்த உடலை) அடைந்து மறுபடியும் தான் பிறக்கும் இடம் செல்லும். இது தான் உலகில் மரணம் என்று வழங்கப்படும்.

(5) தேஜஸ்ஸமுத்காதம் இருவகை. அவை—அஶுபதேஜஸ்ஸமுத்காதம், ஶுபதேஜஸ் ஸமுத்காதம் என்பன. அவற்றுள் —

(i) **அஶுபதேஜஸ் ஸமுத்காதம் :—** தமக்கு (அயலாரால்) தீங்கு ஏற்படுங் காரணத்தைக்குறித்துக் கடுங்கோபம் கொண்டவராகிய மஹாமுனிவருடைய இடப்புயத்திலிருந்து சிந்தூரவர்ணமும் 12 யோஜனை உயரமும் உடையதாய், (அடியில் ஸூச்யங்குலத்தின் அஸங்க்யேய பாக அளவு அகலமுள்ளதும் முடியில் 9 யோஜனை அகலமுள்ளதும்) அடியில் குறுகியும் முடியில் விரிந்தும் இருப்பதாகிய காகளத்தின் உருவைப்போன்ற ஆத்மப்ரதேஸமானது புறப்பட்டு இடமுறையாகச் சுற்றி மனத்தில் தங்கிய தீங்கினைப் பஸ்மம் செய்து அம் முனிவருடன் அதுவும் பஸ்மமாகும். இந்த அஶுபதேஜஸ்ஸமுத்காதமானது யாதவவம்ஸத்திற்பிறந்த தீபாயனமுனிவருக்கு உண்டாகி,

துவாரகாவதிப்பட்டணத்தைத் தீப்பற்றி எரியச்செய்தது (பஸ்மம் செய்தது.)

(ii) ஶுபதேஜஸ்ஸமுத்காதம்:—உலகத்தில் துர்பிக்ஷம் (பஞ்சம்) வியாதி முதலானவைகளால் பீடிக்கப்படும் ஜனங்களைக் கண்டு தயவுள்ள மஹாமுனிவருடைய வலப் புயத்தினின்றும் அஶுபதேஜஸ்ஸமுத்காதத்தில் கூறப் பட்ட அளவினையுடைய உருவமானது புறப்பட்டு வல முறையாகச் சுற்றி, துர்பிக்ஷம் வியாதி முதலியவற்றை நீக்கி தனது இடத்தில் வந்துசேர்ந்துகொள்ளுந் தன்மை யுடையது.

(6) ஆஹாரஸமுத்காதம்:—மஹாதபஸ்விகள் பரமாக மத்தினுள் கூறப்பட்ட ஸூக்ஷ்மமாகிய பொருள்களை அறியும்போது அவைகளில் அவர்கட்கு ஐயமுண்டாகில், ஒருமுழம் உயரமும் வெண்மைநிறமும் உள்ள உருவ மானது ஶிரஸிலிருந்து புறப்பட்டு மூலஶரீரத்தைவிடாமல் கேவலிகள் இருக்குமிடம் சென்று அவரைக் கண்டவுடன் அம்முனிவர்கட்கு ஐயத்தினை நீக்கி நிஶ்சயத்தை உண்டு பண்ணி, பின்னர், ஓர் அந்தர்முஹூர்த்தத்திற்குள் தன் இடத்தினைச் சேர்ந்துவிடும்.

(7) கேவலஸமுத்காதம் : — கேவலிகளுக்கு (அர்ஹத் பகவானுக்கு) வேதநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்ரம் என்னும் நான்கு அகாதிகர்மங்களுள் ஆயுஷ்யகர்மத்தின் ஸ்திதியானது குறைவாகவும், ஏனைய கர்மங்களின் ஸ்திதி யானது அதிகமாகவும் இருப்பின், அந்தக் கர்மங்களின் ஸ்திதியை ஸமமாகச் செய்தற்கு எட்டு ஸமயங்களில் தண்ட, கவாட, ப்ரதர, லோகபூர்ணம் என்னும் நான்கு

வகையாக அந்தக் கேவலிகளின் ஆத்மப்ரதேஸமானது பரவுதல்.

தண்டம் :—கேவலியின் ஆத்மாவானது மூலஸரீரத்தினும் மூன்று மடங்கு ஸ்தூலமாயும் (பருமனும்) பதினன்கு ரஜ்ஜு உயரமாயும் பரவுதல்.

கவாடம்:—ஆத்மாவானது மூலஸரீரத்தினும் மூன்று மடங்கு ஸ்தூலமாயும் வடக்குத் தெற்கில் ஏழு ரஜ்ஜு அகலமாயும் பரவுதல்.

ப்ரதரம் :—லோகத்தைச் சூழ்ந்திருக்கும் கனேததி, கனவாதம், தநுவாதம் என்னும் மூன்று காற்றுக்களையும் விட்டு உலகத்தினுள் ஆத்மாவானது மட்பாண்டத்தில் நிரம்பியிருக்கும் பால்போல வியாபித்திருத்தல்.

லோகபூர்ணம் :— ஆத்மாவானது மேற்கூறப்பட்ட காற்றுக்களுடன் கூடி உலகமெங்கும் வியாபித்திருத்தல்.

ஸம்ஸாரத்வ வர்ணனை

11. *पुढविजलतेउवाऊ वणप्फदो विविहथावरेइंदो ।
विगतिगचदुपंचक्खा तसजीवा होंति संखादी ॥ ११ ॥

புடவிஜலதேஉவாஊ வணப்ஃபதீ விவிஹதாவரெ இஂதீ । விகதிகசதுபஂசக்கா தஸஜீவா ஹொஂதி ஸஂகாதீ || ௧௧ ||

---

* पृथिवी जलतेजोवायु वनस्पतयो विविधस्थावरैकेन्द्रियाः ।
द्विकत्रिक चतुः पञ्चाक्षाः त्रसजीवा भवन्ति शङ्खादयः ॥

ப்ருதிவீ ஜலதேஜோவாயு வநஸ்பதயோ விவித ஸ்தாவரைகேந்த்ரியா: । த்விகத்ரிக சது: பஞ்சாக்ஷா: த்ரஸ ஜீவா பவந்தி ஶங்காதய: ||

(ப - ரை.) **पुढवि** புடவி - ப்ருத்வீகாயிக ஜீவன், **जल** ஜல - அப்காயிக ஜீவன், **तेउ** தெஉ - அக்னிகாயிக ஜீவன், **वाऊ** வாஊ-வாயுகாயிக ஜீவன், **वणप्पदी** வணப்பதீ - வநஸ்பதி காயிக ஜீவன் ஆகிய இவை, **विविह थावरे इंदी** விவிஹதாவரெ இம்தீ - பலவித தாவரஏகேந்த்ரியஜீவன்களாகின்றன, **संखादी** ஸம்காதீ - சங்கு முதலான, **विगतिगचदुपंचक्खा** விகதிக சஉபம்சக்கா - த்வீந்த்ரியஜீவன் த்ரீந்த்ரியஜீவன் சதுரிந்த்ரியஜீவன் பஞ்சேந்த்ரியஜீவன் ஆகிய இவை, **तसजीवा** தஸஜீவா - த்ரஸஜீவன்களாக, **होंति** ஹொம்தி - ஆகின்றன.

கருத்துரை :—கர்மவஶத்தினால் இறப்பும் பிறப்பும் உடையதாகி, நாற்கதிச்சுழற்சியுருவமாகிய ஸம்ஸாரத்தில் வர்த்திக்கும் ஜீவன் ஸம்ஸாரிஜீவன் எனப்படும்.

ஸம்ஸாரிஜீவன் இருவகை. அவை—ஸ்தாவர ஜீவன், த்ரஸ ஜீவன் என்பன. அவற்றுள்—

ஸ்தாவரஜீவன் :—மண்ணை உடலாகக் கொண்ட ஜீவன், ஜலத்தினை உடலாகக் கொண்ட ஜீவன், அக்நியை உடலாகக் கொண்ட ஜீவன், காற்றை உடலாகக் கொண்ட ஜீவன், மரம் செடி கொடி முதலியன.

த்ரஸஜீவன் :—புழு முதலான த்வீந்த்ரிய ஜீவன், எறும்பு முதலான த்ரீந்த்ரிய ஜீவன், வண்டு முதலான சதுரிந்த்ரிய ஜீவன், மனிதர் முதலான பஞ்சேந்த்ரிய ஜீவன் ஆகிய இவை.

ப்ருத்வீ நான்கு வகை. அவை— **ப்ருத்வீ, ப்ருத்வீ காயம், ப்ருத்வீகாயிகம், ப்ருத்வீஜீவன்** என்பன. அவற்றுள்—

ப்ருத்வீ :—கடினம் முதலான தன்மையினை யுடைய மண். (தூள்)

ப்ருத்வீகாயம் :—ப்ருத்வீகாயிகஜீவன் நீங்கிய செங்கல் முதலியன. அது இறந்த பிணத்திற்குச் சமானமானது.

ப்ருத்வீகாயிகம் :—ப்ருத்வியினை உடலாகக் கொண்ட ஜீவன்.

ப்ருத்வீஜீவன் :—ப்ருத்வீகாய நாம கர்மோதயமுள்ளதும், கார்மணகாயயோகத்துடன் கூடியதும் ஆகி, ப்ருத்வியினை உடலாக ஸ்வீகரித்தற்குச் செல்லும் ஜீவன். (வேறு பிறவியிலிருந்து ப்ருத்வீயாகப் பிறக்கப்போகும் ஜீவன். அதாவது ப்ருத்வியினை அடையாது இடையில் இருக்கும் ஜீவன். இது ப்ருத்வீயாகப் பிறக்கப்போகுந் தன்மையினைக்குறித்து ப்ருத்வீஜீவன் எனப்படும்.) (11)

ஜீவன்களின் விசேஷம்

12. *समणा अमणा णेया पंचेंदिया णिम्मणा परे सव्वे ।
बादर सुहुमेइंदी सव्वे पज्जत्त इदरा य ॥ १२ ॥

ஸமணா அமணா ணேயா பம்சேம்தியா ணிம்மணா பரே ஸவ்வே । பாதரஸுஹுமேஇம்தீ ஸவ்வே பஜ்ஜத்த இதரா ய ॥ ௧௨ ॥

---

* समनसोऽमनसो ज्ञेयाः पञ्चेन्द्रिया निर्मनसः परे सर्वे ।
बादर सूक्ष्मैकेन्द्रियाः सर्वे पर्याप्ता इतरे च ॥

ஸமநஸோऽமநஸோ ஜ்ஞேயா: பஞ்சேந்த்ரியா நிர்மநஸ: பரே ஸர்வே । பாதரஸூக்ஷ்மைகேந்த்ரியா: ஸர்வே பர்யாப்தா இதரே ச ॥

(ப - ரை.) पंचिंदिया பஂசிஂதியா - பஞ்சேந்த்ரிய ஜீவன்கள் (மட்டும்), समणा ஸமணா - மனம் உள்ளவை யென்றும், अमणा அமணா - மனமில்லாதவை யென்றும், णेया ணெயா - அறியத் தகுந்தது, परे பரே - ஏனைய, सव्वे ஸவ்வே - எல்லா ஜீவன்களும், णिम्मणा ணிம்மணா - மனமில்லாதவை, एइंदि ஏஇஂதி - ஏகேந்த்ரிய ஜீவன்கள், बादर பாதர - பாதரஏகேந்த்ரியஜீவன்கள் என்றும், सुहुमा ஸுஹுமா - ஸூக்ஷ்மஏகேந்த்ரியஜீவன்கள் என்றும் இருவகையாகின்றன, सव्वे ஸவ்வே - எல்லாஜீவன்களும், पज्जत्त பஜ்ஜத்த - பர்யாப்திஜீவன்கள் என்றும், इदरा இதரா - அபர்யாப்தி ஜீவன்கள் என்றும் இருவகை யாகின்றன.

கருத்துரை :—பஞ்சேந்த்ரிய ஜீவன்கள் இருவகை. அவை—ஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கள், அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய ஜீவன்கள் என்பன. அவற்றுள்—

ஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கள் :—ஐம்புலன், மனம் ஆகிய ஆறு அறிவையுடைய உயிர்கள்.

அஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கள் :—மனமின்றி ஐம்பொறிகளைமாத்திரம் உடைய உயிர்கள்.

பஞ்சேந்த்ரிய ஜீவன்களுள் சில ஜீவன்களுக்கு ஹ்ருதயத்தினுள் எட்டு இதழ்களுடைய தாமரைவடிவமான மாம்ஸபிண்டம் ஒன்று உளது. அது த்ரவ்யமனம் எனப்படும். கண்மூலமாக "ரூபஜ்ஞானம்" உண்டாதல் போல அந்த த்ரவ்யமனத்தின் மூலமாக அந்தச் சில ஜீவன்களுக்குமட்டும் நாம் கூறும் உபதேஶம் ஶிக்ஷா மந்த்ரம் முதலியவற்றை அறியுந் தன்மை உண்டாகும். அப்படிப்பட்ட ஜீவன்கள் ஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கள் எனப்படும்.

பஞ்சேந்த்ரிய ஜீவன்களுள் உடும்பு ஓணான் முதலான சில ஜீவன்களுக்கு த்ரவ்யமனம் இன்மையினால் உபதேஶம், ஶிக்ஷை, மந்த்ரம் முதலியவற்றை ஸ்வீகரிக்குந் தன்மை இல்லை. அப்படிப்பட்ட ஜீவன்கள் அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய ஜீவன்கள் எனப்படும். (ஏகேந்த்ரிய ஜீவன்முதல் அஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கள் வரை த்ரவ்யமனம் இல்லாதவை.)

ஏகேந்த்ரிய ஜீவன் இருவகை. அவை — பாதர ஏகேந்த்ரிய ஜீவன், ஸூக்ஷ்ம ஏகேந்த்ரிய ஜீவன் என்பன. அவற்றுள்—

பாதர ஏகேந்த்ரிய ஜீவன்:—பிற பொருள்களால் தடுக்கப்படும் ஸ்தூல ஶரீரத்தையுடைய ஓரறிவுள்ள உயிர்.

ஸூக்ஷ்ம ஏகேந்த்ரிய ஜீவன்:—நெருப்பு, நீர், ஆயுதம் முதலியவைகளால் ஏற்படும் பாதைக்கு அகப்படாத நுண்ணிய உடலையுடைய ஓரறிவுள்ள உயிர்.

ஜீவன்கள் அனைத்தும் **பர்யாப்தி, அபர்யாப்தி** என இருவகை ஆகும். அதனால் மொத்தம் பதினான்கு வகை உள. அவை—

(1) **பாதர ஏகேந்த்ரிய பர்யாப்தி, (2) பாதர ஏகேந்த்ரிய அபர்யாப்தி, (3) ஸூக்ஷ்ம ஏகேந்த்ரிய பர்யாப்தி, (4) ஸூக்ஷ்ம ஏகேந்த்ரிய அபர்யாப்தி, (5) த்வீந்த்ரிய பர்யாப்தி, (6) த்வீந்த்ரிய அபர்யாப்தி, (7) த்ரீந்த்ரிய பர்யாப்தி, (8) த்ரீந்த்ரிய அபர்யாப்தி, (9) சதுரிந்த்ரிய பர்யாப்தி, (10) சதுரிந்த்ரிய அபர்யாப்தி, (11) அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய பர்யாப்தி, (12) அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய அபர்யாப்தி, (13) ஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய பர்யாப்தி, (14) ஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய அபர்யாப்தி** என்பன.

- जीवसमास
  - संसारी
    - स्थावर
      - बादरएकेन्द्रिय
        - पर्याप्त (१)
        - अपर्याप्त (२)
      - सूक्ष्मएकेन्द्रिय
        - पर्याप्त (३)
        - अपर्याप्त (४)
    - त्रस
      - द्वीन्द्रिय
        - पर्याप्त (५)
        - अपर्याप्त (६)
      - त्रीन्द्रिय
        - पर्याप्त (७)
        - अपर्याप्त (८)
      - चतुरिन्द्रिय
        - पर्याप्त (९)
        - अपर्याप्त (१०)
      - पंचेन्द्रिय
        - समनस्क
          - पर्याप्त (११)
          - अपर्याप्त (१२)
        - अमनस्क
          - पर्याप्त (१३)
          - अपर्याप्त (१४)
  - मुक्त

பர்யாப்தி—(முற்றும் செய்து முடிந்த ஒரு வேலையைப் பூர்ணமானது என்று கூறுதல் போல)ஶக்தியானது பூர்த்தியாதல்.

அபர்யாப்தி—(முடிவு பெறாத வேலையைப் பூர்ணமாகவில்லை என்று கூறுதல் போல) ஶக்தியானது பூர்ணமாகாமலிருத்தல்.

*आहार सरीरिंदिय पज्जत्ती आणपाण भासमणो ।
चत्तारी पंच छप्पिय एइंदिय वियल सण्णीणं ॥ (गोमटसार)

*பர்யாப்தி ஆறுவகை. அவை — ஆஹாரபர்யாப்தி ஶரீரபர்யாப்தி, இந்த்ரியபர்யாப்தி, உச்ச்வாஸநிஶ்ஶ்வாஸ பர்யாப்தி, பாஷாபர்யாப்தி, மந:பர்யாப்தி என்பன. அவற்றுள்—

ஆஹாரபர்யாப்தி:—உடலுக்கு வேண்டிய புத்கல பிண்டத்தினை ஸ்வீகரித்தபின்னர் அதனை வஜ்ரபாகமாகவும் (கெட்டியாகவும்) ரஸபாகமாகவும் மாற்றும் ஶக்தியானது பூர்த்தியடைதல்.

ஶரீரபர்யாப்தி :—(அந்தப்) புத்கலபிண்டத்திலிருந்து மூளை முதலான கெட்டியான அம்ஶங்களும் ரக்தம் முதலான ரஸபாகங்களும் தனித்தனியாக மாறும்படி செய்யும் ஶக்தியானது பூர்த்தியடைதல்.

இந்த்ரிய பர்யாப்தி— ஸ்பர்ஶம் முதலான ஐம்பொறிகளின் விஷயத்தை ஸ்வீகரிக்கும் ஶக்தியானது பூர்த்தியடைதல்.

உச்ச்வாஸ நிஶ்ஶ்வாஸ பர்யாப்தி :—ஶ்வாஸத்தினை வெளியிடுதற்குரிய ஶக்தியானது பூர்த்தியாதல்.

பாஷாபர்யாப்தி :—பாஷாவர்க்கணையிலிருந்து வந்த புத்கலபரமாணுக்களை வார்த்தைகளாக மாற்றும் ஶக்தியானது பூர்ணமாதல்.

மந:பர்யாப்தி :—மனோவர்க்கணையினால் உண்டான த்ரவ்யமனத்தின் உதவியினால் பார்த்ததும் கேட்டதும் அனுபவித்ததுமாகிய விஷயங்களை நினைப்பிற்குத் தரும் ஶக்தியானது பூர்த்தி யடைதல்.

பர்யாப்தி ஆறனுள் ஏகேந்த்ரியஜீவன்கட்கு ஆஹார பர்யாப்தி, ஶரீரபர்யாப்தி, இந்த்ரியபர்யாப்தி, உச்ச்வாஸ நிஶ்ஶ்வாஸபர்யாப்தி ஆகிய இவை நான்குமாத்திரம் இருக்கும். த்வீந்த்ரிய த்ரீந்த்ரிய சதுரிந்த்ரிய அஸம்ஜ்ஞி பஞ்சேந்த்ரிய ஜீவன்கட்கு மனம் தவிர ஏனைய ஐந்து பர்யாப்திகள்மாத்திரம் இருக்கும். ஸம்ஜ்ஞிபஞ்சேந்த்ரிய ஜீவன்கட்கு ஆறுபர்யாப்திகளும் இருக்கும். (12)

மார்க்கணாஸ்தான குணஸ்தானங்களின் வர்ணனை

*13. मग्गणगुणठाणेहि य चउदसहि हवंति तह असुद्धणया ।
विण्णेया संसारी सव्वे सुद्धा हु सुद्धणया ॥ १३ ॥

𑌮𑌗𑍍𑌗𑌣 𑌗𑍁𑌣𑌠𑌾𑌣𑍇𑌹𑌿 𑌯 𑌚𑌉𑌦𑌸𑌹𑌿 𑌹𑌵𑌂𑌤𑌿
𑌤𑌹 𑌅𑌸𑍁𑌦𑍍𑌧𑌣𑌯𑌾 । 𑌵𑌿𑌣𑍍𑌣𑍇𑌯𑌾 𑌸𑌂𑌸𑌾𑌰𑍀 𑌸𑌵𑍍𑌵𑍇
𑌸𑍁𑌦𑍍𑌧𑌾 𑌹𑍁 𑌸𑍁𑌦𑍍𑌧𑌣𑌯𑌾 ॥ ௧௩ ॥

---

* मार्गणागुणस्थानैश्च चतुर्दशभिर्भवन्ति तथा शुद्धनयात् ।
विज्ञेयाः संसारिणः सर्वे शुद्धाः खलु शुद्धनयात् ॥

𑌮𑌾𑌰𑍍𑌗𑌣𑌾𑌗𑍁𑌣𑌸𑍍𑌥𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌭𑌿𑌰𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿
𑌤𑌥𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌨𑌯𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇
𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌃 𑌖𑌲𑍁 𑌶𑍁𑌦𑍍𑌧𑌨𑌯𑌾𑌤𑍍 ॥

(ப - ரை.) संसारी ஸம்ஸாரீ - ஸம்ஸாரிஜீவன்கள், असुद्धणया அஸுத்தணயா - அஶுத்த நிச்சய நயத்தினல், चउदसहि சஉதஸஹி - பதினன்கு வகை, मग्गणगुणठाणेहिय மக்கணகுணடாணேஹிய - மார்க்கணஸ்தானம் குணஸ்தானம் ஆகிய இவற்ருல், तह தஹ-(முன்னர்க் கூறப் பட்ட) பதினன்கு வகைகளாக, हवंति ஹவந்தி - ஆகின்றன வென்றும், सव्वे ஸவ்வே - எல்லாஜீவன்களும், सुद्धणया ஸுத்தணயா - ஶுத்தநிச்சய நயத்தினல், हु ஹு - நிச்சய மாக, सुद्धा ஸுத்தா - ஶுத்தமானவை என்றும், विण्णेया விண்ணேயா - அறியத் தகுந்தன.

கருத்துரை :—பதினன்கு வகை மார்க்கணஸ்தானங் களினும் பதினன்கு வகை குணஸ்தானங்களினும் ஸம்ஸாரிஜீவன்கள் பதினன்கு வகையாகின்றன. நிச்சயத்தினல் எல்லாம் ஒரே வகையாவன.

*गइ इंदियेय काये जोगे वेदे कसाय णाणेय ।
संजम दंसण लेस्सा भविया सम्मत्त सण्णि आहारे ॥ (गोमटसार)

*மார்க்கணஸ்தானம் பதினன்கு வகை. அவை—கதி, இந்த்ரியம், காயம், யோகம், வேதம், கஷாயம், ஜ்ஞானம், ஸம்யமம், தர்ஶனம், லேஶ்யை, பவ்யத்வம், ஸம்யக்த்வம், ஸம்ஜ்ஞீ, ஆஹாரம் என்பன. அவற்றுள்—

1. கதி மார்க்கண நான்கு வகை. அவை — நரக கதி, திர்யக்கதி, மனுஷ்யகதி, தேவகதி என்பன.

2. இந்த்ரியமார்க்கண ஐந்து வகை. அவை — ஸ்பர்ஶனம், ரஸனம், க்ராணம், சக்ஷுஃ, ஶ்ரோத்ரம் என்பன.

3. **காயமார்க்கணு** ஆறு வகை. அவை—ப்ருத்வீ, ஜலம், அக்நி, வாயு, வநஸ்பதி, த்ரஸகாயம் என்பன.

4. **யோகமார்க்கணு** மூன்று வகை. அவை—மனோ யோகம், வசனயோகம், காயயோகம் என்பன. (இது விஸ்தாராபேக்ஷயினுல் 15 வகையும் உண்டு.)

5. **வேதமார்க்கணு** மூன்று வகை. அவை—ஸ்த்ரீ வேதம், பும்வேதம், நபும்ஸகவேதம் என்பன.

6. **கஷாயமார்க்கணு** இருபத்தைந்து வகை. அவை—அனந்தாநுபந்தி க்ரோதம், அனந்தாநுபந்தி மானம், அனந்தாநுபந்தி மாயை, அனந்தாநுபந்தி லோபம்; அப்ரத்யாக்யாந க்ரோதம், அப்ரத்யாக்யாந மானம், அப்ரத்யாக்யாந மாயை, அப்ரத்யாக்யாநலோபம்; ப்ரத்யாக்யாந க்ரோதம், ப்ரத்யாக்யாந மானம், ப்ரத்யாக்யாந மாயை, ப்ரத்யாக்யாந லோபம்; ஸஞ்ஜ்வலந க்ரோதம், ஸஞ்ஜ்வலந மானம், ஸஞ்ஜ்வலந மாயை, ஸஞ்ஜ்வலந லோபம்; ஹாஸ்யம், ரதி, அரதி. ஶோகம், பயம், ஜுகுப்ஸை, ஸ்த்ரீவேதம், பும்வேதம், நபும்ஸகவேதம் என்பன.

7. **ஜ்ஞானமார்க்கணு** எட்டு வகை. அவை—குமதி, குஶ்ருத, குஅவதி(விபங்க), மதி, ஶ்ருத அவதி, மநஃபர்யய, கேவலம் என்பன.

8. **ஸம்யமமார்க்கணு** ஐந்து வகை. அவை—ஸாமாயிகம், சேதோபஸ்தாபன, பரிஹாரவிஶுத்தி, ஸூக்ஷ்ம ஸாம்பராயம், யதாக்யாத சாரித்ரம் என்பன.

9. **தர்ஶனமார்க்கணு** நான்கு வகை. அவை—சக்ஷுர்தர்ஶனம், அசக்ஷுர்தர்ஶனம், அவதிதர்ஶனம், கேவலதர்ஶனம் என்பன.

10. லேஶ்யாமார்க்கணை ஆறு வகை. அவை— க்ருஷ்ண லேஶ்யை, நீல லேஶ்யை, காபோத லேஶ்யை, பீதலேஶ்யை, பத்மலேஶ்யை, ஶுக்லலேஶ்யை என்பன.

11. பவ்யமார்க்கணை இரு வகை. அவை — பவ்ய மார்க்கணை, அபவ்யமார்க்கணை என்பன.

12. ஸம்யக்த்வமார்க்கணை ஆறு வகை. அவை — உபஶமம், வேதகம், க்ஷாயிகம், மித்யாத்வம், ஸாஸாதனம், ஸம்யங்மித்யாத்வம் என்பன.

13. ஸம்ஜ்ஞிமார்க்கணை இரு வகை. அவை—ஸம்ஜ்ஞி மார்க்கணை, அஸம்ஜ்ஞிமார்க்கணை என்பன.

14. ஆஹாரமார்க்கணை இரு வகை. அவை—ஆஹாரகம், அநாஹாரகம் என்பன.

*मिच्छो सासणमिस्सो अविरद सम्मोय देसविरदोय ।
विरदापमत्त इदरो अपुव्व अणियट्ठि सुहुमोय ॥
उवसंत खीणमोहो सजोगी केवलिजिणो अजोगीय ।
चउदस जीवसमासा कमेण सिद्धाय णादव्वा ॥ (गोमटसार)

*குணஸ்தானம் பதினான்கு வகை. அவை—மித்யாத்வ குணஸ்தானம், ஸாஸாதன ஸம்யக்த்வ குணஸ்தானம், மிஶ்ர குணஸ்தானம், அவிரதஸம்யக்த்வ குண......ம், தேஶவிரதிகுண......ம், ப்ரமத்தகுண......ம், அப்ரமத்த குண......ம், அபூர்வகரண குண......ம், அநிவிருத்திகரண குண......ம், ஸூக்ஷ்ம ஸாம்பராய குண......ம், உபஶாந்த கஷாயகு...ம், க்ஷீணகஷாயகுண......ம், ஸயோக கேவலி குண......ம், அயோககேவலி குண......ம் என்பன. அவற்றுள்—

1. **மித்யாத்வ குணஸ்தானம்** :—மித்யாத்வம் என்னும் தர்ஸனமோஹநீயகர்மோதயத்தினுல் ஆப்தாகம பதார்த்தங்களுள் (தத்த்வங்களுள்) விபரீத நம்பிக்கை யுண்டாதற்கு உரிய எண்ணம் (பரிணுமம்) இருத்தல்.

मिथ्यात्वं विदन् जीवो विपरीतदर्शनो भवति ॥ (17 गोमटसार)

2. **ஸாஸாதநஸம்யக்த்வ குணஸ்தானம்** :—ஸம்யக்த்வமும் மித்யாத்வமும் இல்லாத குணஸ்தானம். ஸம்யக்த்வத்திற்கும் மித்யாத்வத்திற்கும் இடையில் உண்டாகும் பரிணுமம். அதாவது—மித்யாத்வம், ஸம்யங்மித்யாத்வம், ஸம்யக்த்வப்ரக்ருதி, அனந்தாநுபந்திக்ரோதம், அனந்தாநுபந்தி மானம், அனந்தாநுபந்தி மாயை, அனந்தாநுபந்தி லோபம் ஆகிய இவைகளின் உபஸமத்தினுல் (அடக்கத்தினுல்) உண்டான ஸம்யக்த்வமானது, (அனந்தாநுபந்திக்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவை நான்கனுள் யாதானுமொன்றன் உதயத்தினுல்) நீங்கி, மித்யாத்வத்தினை அடைதற்குமுன்னர் உண்டாகும் பரிணுமம். அதாவது—ஸம்யக்த்வத்தினை விட்டு நீங்கி மித்யாத்வத்தினை அடையும்முன் இடையில் உண்டாவதாகிய (எண்ணம்) பரிணுமம். அது மலையின் உச்சியிலிருந்து விழுந்த மனிதன் பூமியை அடைதற்குமுன் இடையில் இருத்தல் போல்வது. (மலையிலிருந்து விழுந்து விட்டான்; பூமியை வந்து சேரவில்லை. அதற்கிடையில் இருத்தல் போல்வது.)

आदिमसम्यक्त्वाद्धा आसमयतः षडावलिरिति वा शेषे ।
अनान्यतरोदयात् नाशितसम्यक्त्व इति सासनाख्यः सः ।
सम्यक्त्वरत्नपर्वत शिखरात् मिथ्यात्वभूमि समभिमुखः ॥
(19-20 गोमटसार)

3. மிஶ்ர குணஸ்தானம்:—மித்யாத்வமும் ஸம்யக்த்வமும் கலந்த குணஸ்தானம். அதாவது—மித்யாத்வம் முதலான ஏழு ப்ரக்ருதிகளுள் ஒன்றாகிய ஸம்யங்மித்யாத்வ கர்மத்தின் உதயத்தினால் முற்றும் உணருந் தன்மையினையுடைய ஸ்ரீ ஜிநபகவான் உரைத்த நல்வழியிலும், முற்றும் உணருந் தன்மையில்லாதவர் உரைத்த கெட்டவழியிலும் ஸமானமான பரிணாமம் உண்டாதல். அது வெல்லத்தின் இனிமையான சுவையும் தயிரின் புளிப்பான சுவையும் கலந்து மற்றொரு சுவையாதல் போல்வது.

सम्यग्मिथ्यात्वोदयेन च जात्यन्तरसर्वघातिकार्येण ।
च न सम्यक्त्वं मिथ्यात्वमपि च सम्मिश्रो भवति परिणामः ॥
दधिगुडमिव व्यामिश्रं पृथग्भावं नैव कर्तुं शक्यम् ।
एवं मिश्रक भावः सम्यग्मिथ्यात्वमिति ज्ञातव्यम् ॥ (21-22 गोमटसार)

4. அவிரதஸம்யக்த்ருஷ்டி குணஸ்தானம்: — விரதமில்லாமல் ஸம்யக்தவம்மாத்திரம் உடைய குணஸ்தானம். அதாவது —மித்யாத்வம்முதலான ஏழு ப்ரக்ருதி (கர்மங்)களின் உபஶமத்தினால் (அடக்கத்தினால்) உபஶம ஸம்யக்த்வமும், க்ஷபத்தினால் (கேட்டினால்) க்ஷாயிக ஸம்யக்த்வமும், ஸம்யக்த்வப்ரக்ருதிஎன்கின்ற கர்மத்தின் உதயம், ஏனைய ஆறுகர்மங்களுள் சிலபாகம் க்ஷயம், சிலபாகம் உபஶமம் ஆகிய இவைகளினால் க்ஷாயோபஶமிக (வேதக) ஸம்யக்த்வமும் உண்டாகும். அப்ரத்யாக்யானக்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவைகளின் உதயத்தினால் விரதம் ஆசரித்தற்கு இயலுவதில்லை. இவ்வகையான பரிணாமம் இருப்பது அவிரதஸம்யக்த்ருஷ்டி-குணஸ்தானம் எனப்படும்.

सम्यक्त्वदेशघातेरुदयात् वेदकं भवेत् सम्यक्त्वम्।
सप्तानामुपशमत उपशम सम्यक्त्वं क्षयात्तु क्षायिकं च।
द्वितीयकषायोदयादसंयतं भवति सम्यक्त्वं च ॥ (25-26 गोमटसार)

5. தேஶவிரதிகுணஸ்தானம் :— அணுவிரதத்தினை யுடைய குணஸ்தானம். அதாவது—சாரித்ரமோஹநீய கர்மத்தின் இரண்டாவது மூலபேதமாகிய அப்ரத்யாக்யாநக்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவைகளின் உபஶமத்தினாலும், மூன்றாவது மூலபேதமாகிய ப்ரத்யாக்யாநக்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவைகளின் உதயத்தினாலும் சில பாபகார்யங்களை விடுவதாகிய சாரித்ரம் (நன்னடத்தை) உண்டாதல்.

प्रत्याख्यानोदयात् संयमभावो न भवति नवरिं तु।
स्तोकव्रतं भवति ततो देशतो भवति पञ्चमः ॥ (30 गोमटसार)

இது, அணுவிரதம் குணவிரதம் ஶிக்ஷாவிரதம் பதினொருநிலை ஆகிய பலவகைகளாய் உள்ளது. இதனை ரத்னகரண்டகம், அருங்கலச்செப்பு, தத்த்வார்த்த ஸூத்ரம் தமிழுரை முதலியவற்றில் விரிவாகக் காண்க.

6. ப்ரமத்தஸம்யதகுணஸ்தானம் :—மஹா விரதத்தினைத் தரிக்கவொட்டாமல் தடுப்பதாகிய ப்ரத்யாக்யாநக்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவைகளின் உபஶமத்தினாலும், ஸஞ்ஜ்வலநக்ரோதம் மானம் மாயை லோபம் ஹாஸ்யம் முதலான ஒன்பது நோகஷாயம் ஆகிய இவைகளின் உதயத்தினாலும், பஞ்ச பாபங்களை விடுவதாகிய ஸகலசாரித்ரம் (மஹாவிரதம்) உண்டாகும் இடம். இந்தக் குணஸ்தானத்தில் துஸ்ஸ்வப்நம்முதலான ப்ரமாதங்கள் உண்டாகுமாதலால் இது ப்ரமத்தகுணஸ்தானமெனப்படும். இந்தக் குணஸ்தானத்தில் இருப்பவர்களை

மஹாவிரதி யென்றும் திகம்பரயதி யென்றும் நிர்க்ரந்த ரென்றும் முனிக ளென்றும் கூறுவர்.

संज्वलननोकषायाणा मुदयात्संयमो भवेद्यस्मात् ।
मलजननप्रमादोऽपि च तस्मात्खलु प्रमत्तविरतः सः ॥ (32 गोमटसार)

7. **அப்ரமத்த குணஸ்தானம்:**—ஸஞ்ஜ்வலந கஷாயம் நான்கும், நோகஷாயம் ஒன்பதும் ஆகிய இவைகளின் மந்தோதயத்தினல் ப்ரமாதமில்லாததும் ஸகலவிரதகுண ஶீலம் உடையதும் ஆகியஶுத்தாத்மதத்வபாவனை யுண்டாகும். அது அப்ரமத்தஸம்யதகுணஸ்தானம் எனப்படும்.

संज्वलननोकषायाणामुदयो मन्दो यदा तदा भवति ।
अप्रमत्तगुणस्तेन च अप्रमत्तः संयतो भवति ॥
नष्टाशेषप्रमादो व्रतगुणशीलावलिमण्डितो ज्ञानी ।
अनुपशमः अक्षपको ध्याननिलीनो हि अप्रमत्तः ॥ (45-46 गोमटसार)

8. **அபூர்வகரணகுணஸ்தானம்:** — (அப்ரத்யாக்யானக்ரோதம் முதலான பன்னிரண்டும் ஹாஸ்யம் முதலான ஒன்பது நோகஷாயமும் சேர்ந்து இருபத்தொரு கர்மப்ரக்ருதிகள் உபஶமம் அல்லது க்ஷயம் அடையும் போது அதஃப்ரவ்ருத்தகரணம் அபூர்வகரணம் அநிவ்ருத்தி கரணம் என மூன்று பரிணமங்கள் உண்டாகின்றன. அவைகளுள் முதலாவதாகிய அதஃப்ரவ்ருத்திகரணம் ஏழாவது குணஸ்தானத்தில் உண்டாகும். அதன்காலம் அந்தர்முஹூர்த்தமாகும். கரணம் என்பதற்குப் பரிணமம் என்று பொருள். இரண்டாவது மூன்ருவது முதலிய ஸமயங்களில் இருக்கும் ஜீவன்களுடைய விஶுத்தமான பரிணமங்கள் முதல்ஸமயம் முதலியவைகளில் இருக்கும் ஜீவன்களுடைய விஶுத்தமானபரிணமங்களுக்குச் சமமாக இருப்பதனல் இந்தப் பரிணமத்திற்கு அதஃப்ர

வ்ருத்தி கரணம் என்று பெயர்.) அதஃப்ரவ்ருத்தி கரணத்திற்குப்பின்னர் ஒவ்வொரு ஸமயத்திலும் ஶுத்தி யடைவதும் அபூர்வமானதும் ஆகிய பரிணாமங்கள் உண்டாகின்றன. பூர்வோத்தர ஸமயங்களில் இருக்கும் பரிணாமங்கள் பரஸ்பரம் ஸமானம் இன்றியும், ஸமான ஸமயத்தில் இருக்கும் அநேகஜீவன்களுடைய பரிணாமங்கள் பரஸ்பரம் ஸமானமாயும் ஸமானமின்றியும் இருக்கும். இப்படிப்பட்ட அபூர்வபரிணாமத்திற்கு அபூர்வகரண குணஸ்தானம் என்று பெயர். இதன் காலம் அந்தர் முஹூர்த்தமாகும்.

एकविंशतिमोह क्षपणोपशमनिमित्तानि त्रिकरणानि तेषु ।
प्रथममधःप्रवृत्तं करणंतु करोति अप्रमत्तः ॥ 47 ॥

यस्मादुपरितनभावा अधस्तनभावैः सदृशका भवन्ति ।
तस्मात् प्रथमं करणमधःप्रवृत्तमिति निर्दिष्टम् ॥ 48 ॥

अन्तर्मुहूर्तकालं गमयित्वा अधःप्रवृत्तकरणं तत् ।
प्रतिसमयं शुध्यन् अपूर्वकरणं समाश्रयति ॥ 50 ॥

एतस्मिन् गुणस्थाने विसदृशसमयस्थितैर्जीवैः ।
पूर्वमप्राप्ता यस्मात् भवति अपूर्वा हि परिणामाः ॥ 51 ॥

भिन्नसमयस्थितैस्तु जीवैर्न भवति सर्वदा सादृश्यम् ।
करणैरेकसमयस्थितैः सादृश्यं वैसादृयं वा ॥ 52 ॥ (गोमटसार)

9\. அநிவ்ருத்திகரணகுணஸ்தானம் :— இந்தக் குணஸ்தானத்தின் காலமாகிய அந்தர்முஹூர்த்தத்தில் எத்தனை ஸமயங்கள் இருக்கின்றனவோ அத்தனைப் பரிணாமங்கள் இந்தக் குணஸ்தானத்தில் இருக்கும். இந்தப் பரிணாமங்கள் நிர்மலமான த்யானமாகிற அக்னியினால் கர்மமாகிற வனத்தைத் தஹிக்கக்கூடியவைகளாய் இருக்கின்றன. வேறு வேறு ஸமயங்களில் இருக்கும் ஜீவன்களுடைய பரிணாமங்கள் ஸமானமின்றியும், ஸமான

ஸமயங்களில் இருக்கும் ஜீவன்களுடைய பரிணாமங்கள் ஸமானமாயும் இருக்கும். இதற்கு அநிவ்ருத்திகுண ஸ்தானம் என்று பெயர்.

भवन्ति अनिवर्तिनस्ते प्रतिसमयं येषामेकपरिणामा ।
विमलतरध्यानाहुतवह्निशिखाभिर्निर्दग्धकर्मवना: ॥ (57 गोमटसार)

10. ஸூக்ஷ்மஸாம்பராயகுணஸ்தானம் :— ஸூக்ஷ்மமான ஸஞ்ஜ்வலனலோபகஷாயம்மாத்திரம் இருக்குமிடம். சாயம் தோய்த்த கௌஸும்பவஸ்த்ரத்தினைத் தண்ணீரில் நனைத்துத் துவைத்தபின்னர் அதன் வர்ணம் ஸூக்ஷ்மமாகக் காண்பதுபோல ஸூக்ஷ்ம லோப கஷாயத்தின் அனுபவம்மாத்திரம் உள்ள பரிணாமம்.

धौतकौसुम्भवस्त्रं भवति यथा सूक्ष्मरागसंयुक्तम् ।
एवं सूक्ष्मकषाय: सूक्ष्मराग: इति ज्ञातव्य: ॥ (59 गोमटसार)

11. உபஶாந்தகஷாயகுணஸ்தானம் :— சேற்றுடன் கலந்த நீரில் தேற்றாங்கொட்டையைத் தேய்ப்பின் சேறானது கீழ்நின்று நீர் தெளிதல்போலவும், ஶரத்காலத்தில் குளங்களில் நீர் தெளிந்திருத்தல் போலவும் அப்ரத்யாக்யானக்ரோதம் முதலான இருபத்தொரு மோஹநீய கர்மப்ரக்ருதிகள் உபஶமபாவததினை அடைவதனால் உண்டாகும் நிர்மலமான பரிணாமம்.

कतकफलयुतजलं वा शरदि सर: पानीयं व निर्मलम् ।
सकलोपशान्तमोह उपशान्त कषायो भवति ॥ (61 गोमटसार)

12. க்ஷீணகஷாயகுணஸ்தானம் :— மோஹநீயகர்மம் முற்றும் நசித்தபின்னர் உண்டாகும் நிர்மலமான பரிணாமம். அது நிர்மலமான ஸ்படிகபாத்திரத்தில் வைக்கப்பட்ட சுத்தமான (தெளிவான) நீரைப்போன்றது.

नि:शेषक्षीणमोह: स्फटिकामलभाजनोदकसमचित्त: ।
क्षीणकषायो भण्यते निर्ग्रन्थो वीतरागै: ॥ (62 गोमटसार)

13. **ஸயோகிகேவலிகுணஸ்தானம் :**—கேவலஜ்ஞான முடையவரும் காயயோகம் ஒன்றுமாத்திரம் உள்ளவரும் ஆகிய அர்ஹத்பகவான் இருக்கும் இடம். (கேவலஜ்ஞானத்தினை அடைந்த கேவலிபகவானுக்குக் காயயோகம் இருத்தலால் அவர் ஸயோககேவலி எனப்படுவார். ஸயோககேவலிக்கு உண்டாகும் அவஸ்தை ஸயோகிகேவலிகுணஸ்தானம் எனப்படும்.)

असहायज्ञानदर्शनसहितः इति केवली हि योगेन ।
युक्त इति सयोगिजिनः अनादिनिधनार्षे उक्तः ॥ (64 गोमटसार)

14. **அயோகிகேவலிகுணஸ்தானம் :**—ஸமஸ்த கர்மங்களின் ஆஸ்ரவத்தைத் தடுத்தவரும் ஶீலங்களையுடையவரும் கர்மங்களாகின்ற பாசு இல்லாதவரும் காயயோகமில்லாதவரும் அயோககேவலி யாவர். அந்த அவஸ்தை யடைதல் அயோகிகேவலிகுணஸ்தானம் எனப்படும்.

शीलैश्यं संप्राप्तः निरुद्ध निःशेषास्रवो जीवः ।
कर्मरजोविप्रमुक्तः गतयोगः केवली भवति ॥ (65 गोमटसार)

ஸித்தத்வலக்ஷணமும் ஊர்த்வகதிலக்ஷணமும்

14. *णिक्कम्मा अट्ठगुणा किंचूणा चरमदेहदो सिद्धा ।
लोयग्गठिदा णिच्चा उप्पादवएहिं संजुत्ता ॥ १४ ॥

𑌣𑌿𑌕𑍍𑌕𑌮𑍍𑌮𑌾 𑌅𑌟𑍍𑌠𑌗𑍁𑌣𑌾 𑌕𑌿𑌂𑌚𑍂𑌣𑌾 𑌚𑌰𑌮𑌦𑍇𑌹𑌦𑍋 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 ।
𑌲𑍋𑌯𑌗𑍍𑌗𑌠𑌿𑌦𑌾 𑌣𑌿𑌚𑍍𑌚𑌾 𑌉𑌪𑍍𑌪𑌾𑌦𑌵𑌏𑌹𑌿 𑌸𑌂𑌜𑍁𑌤𑍍𑌤𑌾 ॥ ௧௪ ॥

---

* निष्कर्माणोऽष्टगुणाः किञ्चिदूनाश्चरमदेहतस्सिद्धाः ।
लोकाग्रस्थिता नित्या उत्पादव्ययाभ्यां संयुक्ताः ॥

𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋𑌽𑌷𑍍𑌟𑌗𑍁𑌣𑌾𑌃 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍂𑌨𑌾𑌶𑍍𑌚𑌰𑌮𑌦𑍇𑌹𑌤𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌃। 𑌲𑍋𑌕𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌵𑍍𑌯𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 ॥

(ப - ரை.) **णिक्कम्मा** ணிக்கம்மா - த்ரவ்யகர்மம் பாவகர்மம் ஆகிய இவைகளிலிருந்து நீங்கினவரும் (கர்மங்களைக் கெடுத்தவரும்), **अट्ठगुणा** அட்டகுணா - க்ஷாயிக ஸம்யக்த்வம் முதலான எட்டுக்குணங்களை யுடையவரும், **चरमदेहदो किंचूणा** சரமதேஹதோ கிஞ்சூணா - கடைசியான ஶரீரத்தினின்றும் கொஞ்சம் குறைவான உருவமுள்ளவரும் அதாவது எந்த ஶரீரத்திலிருந்து முக்தியடையப் படுகிறதோ அந்த ஶரீரத்தினின்றும் சிறிதளவுகுறைவான உருவமுள்ளவரும், **लोयग्गठिदा** லோயக்கடிதா - உலகத்தின் உச்சியில் (மேல்பாகத்தில்) இருப்பவரும், **णिच्चा** ணிச்சா - நித்யரும், **उप्पादवएहिं संजुत्ता** உப்பாதவயஹிம் ஸம்ஜுத்தா - உற்பத்தி (தோன்றுதல்) வ்யயம் (அழிதல்) த்ரௌவ்யம் (இருத்தல்) ஆகிய தன்மைகளை யுடையவரும், **सिद्धा** ஸித்தா - ஸித்தபரமேஷ்டியாவர்.

கருத்துரை :—ஸித்தபரமேஷ்டிகள் ஜ்ஞாநாவரணம் முதலான எட்டுக்கர்மங்களைக் கெடுத்தவராயும் க்ஷாயிக ஸம்யக்த்வம்முதலான எட்டுக்குணங்களுள்ளவராயும் உலகத்தின் மேல்பாகத்தில் இருப்பவராயும் நித்யராயும் இருப்பர்,

கர்மம் எட்டுவகை : அவை— ஜ்ஞாநாவரணம், தர்ஶநாவரணம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், அந்தராயம் என்பன.

குணங்கள் எட்டு :—க்ஷாயிக ஸம்யக்த்வம், அனந்த ஜ்ஞாநம், அனந்த தர்ஶநம், அனந்த வீர்யம், அவ்யாபாதத்வம், அகுருலகுத்வம், ஸூக்ஷ்மத்வம், அவகாஹநத்வம் என்பன.

ஜ்ஞாநாவரணம் கெடுதலால் அனந்தஜ் ஞானமும், தர்ஶநாவரணம் கெடுதலால் அனந்த தர்ஶனமும், வேதநீயம் கெடுதலால் அவ்யாபாதத்வமும், மோஹநீயம் கெடுதலால் க்ஷாயிகஸம்யக்த்வமும், ஆயுஷ்ய கர்மம் கெடுதலால் அவகாஹநத்வமும், நாமகர்மம் கெடுதலால் ஸூக்ஷ்மத்வமும், கோத்ரகர்மம் கெடுதலால் அகுரு லகுத்வமும், அந்தராயம் கெடுதலால் அனந்தவீர்யமும் உண்டாகும்.

இயற்கையான ஊர்த்வகதி லக்ஷணம்

* पयडिट्ठिदिअणुभागप्पदेसबंधेहि सव्वदोमुक्को ।
उड्ढं गच्छदि सेसा विदिसावज्जं गदिं जंति ॥

𑌪𑌯𑌡𑌿𑌟𑍍𑌠𑌿𑌦𑌿𑌅𑌣𑍁𑌭𑌾𑌗𑌪𑍍𑌪𑌦𑍇𑌸𑌬𑌂𑌧𑍇𑌹𑌿 𑌸𑌵𑍍𑌵𑌦𑍋𑌮𑍁𑌕𑍍𑌕𑍋 । 𑌉𑌡𑍍𑌢𑌂 𑌗𑌚𑍍𑌛𑌦𑌿 𑌸𑍇𑌸𑌾 𑌵𑌿𑌦𑌿𑌸𑌾𑌵𑌜𑍍𑌜𑌂 𑌗𑌦𑌿𑌂 𑌜𑌂𑌤𑌿 ॥

(ப - ரை.) पयडि......बंधेहि 𑌪𑌯𑌡𑌿......𑌬𑌂𑌧𑍇𑌹𑌿 - ப்ரக்ருதி ஸ்திதி அநுபாகம் ப்ரதேஶம் என்னும் நான்கு வகை பந்தங்களிலிருந்து, सव्वदो 𑌸𑌵𑍍𑌵𑌦𑍋 - முற்றும், मुक्को 𑌮𑍁𑌕𑍍𑌕𑍋 - விடப்பட்ட ஆத்மாவானது, उड्ढं 𑌉𑌡𑍍𑌢𑌂 - மேலுக்கு, गच्छति 𑌗𑌚𑍍𑌛𑌦𑌿 - செல்லும், सेसा 𑌸𑍇𑌸𑌾 - ஏனைய ஆத்மாக்கள், विदिसावज्जं 𑌵𑌿𑌦𑌿𑌸𑌾𑌵𑌜𑍍𑌜𑌂-விதிக்குக்களை அதாவது அக்நி நிருதி வாயு ஈஶான திக்குக்களை விட்டு, गदिं 𑌗𑌦𑌿𑌂 - கதியை (பிறவியை), जंति 𑌜𑌂𑌤𑌿 - அடையும்.

---

* प्रकृतिस्थित्यनुभागप्रदेशबन्धैः सर्वतो मुक्तः ।
ऊर्ध्वं गच्छति शेषाः विदिशावर्ज्यां गतिं यान्ति ॥

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌭𑌾𑌗𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌬𑌨𑍍𑌧𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 । 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌶𑍇𑌷𑌾𑌃 𑌵𑌿𑌦𑌿𑌶𑌾𑌵𑌰𑍍𑌜𑍍𑌯𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 ॥

கருத்துரை :—ப்ரக்ருதி, ஸ்திதி, அநுபாகம், ப்ரதேஸம் என்னும் பந்தங்களிலிருந்து விடுபட்ட முக்தாத்மாமாத்திரம் ஒரு ஸமயநேரத்தில் மேலுக்கு (முக்திஸ்தானத்திற்கு)ப் போகுந் தன்மையுடையதாகும். ப்ரக்ருதிமுதலான பந்தங்களுடன்கூடிய ஆத்மாக்கள் மறுபிறவி பிறக்கச் செல்லும்போது அக்நி (தென் கிழக்கு) நிருதி (தென்மேற்கு) வாயு (வடமேற்கு) ஈஸானம் (வடகிழக்கு) ஆகிய இந் நான்கு மூலைகளையும் விட்டு, கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு மேல் கீழ் ஆகிய இடங்கட்குச் செல்லும்.

குறிப்பு :—ஸம்ஸாரிஜீவன்கள் ஒரு கதியை விட்டு (ஒரு பிறவியைவிட்டு) மற்றொரு கதியை(பிறவியை) அடையும்போது கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு மேல் கீழ் ஆகிய இவ்வழிகளிலேயே செல்லும்; நான்கு மூலைகளின் வழியாகச் செல்லாது. ஓர் ஆத்மாவானது ஒரு மூலையில் பிறக்கவேண்டியதாயினும் நேராகச்சென்றுதான் அந்த மூலையில் பிறக்கும். அதாவது, மத்தியில் இருக்கும் ஒரு ஜீவன் வாயுமூலைக்கு அருகில் பிறக்க வேண்டியதாயின் மத்தியிலிருந்து அவ்விடத்திற்கு நேராகச் செல்லாமல் மத்தியிலிருந்து வடக்குத் திக்கிற்குச் சென்று அங்கிருந்து பிறக்க வேண்டிய இடமாகிய வாயுமூலையின் அருகிற்குச் சென்று பிறக்கும். அதனால்தான் ஸம்ஸாரிஜீவன்கள் மறுபிறவியை யடைவதற்கு ஒன்று அல்லது இரண்டு மூன்று ஸமயங்கள் ஆகின்றன.

ஜீவதத்த்வவர்ணனை முற்றும்.

ஷட் த்ரவ்யங்கள்

அஜீவதத்த்வவர்ணனை

15. *अज्जीवो पुण णेओ पुग्गल धम्मो अधम्म आयासं ।
कालो पुग्गलमुत्तो रूवादिगुणो अमुत्ति सेसा दु ॥ १५ ॥

𑌅𑌜𑍍𑌜𑍀𑌵𑍋 𑌪𑍁𑌣 𑌣𑍇𑌓 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲 𑌧𑌮𑍍𑌮𑍋 𑌅𑌧𑌮𑍍𑌮 𑌆𑌯𑌾𑌸𑌂।
𑌕𑌾𑌲𑍋 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲 𑌮𑍁𑌤𑍍𑌤𑍋 𑌰𑍂𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍋 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿
𑌸𑍇𑌸𑌾 𑌦𑍁 ॥ ௧௫ ॥

(ப - ரை.) पुग्गल 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲 - புத்கலத்ரவ்யம், धम्मो 𑌧𑌮𑍍𑌮𑍋 - தர்மத்ரவ்யம், अधम्म 𑌅𑌧𑌮𑍍𑌮 - அதர்மத்ரவ்யம், आयासं 𑌆𑌯𑌾𑌸𑌂 - ஆகாஶத்ரவ்யம், कालो 𑌕𑌾𑌲𑍋 - காலத்ரவ்யம் ஆகிய இவை (ஐந்தும்), अज्जीवो 𑌅𑌜𑍍𑌜𑍀𑌵𑍋 - அஜீவத்ரவ்யங்கள் என்று, णेओ 𑌣𑍇𑌓 - அறியத்தகுந்தது, पुण 𑌪𑍁𑌣 - மற்றும், पुग्गल 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲 - புத்கலத்ரவ்யமானது, रूवादिगुणो 𑌰𑍂𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍋 - ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்ஶம் ஆகிய இவைகளையுடைய, मुत्तो 𑌮𑍁𑌤𑍍𑌤𑍋 - மூர்த்த த்ரவ்ய மென்று அதாவது ஐம்பொறிகட்குத் தோன்றக் கூடிய த்ரவ்ய மென்று, णेओ 𑌣𑍇𑌓 - அறியத்தகுந்தது, दु 𑌦𑍁 - பின்னும், सेसा 𑌸𑍇𑌸𑌾 - ஏனைய த்ரவ்யங்கள், अमुत्ति 𑌅𑌮𑍁𑌤𑍍𑌤𑌿 - அமூர்த்தத்ரவ்யங்கள் என்று அதாவது ஐம்பொறிகட்குத் தோன்றுதலில்லாத த்ரவ்யங்கள் என்று, णेओ 𑌣𑍇𑌓 - அறியத்தகுந்தது.

---

* अजीवः पुनर्ज्ञेयः पुद्गलो धर्मोऽधर्म आकाशम् ।
कालः पुद्गलो मूर्तः रूपादिगुणो मूर्तयः शेषास्तु ॥

𑌅𑌜𑍀𑌵𑌃 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌧𑌰𑍍𑌮 𑌆𑌕𑌾𑌶𑌮𑍍 । 𑌕𑌾𑌲𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑍋 𑌮𑍂𑌰𑍍𑌤𑌃 𑌰𑍂𑌪𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍋 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍁 ॥


द्रव्य
जीव
अजीव
संसारी
मुक्त
पुद्गल
धर्म
अधर्म
आकाश
काल
त्रस
स्थावर
लोक
अलोक
व्यवहार
निश्चय
द्वीन्द्रिय
त्रीन्द्रिय
चतुरिन्द्रिय
पंचेन्द्रिय
पृथ्वी
अप्
तेज
वायु
वनस्पति
विकलेन्द्रिय
समनस्क
अमनस्क

கருத்துரை:--புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாஶம், காலம் ஆகிய இவை ஐந்தும் அஜீவத்ரவ்யமாகும். அவற்றுள் புத்கலம் மூர்த்தத்ரவ்ய மாகும். ஏனையவை அமூர்த்தத்ரவ்யங்கள் ஆகும்.

மூர்த்தத்ரவ்யம் :—வண்ணம், சுவை, கந்தம், ஸ்பர்ஶம் ஆகிய இவைகளையுடையதாகி ஐம்பொறிகட்குத் தோன்றும் பொருள்.

அமூர்த்தத்ரவ்யம் :—ஐம்பொறிகட்குத் தோன்றுதலில்லாத பொருள். (15)

புத்கலத்ரவ்யத்தின் பர்யாயங்கள்

16. *सद्दो बंधो सुहुमो थूलो संठाण भेद तमछाया ।
उज्जोदादवसहिया पुग्गलदव्वस्स पज्जाया ॥ १६ ॥

ஸத்³தோ³ ப³ம்தோ⁴ ஸுஹுமோ தூ²லோ ஸம்டா²ண பே⁴த³ தமச்சா²யா । உஜ்ஜோதா³த³வஸஹியா புக்³க³லத³வ்வஸ்ஸ பஜ்ஜாயா ॥ 16 ॥

(ப - ரை.) सद्दो ஸத்³தோ³ - ஶப்தம், बंधो ப³ம்தோ⁴ - பந்தம், सुहुमो ஸுஹுமோ - ஸூக்ஷ்மம், थूलो தூ²லோ - ஸ்தூலம், संठाण ஸம்டா²ண - ஸம்ஸ்தானம் (உருவம்), भेद பே⁴த³ - பேதம், तम தம - இருள், छाया சா²யா - நிழல்;

---

* शब्दो बन्धः सूक्ष्मः स्थूलः संस्थान भेद तमश्छाया ।
उद्योतातपसहिताः पुद्गलद्रव्यस्य पर्यायाः ॥

ஶப்³தோ³ ப³ந்த⁴: ஸூக்ஷ்ம: ஸ்தூ²ல: ஸம்ஸ்தா²ந பே⁴த³ தமஶ்சா²யா । உத்³யோதாதபஸஹிதா: புத்³க³லத்³ரவ்யஸ்ய பர்யாயா: ॥

उज्जोद உஜ்ஜோத - வெளிச்சம், आदव ஆதவ - வெய்யில்; सहिया ஸஹியா - ஆகிய இவை, पुग्गलदव्वस्स புக்கலதவ்வஸ்ஸ - புத்கலத்ரவ்யத்தினுடைய, पज्जाया பஜ்ஜாயா - பர்யாயங்கள்.

கருத்துரை:—ஶப்தம், பந்தம், ஸூக்ஷ்மம், ஸ்தூலம், ஸம்ஸ்தானம் (உருவம்), பேதம், நிழல், வெளிச்சம், வெய்யில் ஆகிய இவைகள் புத்கலத்ரவ்யத்தின் மாறுதல்களாகும்.

குறிப்பு :—ஶப்தம் முதலானவற்றைத் தத்த்வார்த்த ஸூத்ரம் தமிழுரையில் (பக். 136) விரிவாகக் காண்க. (16)

தர்மத்ரவ்யத்தின் வர்ணனை

17. *गइपरिणयाण धम्मो पुग्गलजीवाण गमणसहयारी ।
तोयं जह मच्छाणं अच्छंता णेव सो णेई ॥ १७ ॥

கஇபரிணயாண தம்மோ புக்கலஜீவாண கமண ஸஹயாரீ । தோயம் ஜஹ மச்சாணம் அச்சம்தா ணேவ ஸோ ணேஈ ॥ ௧௭ ॥

(ப - ரை.) गइपरिणयाण கஇபரிணயாண - கமனம் செய்வதில் முயற்சியையுடைய (நீந்துந் தன்மையினை யுடைய), मच्छाणं மச்சாணம் - மீன்கட்கு, तोयं தோயம் -

---

* गतिपरिणतानां धर्मः पुद्गलजीवानां गमनसहकारी ।
तोयं यथा मत्स्यानां अगच्छतां नैव स नयति ॥

கதிபரிணதாநாம் தர்ம: புத்கலஜீவாநாம் கமந ஸஹகாரீ । தோயம் யதா மத்ஸ்யாநாம் அகச்சதாம் நைவ ஸ நயதி ॥

நீர், जह ஜஹ - எவ்விதம், गमणसहयारी மணஸஹயாரீ - கமனம்செய்வதற்கு (நீந்துதற்கு) ஸஹாயம் (உதவி) செய்கின்றதோ, तह தஹ - அவ்விதம், गइपरिणयाण மஇ பரிணயாண - கமனம் செய்வதில் முயற்சியையுடைய (ஓர் இடம் விட்டு மற்றோர் இடம் செல்லுந் தன்மையினை யுடைய அல்லது செல்லுகின்ற), पुग्गलजीवाण புமலஜீவாண - புத்கலம் ஜீவன் ஆகிய இவைகட்கு, धम्मो தம்மோ - தர்மத்ரவ்யமானது, गमणसहयारी மணஸஹயாரீ - கமனம்செய்வதற்கு (செல்லுவதற்கு) உதவி புரியும், अच्छंता அச்சம்தா - இடம் விட்டுச் செல்லாமலிருக்கின்ற, पुग्गल जीवाण புமல ஜீவாண - புத்கலத்ரவ்யத்தையும் ஜீவத்ரவ்யத்தையும், णेवणेइ ணேவணேஇ - செல்லும்படி செய்வதில்லை.

கருத்துரை:—நீரினுள் மீன் நீந்தும்போது தண்ணீரானது மீன் நீந்துதற்கு உதவி புரிதல்போல ஓர் இடம் விட்டு மற்றோரிடம் செல்லுந் தன்மையினையுடைய புத்கலமும் ஜீவனும் செல்லும்போது செல்வதற்குத் தர்ம த்ரவ்யம் உதவி செய்யும். மீன் நீந்தாமல் ஓரிடத்தில் இருப்பின் அதனை நீந்தவேண்டும் என்று தண்ணீர் வற்புறுத்துவதில்லை (தூண்டுதல் செய்வதில்லை); மீன் தானுக் நீந்தினால் அச்சமயம் நீர் உதவி புரிகின்றது. அதுபோல, செல்லாமல் ஓரிடத்தில் இருக்கும் ஜீவனையும் புத்கலத்தினையும் 'செல்' என்று தர்மத்ரவ்யமானது பலாத்காரம் செய்வதில்லை. அவை இயற்கையாகச் சென்றால் அவ்வமயம் உதவி புரியும்.

குறிப்பு:—நாம் நடப்பது தர்மத்ரவ்யத்தின் உதவியாலாகும்.

அதர்மத்ரவ்யத்தின் வர்ணனை

18. *ठाणजुदाण अधम्मो पुग्गलजीवाण ठाणसहयारी ।
छाया जह पहियाणं गच्छंता णेव सो धरई ॥ १८ ॥

𑌠𑌾𑌣𑌜𑍁𑌦𑌾𑌣 𑌅𑌧𑌮𑍍𑌮𑍋 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌜𑍀𑌵𑌾𑌣 𑌠𑌾𑌣𑌸𑌹𑌯𑌾𑌰𑍀 । 𑌛𑌾𑌯𑌾 𑌜𑌹 𑌪𑌹𑌿𑌯𑌾𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛𑌂𑌤𑌾 𑌣𑍇𑌵 𑌸𑍋 𑌧𑌰𑌈 ॥ ௧௮ ॥

(ப - ரை.) छाया 𑌛𑌾𑌯𑌾 - மரத்தின் நிழல், ठाणजुदाण 𑌠𑌾𑌣𑌜𑍁𑌦𑌾𑌣 (நிழலில் வந்து) தங்கும், पहियाणं 𑌪𑌹𑌿𑌯𑌾𑌣𑌂 - வழிப்போக்கர்கட்கு, जह 𑌜𑌹 - எவ்விதம், ठाणसहयारी 𑌠𑌾𑌣𑌸𑌹𑌯𑌾𑌰𑍀 - நிற்பதற்கு உதவி செய்கிறதோ, तह 𑌤𑌹 - அவ்விதமாக, ठाणजुदाण 𑌠𑌾𑌣𑌜𑍁𑌦𑌾𑌣 - ஓரிடத்தில் தங்குந் தன்மையினையுடைய, पुग्गलजीवाण 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌜𑍀𑌵𑌾𑌣 - புத்கலத்ரவ்யத்திற்கும் ஜீவனுக்கும், अधम्मो 𑌅𑌧𑌮𑍍𑌮𑍋 - அதர்மத்ரவ்யமானது, ठाणसहयारी 𑌠𑌾𑌣𑌸𑌹𑌯𑌾𑌰𑍀 - தங்குவதற்கு (நிற்பதற்கு) உதவி செய்யும், सो 𑌸𑍋 - அந்த அதர்மத்ரவ்யம், गच्छंता 𑌗𑌚𑍍𑌛𑌂𑌤𑌾 - சென்றுகொண்டிருக்கும், पुग्गलजीवाण 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌜𑍀𑌵𑌾𑌣 - புத்கலத்தினையும் ஜீவனையும், णेव धरई 𑌣𑍇𑌵 𑌧𑌰𑌈 - தடைசெய்து நிற்கவைப்பதில்லை.

---

* स्थानयुतानामधर्मः पुद्गलजीवानां स्थानसहकारी ।
छाया यथा पथिकानां गच्छतां नैव स धरति ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌯𑍁𑌤𑌾𑌨𑌾𑌮𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌜𑍀𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑌹𑌕𑌾𑌰𑍀 । 𑌛𑌾𑌯𑌾 𑌯𑌥𑌾 𑌪𑌥𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌾𑌂 𑌨𑍈𑌵 𑌸 𑌧𑌰𑌤𑌿 ॥

கருத்துரை :—கோடைக்காலத்தின் வெய்யிலில் பிரயாணஞ் செய்பவர்கள் தங்குவதற்கு மரம் நிழலை உதவும். ஆனால், மரத்தின் அடியில் வந்து உட்காரா மல் சென்றுகொண்டிருக்கும் பிரயாணிகளை மரம் 'வா' என்று கூவி அழைத்து உட்கார வைப்பதில்லை; உட்காரு கின்றவர்கட்குமாத்திரம் நிழலைத் தருகின்றது. அதுபோல, அதர்மத்ரவ்யம் ஓரிடத்தில் (நிற்கும்) தங்கும் ஜீவ புத் கலங்கள் தங்குவதற்கு(நிற்பதற்கு) உதவி புரியும். ஓரிடத் தில் தங்காமல் (நிற்காமல்) சென்றுகொண்டிருக்கும் ஜீவ புத்கலங்களைப் பலாத்காரம் செய்து தங்க (நிற்க)ச் செய்வ தில்லை.

குறிப்பு:—நாம் நிற்பதும் உட்காருவதும் அதர்மத்ரவ்யத் தின் உதவியாலாகும். அதர்மத்ரவ்யம் உலகில் இல்லாமலிருப்பின், புத்கல அணுக்கள் ஒன்று கூடுதலால் ஆகும் உடல்முதலியன அமையா.

ஆகாஶத்ரவ்யத்தின் வர்ணனை

19. *अवगासदाणजोग्गं जीवादीणं वियाण आयासं ।
जेण्हं लोयायासं अलोयायासमिदि दुविहं ॥ १९ ॥

அவகாஸதாணஜோக்கம் ஜீவாதீணம் வியாண ஆயாஸம் ।
ஜேண்ஹம் லோயாயாஸம் அலோயாயாஸமிதி துவிஹம் ॥

(ப - ரை.) जीवादीणं ஜீவாதீணம் - ஜீவன் முதலான எல்லாத்ரவ்யங்கட்கும், अवगासदाणजोग्गं அவகாஸதாண

---

* अवकाशदानयोग्यं जीवादीनां विजानीह्याकाशम् ।
जैनं लोकाकाशं अलोकाकाशमिति द्विविधम् ॥

அவகாஶதானயோக்யம் ஜீவாதீநாம் விஜாநீஹ்யாகாஶம் ।
ஜைநம் லோகாகாஶம் அலோகாகாஶமிதி த்விவிதம் ॥

ஜோக்³க³ம் - இடந்தரத் தக்கதும், जेण्हं ஜேண்ஹம் - ஸ்ரீஜிந பகவானால் கூறப்பட்டதும் (ஆகிய இடத்தினை), आयासं ஆயாஸம் - ஆகாஶம் என்று, वियाण வியாண - அறிக. (அந்த ஆகாஶமானது), लोयायासं லோயாயாஸம் - லோகாகாஶம் என்றும், अलोयायासं அலோயாயாஸம் - அலோகாகாஶம் என்றும், दुविहं து³விஹம் - இருவகையாகும்.

கருத்துரை :—ஜீவத்ரவ்யம் புத்கலத்ரவ்யம் தர்ம த்ரவ்யம் அதர்மத்ரவ்யம் காலத்ரவ்யம் ஆகிய இவை ஐந்தும் இருப்பதற்கு இடந்தருவது ஆகாஶத்ரவ்யமாகும்.

ஆகாஶத்ரவ்யம் இருவகை. அவை — லோகாகாஶம் அலோகாகாஶம் என்பன. அவற்றுள்—

லோகாகாஶம் :—"ஷட்³த்³ரவ்யவ்ருத்திர்லோக:" ஆறு த்ரவயங்களும் நிரம்பிய இடம்.

पुण्यपापयोः कर्म्मणोः फलं सुखदुःखलक्षणं यत्रालोक्यते स लोकः ॥
लोक्यन्ते दृश्यन्ते जीवादिपदार्था यत्र स लोकः ॥

இவற்றாலும் லோகம் என்பது இது வென அறியப்படும்.

அலோகாகாஶம் :—ஆகாஶத்ரவ்யம் ஒன்றுமாத்திரம் உள்ள இடம். அது லோகாகாஶத்தின் புறம்பில் உளதாகும். (19)

லோகாகாஶத்தின் லக்ஷணம்

20. *धम्माधम्मा कालो पुग्गलजीवा य संति जावदिये ।
आयासे सो लोगो तत्तो परदो अलोगुत्तो ॥ २० ॥

த⁴ம்மாத⁴ம்மா காலோ புக்³க³லஜீவா ய ஸந்தி ஜாவதி³யே ।
ஆயாஸே ஸோ லோகோ³ தத்தோ பரதோ³ அலோகு³த்தோ ॥ ௨௦ ॥

---

* धर्माधर्मौ कालः पुद्गलजीवाश्च सन्ति यावति ।
आकाशे स लोकः ततः परत अलोक उक्तः ॥

த⁴ர்மாத⁴ர்மௌ கால: புத்³க³லஜீவாஶ்ச ஸந்தி யாவதி ।
ஆகாஶே ஸ லோக: தத: பரத அலோக உக்த: ॥

லோக ஸ்ருபம்


ஸித்த ஶிலா
ஊர்த்வ லோகம்
பதினாறு ஸ்வர்க்கம் முதலியன
அலோகாகாசம்
மத்ய லோகம்
மேரு
நர லோகம்
நாம் வசிக்குமிடம்
அலோகாகாசம்
அதோ லோகம்
ஏழு நரகம்
நிகோதம்
கநோததிவாதவலயம்
கநவாதவலயம்
தநுவாதவலயம்

(ப - ரை.) आयासे ஆயாஸே - ஆகாஸத்தினுள், जावदिये ஜாவதி³யே - எதுவரைக்கும், धम्माधम्मा த⁴ம்மாத⁴ம்மா - தர்மத்ரவ்யம் அதர்மத்ரவ்யம், कालो காலோ - காலத்ரவ்யம், पुग्गल जीवा புக்³க³ல ஜீவா - புத்கலத்ரவ்யம் ஜீவத்ரவ்யம் ஆகிய இவை உள்ளனவோ, सो ஸோ - அது (அவ்விடம்), लोगो லோகோ³ - லோகாகாஸமாகும், तत्तोपरदो தத்தோபரதோ³ - அதற்குப் புறம்பில், अलोग அலோக³ - அலோகாகாஸமாகும் என்று, उत्तो உத்தோ - கூறப்பட்டது.

கருத்துரை :—ஜீவன் முதலான த்ரவ்யங்கள் ஆறும் இருக்கும் இடம் லோகம் அல்லது லோகாகாஸம் எனப்படும். ஆகாஸத்ரவ்யம் ஒன்றுமாத்திரம் உள்ள இடம் அலோகம் அல்லது அலோகாகாஸம் எனப்படும். (20)

21. *दव्वपरिवट्टरूवो जो सो कालो हवेइ ववहारो ।
परिणामादिलक्खो वट्टणलक्खो य परमट्ठो ॥ २१ ॥

த³வ்வபரிவட்டரூவோ ஜோ ஸோ காலோ ஹவேஇ வவஹாரோ । பரிணாமாதி³லக்கோ² வட்டணலக்கோ² ய பரமட்டோ² ॥ ௨௧ ॥

(ப - ரை.) जो ஜோ - எது, दव्वपरिवट्टरूवो த³வ்வபரிவட்டரூவோ - த்ரவ்யபரிவர்த்தன ஸ்வரூபமாக இருக்

---

* द्रव्यपरिवर्तनरूपः यः स कालो भवेद् व्यवहारः ।
परिणामादिलक्ष्यः वर्तना लक्षणश्च परमार्थः ॥

த்³ரவ்யபரிவர்தநரூப: ய: ஸ காலோ ப⁴வேத்³ வ்யவஹார: । பரிணாமாதி³லக்ஷ்ய: வர்தநா லக்ஷணஸ்ச பரமார்த²: ॥

கிறதோ, सो ஸொ - அது, परिणामादिलक्खो பரிணாமாதி லக்கோ - பரிணமம், க்ரியா, பரத்வாபரத்வம் ஆகிய இவைகளால் அறிதற்கு யோக்யமான, ववहारो कालो வவஹாரோ காலோ - வ்யவஹார காலமாக, हवेइ ஹவேஇ - ஆகும், य ய - மற்றும், वट्टणलक्खो வட்டணலக்கோ - வர்த்தனு லக்ஷணம் உள்ளது, परमट्ठो பரமட்டோ - நிஸ்சய காலமாக, हवेइ ஹவேஇ - ஆகும்.

கருத்துரை:—காலத்ரவ்யம் (காலம்) இருவகை. அவை— வ்யவஹாரகாலம் நிஸ்சயகாலம் என்பன. அவற்றுள்—

வ்யவஹார காலம் :—ஸமயம், நாழிகை, முஹூர்த்தம், இரவு, பகல், பக்ஷம், மாஸம், அயனம் வருஷம் முதலான பிரிவினை யுடையது.

பரிணமம், க்ரியை, பரத்வாபரத்வம் ஆகிய இவைகளால் வ்யவஹாரகாலத்தினை யறியலாம்.

பரிணமம் :—ஜீவத்ரவ்யம் புத்கலத்ரவ்யம் இவைகளுள் உண்டாகும் மாறுதல்.

க்ரியா :—பால் கறத்தல், சமையல் செய்தல், நடத்தல் முதலியன. பால்கறத்தல் முதலியவைகளால் வ்யவஹார காலத்தினை எப்படி அறிய முடியும் என்றால், 'நான் பால் கறப்பதற்குள் போய் வருவேன்', 'சமையல் செய்வதற்குள் போய் வந்துவிடுவேன்' என்று கூறப்படுவதனுலும், ஒரு காத வழி தூரத்திலிருக்குங் கிராமத்தினை 'மூன்று மணி நேரத்திற்குள் நடக்கலாம்' என்று குறிப்பிடுவதனுலும் அறியப்படும் என்பது.

பரத்வாபரத்வம் :— இது பெரியது இதனைக்காட்டிலும் அது சிறியது; இது நூதனமானது இதனினும் அது பழையது என்று கூறுவது.

நிஸ்சய காலம்:— குயவனுடைய சக்ரம் சுற்றுவதற்குச் சக்ரத்தின் அடியில் இருக்கும் கல் காரணமாய் இருத்தல் போல ஜீவத்ரவ்யமும் புத்கலத்ரவ்யமும் இயற்கையாக (வளர்தல்) உயர்தல் தாழ்தல் மாறுதல் ஆகிய இத் தன்மையினை யடையும்போது அச்சமயத்தில் அவைகள் அவ்வத்தன்மையினை அடைதற்கு (அவைகட்கு) ஸஹாயம் செய்யுந் த்ரவ்யம்.

குயவனுடைய சக்ரம் சுற்றுவதற்குச் சக்ரத்தின் கீழ் இருக்கும் கல் உதவியாதல் போலவும், குளிர்காலத்தில் ஓதுபவர்களுக்கு அக்னி ஸஹாயமாக இருத்தல்போலவும் தாமாகவே மாறுதல் அடையும் ஜீவன் முதலான த்ரவ்யங்களின் மாறுதலுக்கு ஸஹாயமாக இருத்தலே "வர்த்தனை" எனப்படும். அந்த வர்த்தனையினை லக்ஷணமாகவுடையது நிஸ்சயகாலமாகும்.

நெருப்பு, நீர், விறகு முதலான ஸஹகாரிநிமித்த காரணத்தினால் உண்டாகும் அன்னமாகிற பர்யாயத்திற்கு உபாதான காரணம் அரிசியைப்போலவும், நர நாரக முதலான பர்யாயத்திற்கு உபாதான காரணம் ஜீவனைப்போலவும், ஸமயம் நாழிகை முதலான பர்யாயத்திற்கு உபாதான காரணம் நிஸ்சய காலமாகும். இது அநாதி நிதனமாயும் அமூர்த்தமாயும் உளது. (21)

நிஶ்சயகாலத்தின் அளவு

22. *लोयायासपदेसे इक्केक्के जेठिया हु इक्केक्का ।
रयणाणं रासीव तेकालाणू असंखदव्वाणि ॥ २२ ॥

லோயாயாஸபதேஸே இக்கேக்கே ஜேடியா ஹு இக்கேக்கா । ரயணாணம் ராஸீவ தே காலாணூ அஸம்கதவ்வாணி ॥ ௨௨ ॥

(ப - ரை.) इक्केक्के இக்கேக்கே - ஒவ்வொரு, लोयायास पदेसे லோயாயாஸ பதேஸே - லோகாகாஶ ப்ரதேஶத்தில், रयणाणं ரயணாணம் - ரத்னங்களுடைய (மணிகளுடைய), रासीइव ராஸீஇவ - குவியலைப்போல, इक्केक्का இக்கேக்கா - ஒவ்வொன்றாக (தனித்தனியாக), जे ஜே - எவை, हु ஹு - நிஶ்சயமாக, ठिया டியா - இருக்கின்றனவோ, ते தே - அவ்விதமாகிய, कालाणू காலாணூ - காலாணுக்கள், असंखदव्वाणि அஸம்கதவ்வாணி - அஸங்க்யாத த்ரவ்யங்களாக இருக்கின்றன.

கருத்துரை:—ரத்னங்கள் குவியலாக இருக்கும்போது ஒ ரே ராசியாகத் தோன்றினாலும் ஒன்றோடொன்று சேர்ந்திராமல் தனித்தனியாக இருப்பதுபோல லோகாகாஶத்தின் ஒவ்வொருப்ரதேஶத்திலும்ஒவ்வொருகாலாணுவானது இருக்கும். அப்படிப்பட்ட காலாணுக்கள்

---

* लोकाकाशप्रदेशे एकैकस्मिन् ये स्थिता हि एकैकाः ।
रत्नानां राशिरिव ते कालाणवोऽसङ्ख्यातद्रव्याणि ॥

லோகாகாஶ ப்ரதேஶே ஏகைகஸ்மிந் யே ஸ்தி-தா ஹி ஏகைகா: । ரத்நாநாம் ராஶிரிவ தே காலாண-வோऽஸங்க்யாதத்ரவ்யாணி ॥

அஸங்க்யாதம் (எண்ணிறந்ததாக) இருக்கின்றன. லோகாகாஶத்தில் அஸங்க்யாதப்ரதேஶங்கள் உள்ளன. அவைகளுள் ஒவ்வொருப்ரதேஶத்திலும் ஒவ்வொரு காலாணுவானது இருக்கும். (22)

த்ரவ்யங்களின் பேதம்

23. *एवं छब्भेयमिदं जीवाजीवप्पभेददो दव्वं ।
उत्तं काल विजुत्तं णायव्वा पंच अत्थिकाया दु ॥ २३ ॥

𑌏𑌵𑌂 𑌛𑌬𑍍𑌭𑍇𑌯𑌮𑌿𑌦𑌂 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌪𑍍𑌪𑌭𑍇𑌦𑌦𑍋 𑌦𑌵𑍍𑌵𑌂 ।
𑌉𑌤𑍍𑌤𑌂 𑌕𑌾𑌲 𑌵𑌿𑌜𑍁𑌤𑍍𑌤𑌂 𑌣𑌾𑌯𑌵𑍍𑌵𑌾 𑌪𑌂𑌚 𑌅𑌤𑍍𑌥𑌿𑌕𑌾𑌯𑌾 𑌦𑍁 ॥ ௨௩ ॥

(ப-ரை.) एवं 𑌏𑌵𑌂 - முன்னர்க் கூறப்பட்டபடி, इदं 𑌇𑌦𑌂 - இந்த த்ரவ்யமானது, जीवाजीवप्प भेददो 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌪𑍍𑌪𑌭𑍇𑌦𑌦𑍋 - ஜீவன் அஜீவன் என்னும் பேதத்தினால் ஆறுவிதமாகும் என்று, उत्तं 𑌉𑌤𑍍𑌤𑌂 - கூறப்பட்டது, दु 𑌦𑍁 - மற்றும், कालविजुत्तं 𑌕𑌾𑌲𑌵𑌿𑌜𑍁𑌤𑍍𑌤𑌂 - காலத்ரவ்யத்தினைவிட்டு, पंच 𑌪𑌂𑌚 - ஏனைய ஐந்து த்ரவ்யங்கள், अत्थिकाया 𑌅𑌤𑍍𑌥𑌿𑌕𑌾𑌯𑌾 - அஸ்திகாயங்களாக, णायव्वा 𑌣𑌾𑌯𑌵𑍍𑌵𑌾 - அறியத்தக்கவை.

கருத்துரை :—ஜீவத்ரவ்யமும் அஜீவத்ரவ்யத்தின் பேதமாகிய புத்கலம் தர்மம் அதர்மம் ஆகாஶம்காலம்ஆகிய இவைகளும் சேர்ந்து ஆறு வகையாகும். அவைகளுள் கால த்ரவ்யத்தினைவிட்டு ஏனைய ஐந்தும் அஸ்திகாயங்கள் ஆவன. (23)

---

* एवं षड्भेदमिदं जीवाजीवप्रभेदतो द्रव्यम् ।
उक्तं कालवियुक्तं ज्ञातव्याः पञ्च अस्तिकायास्तु ॥

𑌏𑌵𑌂 𑌷𑌡𑍍𑌭𑍇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌪𑍍𑌰𑌭𑍇𑌦𑌤𑍋 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑍍 ।
𑌉𑌕𑍍𑌤𑌂 𑌕𑌾𑌲𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌅𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 ॥

அஸ்தியினதும் காயத்தினும் லக்ஷணம்

24. *संति जदो तेणेदे अत्थित्ति भणंति जिणवरा जम्हा ।
काया इव बहुदेसा तम्हा कायाय अत्थिकायाय ॥ २४ ॥

𑌸𑌂𑌤𑌿 𑌜𑌦𑍋 𑌤𑍇𑌣𑍇𑌦𑍇 𑌅𑌤𑍍𑌥𑌿𑌤𑍍𑌤𑌿 𑌭𑌣𑌂𑌤𑌿 𑌜𑌿𑌣𑌵𑌰𑌾 𑌜𑌮𑍍𑌹𑌾 । 𑌕𑌾𑌯𑌾 𑌇𑌵 𑌬𑌹𑍁𑌦𑍇𑌸𑌾 𑌤𑌮𑍍𑌹𑌾 𑌕𑌾𑌯𑌾𑌯 𑌅𑌤𑍍𑌥𑌿𑌕𑌾𑌯𑌾𑌯 ॥

(ப-ரை.) जम्हा 𑌜𑌮𑍍𑌹𑌾 - எந்தக் காரணத்தினால், एदे 𑌏𑌦𑍇 - இந்த த்ரவ்யங்கள் (ஜீவன் புத்கலம் தர்மம் அதர்மம் ஆகாசம் ஆகிய இவை) அநாதிகாலமாய் संति 𑌸𑌂𑌤𑌿 - இருக்கின்றனவோ, तेण 𑌤𑍇𑌣 - அந்தக்காரணத்தினால், जिणवरा 𑌜𑌿𑌣𑌵𑌰𑌾 - ஶ்ரேஷ்டர்களாகிய ஸ்ரீ ஜிநேஶ்வரர், अत्थित्ति 𑌅𑌤𑍍𑌥𑌿𑌤𑍍𑌤𑌿 - (அவைகளை, அதாவது ஜீவன் முதலான த்ரவ்யங்களை) அஸ்தி யென்று, भणंति 𑌭𑌣𑌂𑌤𑌿 - கூறுகின்றனர், जम्हा 𑌜𑌮𑍍𑌹𑌾 - எந்தக் காரணத்தினால், कायाइव 𑌕𑌾𑌯𑌾𑌇𑌵 - ஶரீரங்களைப்போல, बहुदेसा 𑌬𑌹𑍁𑌦𑍇𑌸𑌾 - அநேக ப்ரதேசங்கள் உள்ளனவாயிருக்கின்றனவோ, तम्हा 𑌤𑌮𑍍𑌹𑌾 - அக்காரத்தினால், कायाय 𑌕𑌾𑌯𑌾𑌯 - காயங்கள் என்று கூறுகின்றனர், य 𑌯 - மற்றும் (அஸ்தியினையும் காயத்தினையும் கூட்டி) अत्थिकाया 𑌅𑌤𑍍𑌥𑌿𑌕𑌾𑌯𑌾 - அஸ்திகாயங்கள் என்று, भणंति 𑌭𑌣𑌂𑌤𑌿 - கூறுகின்றனர்.

---

* सन्ति यतस्तेनैते अस्तीति भणन्ति जिनवरा यस्मात् ।
काया इव बहुदेशाः तस्मात् कायाश्चास्तिकायाश्च ॥

𑌸𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑍈𑌤𑍇 𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌭𑌣𑌨𑍍𑌤𑌿 𑌜𑌿𑌨𑌵𑌰𑌾 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 । 𑌕𑌾𑌯𑌾 𑌇𑌵 𑌬𑌹𑍁𑌦𑍇𑌶𑌾𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 ॥

கருத்துரை:—ஜீவன் முதலான த்ரவ்யங்கள் அநாதிகாலமாய் இருப்பதனால் அஸ்தியென்றும், பிராணிகளுடைய ஶரீரத்தைப்போல அநேகப்ரதேஶங்களையுடையதாய் இருத்தலால் காயம் என்றும் கூறப்பட்டன. அஸ்தியும் காயமும் உள்ள த்ரவ்யங்கள் அஸ்திகாயங்கள் எனப்படும். காலத்ரவ்யத்தினுள் அஸ்தித்வம்மாத்திரம் உண்டு. அதனிடத்தில் காயத்வம் இன்மையின் அது அஸ்திகாயத்ரவ்யம் ஆகாது. (24)

த்ரவ்யங்களின் ப்ரதேஶம்

25. *होंति असंखा जीवे धम्माधम्मे अणंत आयासे ।
मुत्ते तिविह पदेसा कालस्सेगोण तेण सो काओ ॥ २५॥

ஹோம்தி அஸம்கா ஜீவே தம்மாதம்மே அணம்த ஆயாஸே । முத்தே திவிஹ பதேஸா காலஸ்ஸேகோண தேண ஸோ காஓ ॥ ௨௫ ॥

(ப - ரை.) जीवे ஜீவே - ஜீவத்ரவ்யத்திலும், धम्माधम्मे தம்மாதம்மே - தர்மத்ரவ்யத்திலும் அதர்மத்ரவ்யத்திலும், असंखा அஸம்கா - அஸங்க்யாதம், पदेसा பதேஸா - ப்ரதேஶங்கள், होंति ஹோம்தி - இருக்கின்றன, आयासे ஆயாஸே - ஆகாஶத்ரவ்யத்தினுள், अणंता அணம்தா - அநந்தம், पदेसा பதேஸா-ப்ரதேஶங்கள், होंति ஹோம்தி -

---

* भवन्त्यसंख्या जीवे धर्माधर्मयोरनन्ता आकाशे ।
मूर्ते त्रिविधाः प्रदेशाः कालस्यैको न तेन स कायः ॥

பவந்த்யஸம்க்யா ஜீவே தர்மாதர்மயோரநந்தா ஆகாஶே । மூர்தே த்ரிவிதா: ப்ரதேஶா: காலஸ்யைகோ ந தேந ஸ காய: ॥

இருக்கின்றன, मुत्ते முத்தே - மூர்த்தத்ரவ்யமாகிய புத்கலத்தினுள், तिविह திவிஹ - மூன்று வகை ப்ரதேஶங்கள்; அவையாவன ஸங்க்யாதம் அஸங்க்யாதம் அனந்தம் ப்ரதேஶங்கள் இருக்கின்றன, कालस्स காலஸ்ஸ - கால த்ரவ்யத்திற்கு, एगो ஏகோ-ஒரு ப்ரதேஶம் (மாத்திரம்), होदि ஹோதி - உளது, तेण தேண - அதனால், सो ஸோ - அந்த (கால) த்ரவ்யமானது, काओ காஓ - காயமாக, ण ண - ஆகாது.

கருத்துரை :—ஜீவத்ரவ்யம், தர்மத்ரவ்யம், அதர்ம த்ரவ்யம் ஆகிய இவைகளில் அஸங்க்யாதப்ரதேஶங்கள் இருக்கும். ஆகாஶத்ரவ்யத்தில் அனந்தம்ப்ரதேஶங்கள் இருக்கும். புத்கலத்ரவ்யத்தில் ஸங்க்யாதம் அஸங்க்யாதம் அனந்தம் ஆகிய மூவகைப்ரதேஶங்கள் இருக்கும். காலத்ரவ்யத்தில் ஒருப்ரதேஶம்மாத்திரம் இருக்கும். ஆதலால், காலத்ரவ்யம் அஸ்திகாய மாகாது. (25)

26. *एयपदेसोवि अणू णाणाखंधप्पदेसदो होदि।

बहुदेसो उवयारा तेण य काओ भणंति सव्वण्हु ॥ २६ ॥

ஏயபதேஸோவி அணூ ணாணாகம்தப்பதேஸதோ ஹோதி। பஹுதேஸோ உவயாரா தேண ய காஓ பணம்தி ஸவ்வண்ஹு ॥ உசு ॥

(ப - ரை.) अणू அணூ - புத்கலபரமாணுவானது, एयपदेसोवि ஏயபதேஸோவி - ஒருப்ரதேஶத்தினையுடைய

---

* एकप्रदेशोप्यणुः नानास्कन्धप्रदेशतो भवति ।

बहुदेश उपचारात् तेन च कायो भणन्ति सर्वज्ञाः ॥

ஏகப்ரதேஶோப்யணுः நாநாஸ்கந்தப்ரதேஶதோ பவதி। பஹுதேஶ உபசாராத் தேந ச காயோ பணந்தி ஸர்வஜ்ஞாः ॥

தாயினும், णाणाखंधप्पदेसदो ணாணாகந்தப்பதேஸதோ - பல வகையான புத்கலபரமாணுக்கள் கூடி ஸ்கந்தமாகும் அந்த ஸ்கந்தத்தினுள் இருக்கும் அநேகப்ரதேஶங்களை யனுசரித்து, उवयारा உவயாரா - வ்யவஹாரநயத்தினால், बहुदेसो பஹுதேஸோ - பஹுப்ரதேஶங்களையுடையதாக, होदि ஹோதி - ஆகும், तेणय தேணய - அக்காரணத்தினால், सव्वण्हु ஸவ்வண்ஹு - முற்றும் அறிந்தவர்கள் (அதனை), काओ காஓ - காயம் என்று, भणंति பணந்தி - கூறுகின்றனர்.

கருத்துரை :—புத்கலபரமாணுவானது ஒரு ப்ரதேஶமுள்ளதாயினும், அவ்வண்ணம் ஒரு ப்ரதேஶத்தினையுடைய பல அணுக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஸ்கந்தமாகும். அந்த ஸ்கந்தத்தில் அநேக ப்ரதேஶங்கள் இருத்தலால் புத்கலத்திலும் அநேகப்ரதேஶங்கள் இருக்கின்றனவென்று கூறப்படும். (26)

ப்ரதேஶத்தின் லக்ஷணம்

27. *जावदियं आयासं अविभागिपुग्गलाणुवट्ठद्धं ।
तं खु पदेसं जाणे सव्वाणुट्ठाण दाणरिहं ॥ २७ ॥

ஜாவதியம் ஆயாஸம் அவிஹாகிபுக்கலாணுவட்டத்தம் ।
தம் கு பதேஸம் ஜாணே ஸவ்வாணுட்டாணதாணரிஹம் ॥

(ப - ரை.) जावदियंआयासं ஜாவதியம் ஆயாஸம் - ஆகாஶத்தில் எவ்வளவு(தூரம்)வரைக்கும், अविभागिपुग्गलाणु

* यावत्क माकाशं अविभागिपुद्गलाण्ववष्टब्धम् ।
तं खलु प्रदेशं जानीहि सर्वाणुस्थानदानार्हम् ॥

யாவத்க மாகாஶம் அவிபாகிபுத்கலாண்வவஷ்டப்தம் ।
தம் கலு ப்ரதேஶம் ஜாநீஹி ஸர்வாணுஸ்தாநதாநார்ஹம் ॥

वट्ठद् அவிபாகீபுக்கலாணூவட்டம் - மறுபடியும் துண்டு செய்ய முடியாத பரமாணுவானது தங்கியிருக்குமோ, तं தம் - அதனை (அந்த இடத்தை) खु கு - நிச்சயமாக, सव्वाणुट्ठाणदाणरिहं ஸவ்வாணுட்டாணதாணரிஹம் - எல்லாப் பரமாணுக்களும் அடங்குதற்கு இடங்கொடுக்கத் தகுந்ததாகிய, पदेसं பதேஸம் - ப்ரதேஸமென்று, जाणे ஜாணே - அறிக.

கருத்துரை :—மறுபடியும் துண்டு செய்ய முடியாத ஒரு நுண்ணியபுத்கல பரமாணுவானது தங்கும் இடத்தினை ப்ரதேஸம் என்பர்.

இப்படிப்பட்ட ஒரு ப்ரதேசத்தில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட அநேக தீபங்களின் ஒளிகள் (விரோதபாவமின்றி) தடையின்றி ஒன்றோடொன்று சேர்ந்திருத்தல் போல, ஸமஸ்த அணுக்களும் ஸூக்ஷ்மமான ஸ்கந்தங்களும் அடங்கியிருத்தல் கூடும். அடங்கியே இருத்தல் வேண்டு மென்னும் நியமம் இல்லையாயினும் அடங்குந் தன்மை உண்டென்று இதனால் அறியப்படும். (27)

ஸ்ரீ நேமிசந்த்ர ஸித்தாந்ததேவர் இயற்றிய த்ரவ்ய ஸங்க்ரஹத்தினுள் ஷட்த்ரவ்யம் பஞ்சாஸ்திகாயம் இவைகளைக் கூறும் முதல் அதிகாரம் முற்றிற்று.

கேள்விகள்

1. இந்நூற்கு த்ரவ்யஸங்க்ரஹம் என்று பெயர் வைத்ததன் காரணம் கூறுக.

(a) இதைச் செய்தவர் யார்?

(b) இது யாருக்காகச் செய்யப்பட்டது?

2. உபயோகம் என்றால் என்ன? அது யாருக்கு உண்டாகும்? நமக்கு உண்டா, இல்லையா? நாம் பொருள்களின் ஸாமான்யத்தினையும் விசேஷத்தினையும் ஒரே ஸமயத்தில் அறிய முடியுமா?

3. ப்ராணன் எத்தனை வகை? 35 வயதானவருக்கு எத்தனை ப்ராணன் இருக்கும்? இன்று ஜனித்த குழந்தைக்கு எத்தனை ப்ராணன் இருக்கும்?

(a) எறும்புக்குக் கண் இருக்கிறதா, இல்லையா? இன்றேல், அது தூரத்திற்கு எப்படிச் சென்று அவ்விடம் இருக்கும் பொருளை எடுத்துக்கொள்கிறது?

(b) ஆடு, பசு, குதிரை முதலிய ப்ராணிகளுக்கு நாம் அழைப்பதை யறியுந் தன்மை உண்டா, இல்லையா? அப்படி அறியுந்தன்மை யிருக்குமாயின் அதற்குக் காரணம் என்ன?

(c) உடும்பு, ஓணான், சாரைப்பாம்பு முதலிய ப்ராணிகள் பதினான்கு வகை ஜீவஸமாஸத்தினுள் எப்பிரிவினைச் சார்ந்தவை?

(d) மரம், செடி, கொடி, பூண்டு முதலியவற்றிற்கு உயிர் உண்டா, இல்லையா? அவை ஜீவத்ரவ்யத்தைச் சேர்ந்தவையா, அல்லது அஜீவத்ரவ்யத்தைச் சேர்ந்தவையா?

4. அசக்ஷுர்தர்ஶனம் என்றால் என்ன? அதுயார் யாருக்கு உண்டாகும்? நமக்கு உண்டாகுமா? நீர் எப்பொழுதாவது அசக்ஷுர்தர்ஶனத்தினால் பயன் அடைந்ததுண்டா?

(a) தர்ஶனம் என்னும் பதத்திற்குப் பொருள் என்ன?

(b) ஜ்ஞானம் என்பதற்குப் பொருள் கூறுக.

(c) மதிஜ்ஞானம் என்றால் என்ன? சினிமாவின் படத்தைப்பார்த்து அந்தக் கதையின் விவரத்தை அறிதல் எந்த ஜ்ஞான மாகும்?

5. ஆத்மாவை ஐம்பொறிகளின் உதவியினால் அறியமுடியுமா? ஐம்பொறிகளின் உதவியினால் அறியத்தக்க பொருள் (த்ரவ்யம்) எது?

6. ஆறு த்ரவ்யங்களுள் மூர்த்தத்ரவ்யம் எத்தனை? அமூர்த்தத்ரவ்யம் எத்தனை? அமூர்த்தத்ரவ்யம் உண்டென்று எப்படி அறியமுடியும்?

7. கர்மங்கட்குக் கர்த்தா யார்? கர்மங்களின் பயனை அனுபவிப்பது யார்? அமூர்த்தமாகிய ஆத்மாவானது மூர்த்தமாகிய கர்மங்கட்கு எப்படிக் கர்த்தாவாகும்? கர்மங்களின் பயனை ஆத்மா எவ்விதம் அனுபவிக்கும்?

8. யானையின் உடல் முழுதும் பரவியிருந்த ஓர் ஆத்மாவே எறும்பின் உடலில் அடையும் என்றால் எப்படி முடியும்? ஆத்மாவைக் காண முடியுமா? காணமுடியாத போது ஆத்மா இருக்கிற தென்று எப்படி நிரூபிக்க முடியும்?

(a) மாரணாந்திகஸமுத்காதம் என்றால் என்ன?

(b) ஸமுத்காதம் மொத்தம் எத்தனை ? நாம் இப்பொழுது எங்கெந்த ஸமுத்காதத்தை அடையலாம் ? ஸமுத்காதத்தின் பொருள் கூறுக.

9. ஸம்ஸாரிஜீவன் என்று எதைக் கூறுவர். ஸ்தாவரஜீவன் என்பது எது ? ஸ்தாவரஜீவன்களுள் நீங்கள் கண்டதைக் கூறுக. எல்லாஸ்தாவரஜீவன்களையும் உண்டென்று அறிபவர் யார் ? நாம் ஸ்தாவரஜீவன்களைச் சேர்ந்தவர்களா, இல்லையா ? இன்றேல் எந்த ஜீவன்களைச் சேர்ந்தவர் ?

10. ஸம்ஜ்ஞீ, அஸம்ஜ்ஞீ இவைகளின் பொருள் கூறுக. நாம் ஸம்ஜ்ஞியைச் சேர்ந்தவரா, அஸம்ஜ்ஞியைச் சேர்ந்தவரா ?

(a) த்ரவ்யமனம் என்றால் என்ன ?

(b) ஸூக்ஷ்ம பாதர ஏகேந்த்ரிய ஜீவன்களின் இயல் கூறுக.

(c) ஜீவனுடைய லக்ஷணம் என்ன ?

(d) பர்யாப்தி என்றால் என்ன ? பர்யாப்தி எத்தனை வகை ? இந்தப் பர்யாப்தி எப்போது பூர்த்தியடைகிறது ? இன்று ஜனித்த குழந்தை பர்யாப்தியா, அபர்யாப்தியா ?

11. குணஸ்தானம் எத்தனை வகை ? குணஸ்தானம் என்றால் என்ன ? இல்லறத்தார்கட்குக் குணஸ்தானம் உண்டா, இல்லையா ? இருக்குமாயின் எத்தனைவரைக்கும் இருக்கும் ?

12. பந்தம் எத்தனை வகை? பந்தம் என்றால் என்ன? பந்தத்துடன் கூடிய ஆத்மா மறுபிறப்பை அடைய எவ்

வழியாகச் செல்லும்? முக்தாத்மாவானது முக்திஸ்தானத்தை அடைய எவ்வளவு நேரஞ் செல்லும்?

13. அஜீவத்ரவ்யம் எத்தனை வகை? ஜீவத்ரவ்யத்திற்கும் அஜீவத்ரவ்யத்திற்கும் உள்ள வித்யாஸம் என்ன? மேஜை, நாற்காலி, புஸ்தகம் இவை எந்த த்ரவ்யத்தைச் சேர்ந்தவை?

(a) புத்கலத்ரவ்யத்தின் பர்யாயங்கள் எத்தனை? நிழல், வெளிச்சம், நாம் பேசும்பேச்சு, இருள் இவை எந்த த்ரவ்யத்தைச் சேர்ந்தவை?

(b) தர்மத்ரவ்யத்தினால் நமக்கு என்ன ப்யன் உண்டு? மீன் நீந்துதற்குத் துணையாயிருப்பது எது?

(c) எது இல்லாவிட்டால் நாம் நடக்கமுடியாது?

14. அதர்மத்ரவ்யம் என்றால் என்ன? அதர்ம த்ரவ்யம் எங்கேயிருக்கும்? அதை நீங்கள் பார்த்ததுண்டா?

15. ஆகாசத்தை நாம் பார்க்க முடியுமா? ஆகாசம் என்று எதற்குப் பெயர்? லோகம் என்பது எது? நாம் வசிக்குமிடம் லோகமா, அலோகமா? அலோகத்தில் யார் வசிப்பர்?

16. காலம் உண்டென்று நீங்கள் எப்படி அறிவீர்கள்? காலம் என்பது ஒன்று இல்லாவிடில் என்ன தீங்கு நேரிடும்? நிச்சயகாலம் வ்யவஹாரகாலம் இவற்றின் லக்ஷணத்தைக் கூறுக.

17. அஸ்திகாயத்தின் லக்ஷண மென்ன? அஸ்திகாயத்ரவ்யம் எத்தனை? காலத்ரவ்யம் அஸ்திகாயமா? ஆறு த்ரவ்யத்தின் பெயரை வரிசையாகக் கூறுக. ப்ரதேஶம் என்றால் என்ன?

அதிகாரம் 2

ஸப்த தத்த்வம், நவபதார்த்தம் இவைகளின் வர்ணனை

28. *आसव बंधण संवर णिज्जर मोक्खा सपुण्णपावा जे ।
जोवाजीवविसेसा तेवि समासेण पभणामो ॥ २८ ॥

𑌆𑌸𑌵 𑌬𑌂𑌧𑌣 𑌸𑌂𑌵𑌰 𑌣𑌿𑌜𑍍𑌜𑌰 𑌮𑍋𑌕𑍍𑌖𑌾 𑌸𑌪𑍁𑌣𑍍𑌣𑌪𑌾𑌵𑌾 𑌜𑍇। 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌵𑌿𑌸𑍇𑌸𑌾 𑌤𑍇𑌵𑌿 𑌸𑌮𑌾𑌸𑍇𑌣 𑌪𑌭𑌣𑌾𑌮𑍋 ॥ ௨௮ ॥

(ப - ரை.) जीवाजीवविसेसा 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌵𑌿𑌸𑍇𑌸𑌾 - ஜீவன் அஜீவன் இவைகளின் ஸம்பந்தத்தினுல் ஏற்படும், आसव 𑌆𑌸𑌵 - ஆஸ்ரவம், बंधण 𑌬𑌂𑌧𑌣-பந்தம், संवर 𑌸𑌂𑌵𑌰 - ஸம்வரம், निर्जरा 𑌨𑌿𑌜𑍍𑌜𑌰𑌾 - நிர்ஜ்ஜரை, मोक्खा 𑌮𑍋𑌕𑍍𑌖𑌾 - மோக்ஷம், सपुण्णपावा 𑌸𑌪𑍁𑌣𑍍𑌣𑌪𑌾𑌵𑌾 - புண்யம் பாபம் ஆகிய, जे 𑌜𑍇 - எந்தத் தத்த்வங்கள் உள்ளனவோ, तेवि 𑌤𑍇𑌵𑌿 - அவைகளையும், समासेण 𑌸𑌮𑌾𑌸𑍇𑌣 - சுருக்கமாக, पभणामो 𑌪𑌭𑌣𑌾𑌮𑍋 - கூறுவோம்.

கருத்துரை :—ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரம், நிர்ஜ்ஜரை, மோக்ஷம் ஆகிய இவை ஏழும் ஸப்த தத்த்வம் என்பன. இவைகளுடன் புண்யமும் பாபமும் சேர்ந்து நவ பதார்த்தம் ஆகும். (28)

---

* आस्रव बन्धन संवर निर्जरा मोक्षाः सपुण्यपापा ये ।
जीवाजीवविशेषाः तानपि समासेन प्रभणामः ॥

𑌆𑌸𑍍𑌰𑌵 𑌬𑌨𑍍𑌧𑌨 𑌸𑌂𑌵𑌰 𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌃 𑌸𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇। 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌃 𑌤𑌾𑌨𑌪𑌿 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌪𑍍𑌰𑌭𑌣𑌾𑌮𑌃 ॥

ஆஸ்ரவம்

29. *आसवदि जेण कम्मं परिणामेणप्पणो स विण्णेओ ।
भावासवो जिणुत्तो कम्मासवणं परो होदि ॥ २९ ॥

ஆஸவதி ஜேண கம்மம் பரிணாமேணப்பணோ ஸ விண்ணெஓ। பாவாஸவோ ஜிணுத்தோ கம்மாஸவணம் பரோ ஹோதி ॥ ௨௯ ॥

(ப - ரை.) अप्पणो அப்பணோ - ஸம்ஸாரிஜீவனுடைய (இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஆத்மாவினுடைய,) जेण ஜேண - எந்த, परिणामेण பரிணாமேண - பரிணாமத்தினால் (எண்ணத்தினால்), कम्मं கம்மம் - வினை (கர்மம்), आसवदि ஆஸவதி - வருமோ, स ஸ-அது (அந்த எண்ணமானது), जिणुत्तो ஜிணுத்தோ - ஸ்ரீஜிநபகவானால் கூறப்பட்ட, भावासवो பாவாஸவோ - பாவாஸ்ரவம் என்று, विण्णेया விண்ணெயா - அறியப்படும், कम्मासवणं கம்மாஸவணம் - (ஜ்ஞானாவரணம் முதலான) கர்மங்கள் வருதல், परो பரோ - த்ரவ்யாஸ்ரவமாக, होदि ஹோதி - ஆகும்.

கருத்துரை :—ஜ்ஞானாவரணம்முதலான கர்மங்கள் ஆத்மாவினிடம் வருவதற்கு ஹேதுவாகிய ராகம் த்வேஷம் முதலான பரிணாமங்கள் பாவாஸ்ரவம் எனப்படும். அந்தப் பரிணாமங்கள் மூலமாகக் கர்மங்கள் ஆத்மாவினிடம் சேருதற்காக வருதல் த்ரவ்யாஸ்ரவம் எனப்படும். (29)

---

* आस्रवति येन कर्म परिणामेनात्मनः स विज्ञेयः ।
भावास्रवो जिनोक्तः कर्मास्रवणं परो भवति ॥

ஆஸ்ரவதி யேந கர்ம பரிணாமேநாத்மந: ஸ விஜ்ஞேய: । பாவாஸ்ரவோ ஜிநோக்த: கர்மாஸ்ரவணம் பரோ பவதி ॥

பாவாஸ்ரவத்தின் பேதம்

30. *मिच्छत्ताविरदिपमादजोगकोहादओऽथ विण्णेया।
पण पण पणदह तिय चदु कमसो भेदादु पुव्वस्स ॥ ३०॥

𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑍍𑌤𑌾𑌵𑌿𑌰𑌦𑌿𑌪𑌮𑌾𑌦𑌜𑍋𑌗𑌕𑍋𑌹𑌾𑌦𑌓𑌽𑌥 விண்ணெயா।
𑌪𑌣 𑌪𑌣 𑌪𑌣𑌦𑌹 திய 𑌚𑌦𑍁 𑌕𑌮𑌸𑍋 𑌭𑍇𑌦𑌾𑌦𑍁 𑌪𑍁𑌵𑍍𑌵𑌸𑍍𑌸 ॥ ௩௰ ॥

(ப - ரை.) अथ 𑌅𑌥 - அனந்தரம், पुव्वस्स 𑌪𑍁𑌵𑍍𑌵𑌸𑍍𑌸 - முதலாவதாகிய பாவாஸ்ரவத்தின், भेदादु 𑌭𑍇𑌦𑌾𑌦𑍁—பேதங்களோவெனில், मिच्छत्त 𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑍍𑌤 - மித்யாத்வம், अविरदि 𑌅𑌵𑌿𑌰𑌦𑌿 - அவிரதம், पमाद 𑌪𑌮𑌾𑌦 - ப்ரமாதம், जोग 𑌜𑍋𑌗 - யோகம், कोहादओ 𑌕𑍋𑌹𑌾𑌦𑌓 - க்ரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவை, कमसो 𑌕𑌮𑌸𑍋 - முறையே, पण 𑌪𑌣-ஐந்து, पण 𑌪𑌣-ஐந்து, पणदह 𑌪𑌣𑌦𑌹-பதினைந்து, तिय திய - மூன்று, चदु 𑌚𑌦𑍁 - நான்கு பேதங்களாக, विण्णेया விண்ணெயா - அறியத்தகுந்தவை.

கருத்துரை:—ஐந்துவகை மித்யாத்வம், ஐந்துவகை அவிரதம், பதினைந்து வகை ப்ரமாதம், மூன்றுவகை யோகம், நான்குவகை கஷாயம் ஆகிய முப்பத்திரண்டு வகையும் பாவாஸ்ரவத்தின் பேதமாகும். (மித்யாத்வம் முதலானவைகளினால் பாவாஸ்ரவமாகும்).

---

* मिथ्यात्वाविरतिप्रमादयोगक्रोधादयोऽथ विज्ञेयाः।
पञ्च पञ्च पञ्चदश त्रयश्चत्वारः क्रमशो भेदास्तु पूर्वस्य ॥

𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌯𑍋𑌗𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑌯𑍋𑌽𑌥 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 । 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 𑌤𑍍𑌰𑌯𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌃 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋 𑌭𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 ॥

மித்யாத்வம் ஐந்துவகை. அவை — ஏகாந்தம், விபரீதம், விநயம், ஸம்ஶயம், அஜ்ஞானம் என்பன. அவற்றுள்—

(1) ஏகாந்த மித்யாத்வம் — ஒன்றனையே நம்புதல். அதாவது — எல்லாப்பொருள்களும் அநித்யமென்று நம்புதல்போல்வது.

(2) விபரீத மித்யாத்வம் — யாகம் செய்தற்காகப் பசுவினைக் கொல்லுதல் தோஷமில்லையென்றும், ஸந்தான விருத்தியினைக்குறித்துப் பிறர்மனையாளைச் சேர்தல் பாபச்செயல் அன்றென்றும், ஆடை அணிந்துள்ளாரை நிர்க்ரந்தர் என்றும், கேவலியாகிய அர்ஹத்பகவானும் நாம்உண்ணும் உணவை உண்ணுவார் என்றும், பெண்களுக்கு அந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் உண்டென்றும் நம்புதல்.

(3) விநய மித்யாத்வம் — தேவர்களின் (கடவுளின்) தன்மையினை அறியாமல் எல்லாத்தேவர்களிடத்தும் ஒரேவிதமாகப் பக்தி செய்தல், கண்டவரையெல்லாம் வந்திப்பதனால் புண்யம் உண்டாகும் என்று வந்தித்தல் முதலியன.

(4) ஸம்ஶய மித்யாத்வம்—தேவர், குரு, ஶாஸ்த்ரம் ஆகிய இவைகளுள் த்ருடமான நம்பிக்கையின்றி ஸந்தேஹப்படுதல். நற்காட்சி நன்ஞான்ம் நல்லொழுக்கம் ஆகிய இவை மோக்ஷமார்க்கம் ஆகுமோ ஆகாதோ என்று ஸந்தேஹப்படுதல்.

(5) அஜ்ஞான மித்யாத்வம்—'இது நல்லது,' 'இது கெட்டது' என்ற பகுத்தறிவு இன்றி, ஸத்குரு, தேவர், ஜ்ஞானம் இவைகளைத் தூஷித்து, குகுரு குதேவர் குஜ்ஞானம் ஆகிய இவைகளே மோக்ஷமார்க்கம் என்று நம்புதல்.

அவிரதம் ஐந்துவகை. அவை—கொலை, பொய், களவு, காமம், பரிக்ரஹம் என்பன.

ப்ரமாதம் பதினைந்து வகை. அவை—

(1) **ஸ்த்ரீகதை** — பெண்களின்மீது காதல் உண்டாகுங் கதையினைக் கேட்டல், படித்தல்.

(2) **ராஜகதை** — கெட்ட அரசர்களின் கதையினையும், சண்டை ஸமாசாரம் முதலியவற்றையும் படித்தல்.

(3) **போஜனகதை** — உணவைப்பற்றிய கதையினை அதாவது ஸதா உணவின்மீது ஆவல் உண்டாகுங் கதையினை வாசித்தல்.

(4) **தேசகதை** — மனத்தைக் கெடுக்கும் தேசக் கதையினைப் படித்தல்; (5) **க்ரோதம்** — கோபங்கொள்ளுதல்; (6) **மானம்**—கர்வப்படுதல்; (7) **மாயை**—வஞ்சனை செய்தல்; (8) **லோபம்** — லோபத்தனமா யிருத்தல்; (9) **ஸ்பர்ஶநம்** — மோஹத்தினால் மிருதுவான பொருள்களைத் தொடுதல்; (10) **ரஸநம்** — ஆத்மாவினை மயக்கச் செய்யுங் கள்ளைக் குடித்தல், சுவையான பானகங் குடித்தல் முதலியன; (11) **கந்தம்** — மணமுள்ள மலர்களையும், அத்தர் புனுகு ஜவ்வாது முதலிய வாசனைத்ரவ்யங்களையும் முகர்தல்; (12) **வர்ணம்**; **ரூபம்** — அழகான உருவங்களை நோக்குதல்; (13) **ஶப்தம்** — விநோதமான பாட்டு முதலியவற்றைக் கேட்டல்; (14) **நித்ரா** — (அளவு மீறி) உறங்குதல்; (15) **ஸ்நேஹம், ப்ரீதி**—கண்ட பொருள்கள்மீது ஆசைப்படுதல் (கெட்டவர்களுடன் நேசித்தல்).

யோகம் மூன்று வகை. அவை: (1) **மனோ யோகம்**—மனததைத் தீய வழியில் செலுத்துதல்; (2) **வசன யோகம்**—கெட்ட வார்த்தை பேசுதல்; (3) **காய யோகம்** — தீய கார்யத்தினைச் செய்தல். (30)


आस्रव
भाव
द्रव्य
मिथ्यात्व ५ + अविरति ५ + प्रमाद १५ + योग ३ + कषाय ४ = ३२
मन२६ वचन२७ काय२८ क्रोध२९ मान३० माया३१ लोभ३२
हिंसा ६ अनृत ७ चौर्य ८ अब्रह्म ९ परिग्रह १०
एकान्त १ विपरीत २ विनय ३ संशय ४ अज्ञान ५ विकथा कषाय इन्द्रिय निद्रा २४ प्रणय २५
राज ११ राष्ट्र १२ स्त्री २३ भोजन २४ स्पर्शन१९ रसन२० घ्राण२१ चक्षु२२ श्रोत्र२३
क्रोध १५ मान १६ माया १७ लोभ १८

த்ரவ்யாஸ்ரவம்

31. *णाणावरणादीणं जोग्गं जं पुग्गलं समासवदि ।
दव्वासवो स णेओ अणेयभेओ जिणक्खादो ॥ ३१ ॥

𑌣𑌾𑌣𑌾𑌵𑌰𑌣𑌾𑌦𑍀𑌣𑌂 𑌜𑍋𑌗𑍍𑌗𑌂 𑌜𑌂 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌂 𑌸𑌮𑌾𑌸𑌵𑌦𑌿। 𑌦𑌵𑍍𑌵𑌾𑌸𑌵𑍋 𑌸 𑌣𑍇𑌓 𑌅𑌣𑍇𑌯𑌭𑍇𑌓 𑌜𑌿𑌣𑌕𑍍𑌖𑌾𑌦𑍋 ॥ ௩௧ ॥

(ப - ரை.) णाणावरणादीणं 𑌣𑌾𑌣𑌾𑌵𑌰𑌣𑌾𑌦𑍀𑌣𑌂 - ஜ்ஞாநாவரணம் முதலான கர்மங்களுக்கு, जोग्गं 𑌜𑍋𑌗𑍍𑌗𑌂 - தகுந்த, जं 𑌜𑌂 - எந்த, पुग्गलं 𑌪𑍁𑌗𑍍𑌗𑌲𑌂 - புத்கலமானது, समासवदि 𑌸𑌮𑌾𑌸𑌵𑌦𑌿 - வருகிறதோ, सो 𑌸𑍋 - அது, अणेयभेओ 𑌅𑌣𑍇𑌯𑌭𑍇𑌓 - அநேகபேதங்களை யுடையதும், जिणक्खादो 𑌜𑌿𑌣𑌕𑍍𑌖𑌾𑌦𑍋 - ஸ்ரீஜிநபகவானால் கூறப்பட்டது மாகிய, दव्वासवो 𑌦𑌵𑍍𑌵𑌾𑌸𑌵𑍋 - த்ரவ்யாஸ்ரவமாக, णेओ 𑌣𑍇𑌓 - அறியத்தகுந்தது.

கருத்துரை:— ஜ்ஞாநாவரணம், தர்ஶநாவரணம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், அந்தராயம் என்னும் கர்மங்களாக (மாறுதற்கு) ஆவதற்கு யோக்யமான புத்கலபரமாணுக்கள் ஆத்மப்ரதேசத்தில் வந்து சேருதல் த்ரவ்யாஸ்ரவம் எனப்படும். (31)

---

* ज्ञानावरणादीनां योग्यं यत्पुद्गलं समास्रवति ।
द्रव्यास्रवः स ज्ञेयः अनेकभेदो जिनाख्यातः ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌰𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌂 𑌸𑌮𑌾𑌸𑍍𑌰𑌵𑌤𑌿 । 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌰𑌵𑌃 𑌸 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌅𑌨𑍇𑌕𑌭𑍇𑌦𑍋 𑌜𑌿𑌨𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 ॥

பந்தம்

32. *बज्झदि कम्मं जेण दु चेदणभावेण भावबंधो सो।
कम्मादपदेसाणं अण्णोण्णपवेसणं इदरो ॥ ३२ ॥

பஜ்ஜ²தி³ கம்மம் ஜேண து³ சேத³ணபா⁴வேண பா⁴வ
ப³ம்தோ⁴ ஸோ। கம்மாத³பதே³ஸாணம் அண்ணோண்ணபவே
ஸணம் இத³ரோ ॥ ௩௨ ॥

(ப - ரை.) जेण ஜேண - எந்த, चेदणभावेण சேத³ண
பா⁴வேண - ஆத்மாவினுடைய பரிணமத்தினால், कम्मं கம்மம்-
கர்மமானது, बज्झदि பஜ்ஜ²தி³ - பந்திக்கப்படுகிறதோ, सो
ஸோ - அது, भावबंधो பா⁴வப³ம்தோ⁴ - பாவபந்தமாகும்,
दु து³ - மற்றும், कम्मादपदेसाणं கம்மாத³பதே³ஸாணம் - கர்ம
ப்ரதேசங்களும் ஆத்மப்ரதேசங்களும், अण्णोण्णपवेसणं
அண்ணோண்ணபவேஸணம் - ஒன்றோடொன்று கூடிக்கொள்
ளுதல், इदरो இத³ரோ - த்ரவ்யபந்தமாகும்.

கருத்துரை :—எந்த எண்ணத்தினால் கர்மம் பந்திக்கப்
படுமோ அந்த எண்ணமானது பாவபந்தமாகும். பாலும்
நீரும் ஒன்றாகக் கலந்து கொள்ளுதல்போல ஆத்மாவும்
கர்மமும் ஒன்றாகக் கூடுதல் த்ரவ்யபந்தமாகும்.

---

* बध्यते कर्म येन तु चेतनाभावेन भावबन्धः सः।
कर्मात्म प्रदेशानां अन्योन्यप्रवेशनं इतरः ॥

ப³த்⁴யதே கர்ம யேந து சேதநாபா⁴வேந
பா⁴வப³ந்த⁴꞉ ஸ꞉। கர்மாத்மப்ரதே³ஶாநாம் அந்யோந்ய
ப்ரவேஶநம் இதர꞉ ॥

பந்தத்தின் வகை

33. *पयडिट्ठिदिअणुभागप्पदेसभेदा दु चदुविधो बंधो ।
जोगा पयडिपदेसा ठिदिअणुभागा कसायदो होंति ॥ ३३ ॥

பயடிட்டிதிஅணுபாகப்பதேஸபேதா து சது
விதோ பந்தோ | ஜோகா பயடிபதேஸா டிதிஅணு
பாகா கஸாயதோ ஹோந்தி || ௩௩ ||

(ப - ரை.) बंधो பந்தோ - பந்தமானது, पयडि........ भेदा பயடி........பேதா - ப்ரக்ருதி ஸ்திதி அநுபாகம் ப்ரதேஶம் ஆகிய இவைகளால், चदुविधो சதுவிதோ - நான்கு வகையாகும், दु து - பின்னை, जोगा ஜோகா - மனம் வசனம் காயம் என்னும் யோகத்தினல், पयडिपदेसा பயடிபதேஸா - ப்ரக்ருதிபந்தமும் ப்ரதேஶபந்தமும், कसायदो கஸாயதோ - (க்ரோதம் மானம் மாயை லோபம் என்னும்) கஷாயத்தினல், ठिदिअणुभागा டிதிஅணுபாகா - ஸ்திதிபந்தமும் அநுபாக பந்தமும், होंति ஹோந்தி - உண்டாகும்.

கருத்துரை :—ஜ்ஞாஞவரணம் முதலான கர்மங்களின் ஸ்வபாவமானது ஆத்மாவினுடன் பந்தித்தல் ப்ரக்ருதி-பந்தம் எனப்படும்.

---

* प्रकृतिस्थित्यनुभागप्रदेशभेदात्तु चतुर्विधो बन्धः ।
योगात्प्रकृतिप्रदेशौ स्थित्यनुभागौ कषायतो भवतः ॥

ப்ரக்ருதிஸ்தித்யநுபாகப்ரதேஶபேதாத்து சதுர்
விதோ பந்த: | யோகாத்ப்ரக்ருதிப்ரதேஶௌ
ஸ்தித்யநுபாகௌ கஷாயதோ பவத: ||

மேகமானது ஸூர்யனுடைய ப்ரகாஶத்தினை மறைத்தல்போல, ஆத்மாவின் ஜ்ஞானகுணத்தினை மறைப்பது, ஜ்ஞானாவரணகர்மத்தின் ப்ரக்ருதி (ஸ்வபாவம்) ஆகும்.

அரசனையோ அல்லது பெரியோரையோ காண்பதற்காகச் செல்லும் ஒரு மனிதனை, வாயிற்காவற்காரன் (த்வாரபாலகன்) உட்செல்லவொட்டாமல் தடுப்பதுபோல, ஆத்மாவின் தர்ஶனகுணத்தினைத் தடுப்பது தர்ஶனாவரணீயகர்மத்தின் ஸ்வபாவமாகும்.

